# கண்ணா உன்னை மறப்பேனா?

## அனுராதா ரமணன்



1

வீட்டுக் கூடத்தில் அந்தப் பெண்ணைப் பார்த்ததுமே முகம் சுருங்கிப்போகிறான், செந்தில்.

அவளோ, இவனைக் கண்டு கொண்டதாகவே காட்டிக் கொள்ளாமல், குழந்தை முகிலனைத் தூக்கிப்போட்டுப் பிடித்து, அவனது இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தமிடுகிறாள்.

"பச்... பச்... என் ராசா... என் செல்லக்குட்டி..."

அவளது ஒவ்வொரு கொஞ்சலுக்கும் முகிலன் 'களுக் களுக்'கெனச் சிரித்துக்கொண்டிருந்தான்.

செந்தில், அவள் பக்கம் திரும்பாமலே நேரே சமையலறைக்குப் போய், தன் தாய் மீனாட்சியிடம் எகிறினான்.

"அம்மா, உனக்கு எத்தனை தரம் சொல்றது... நான் வேலை முடிஞ்சு வர்றப்ப, அந்தப் பொண்ணு நம்ம வீட்டுல இருக்கக்கூடாதுன்னு..."

"நல்லா இருக்குடா, நீ சொல்றது... நாம குடியிருக்கிறது அவங்களுக்குச் சொந்தமான இடத்துல... அதுசரி... அரசி வந்து குழந்தையைப் பார்த்துகிட்டா, எனக்கும் அடுப்பு வேலையை கொஞ்சம் நிம்மதியா பார்க்க முடியுது... ஆச்சு... ஏழு மணிக்கே முகிலனுக்கு சோறு ஊட்டணும்... எட்டு மணிக்கே நீ தட்டைப் போட்டுட்டு உட்கார்ந்திடுவே. நான் என்ன... குமரியா? எழுபது முடிஞ்சு நாலு ஆண்டாச்சுடா... இன்னமும் சோறாக்கி, பிள்ளைக்கு கூழ் காய்ச்சிட்டு கிடக்கேன்... அவ போய் சேர்ந்துட்டா, மகராசி..."

மீனாட்சி எப்பொழுதுமே இப்படித்தான். எளிதில் பேசமாட்டாள். பேச ஆரம்பித்தால் ஓயமாட்டாள்.

செந்தில் ஒருவித அவதியுடன் வெளியே வருகிறான்.

அரசி, முகிலனை முதுகில் ஏற்றி வைத்துக்கொண்டு, யானை சவாரியில் மூழ்கி இருந்தாள்.

"இந்தா, குழந்தையைக் கொஞ்சணும்னா அந்தண்டை எடுத்துட்டுப்போய் கொஞ்சு..."

"ஏனாம்... இவனைக் கொஞ்சினா உங்களுக்கு ஏன் உடம்பு எரியுது... சுத்தப் பொறாமை பிடிச்ச ஆளுப்பா..."

"ஆமா. எனக்கு ரொம்ப பொறாமை. பெரிய ரதி பாரு நீ... உன் முத்தத்துக்காகத்தான் நான் இங்கே ஏங்கிட்டிருக்கேன். இந்தா... ஆபீசிலே வேலை, முதுகு ஒடிஞ்சும் போச்சு. வீட்டுக்கு வந்து, 'அக்கடா'ன்னு படுக்கலாம்னு பார்த்தா– நீ நடுக்கூடத்துல குழந்தையை வச்சிட்டு குரங்கு மாதிரி குதிச்சிட்டிருக்கே..."

செந்தில் பொரிந்தான். அவள், கழுத்தை வெட்டினாள்.

"ஐய்யே... இந்த சிடுமூஞ்சிக்கும் வாழ்க்கைப்பட்டு, எப்படித்தான் உன்னையும் பெத்தாளோ உங்க அம்மா. அதான், 'பொட்'டுனு கண்ணை மூடிட்டா. நீ வாடா முகில். நம்ம வீட்டுக்கே போய் ஊஞ்சலாடுவோம்..."

அவள், முகிலனைத் தூக்கி, 'ணக்'கென இடுப்பில்



வைத்துக்கொண்டு நகர...

முகம் சிவந்து போயிற்று, செந்திலுக்கு.

அது எப்படி, தானும் தன் மனைவியுமாய் வாழ்ந்த வாழ்க்கையை, ஒழுக்கு மாதிரி இருக்கும் பெண் விமர்சிப்பதாவது...

அவன் ஒரே எட்டில் அரசியின் நீண்ட பின்னலை ஒற்றைக் கையால் சுழட்டிப் பிடித்தான்.

"அய்யோ... தலைமுடியையே பிய்ச்சிடுவீங்க போல இருக்கே... எங்கம்மா பார்த்தாங்க... பதறிப்போயிடுவாங்க. செவ்வாயும், வெள்ளியும் எனக்கு எண்ணெய் தேய்ச்சுவிடுறது அவங்களா, இல்லே நீங்களா... அட விடுங்க சொல்றேன்..."

செந்தில் அவள் தலையில் ஓங்கிக் குட்டினான்.

"பிசாசே... என்ன சொன்னே... என் பெண்டாட்டி, என்கிட்ட என்ன பாடுபட்டாளோன்னா சொன்னே... பூ மாதிரி வச்சிட்டிருந்தேன், தெரியுமா... பூலோகத்துல என்னைப் போல ஆம்பிளைங்க கிடைக்கிறது ரொம்ப அதிசயம்..."

அரசி, அவன் ஏமாந்திருந்த தருணத்தில் பின்னலை விடுவித்துக்கொண்டு, எட்டிப்போய் நின்று சிரித்தாள். எதுவும் புரியாமல், முகிலனும் கைகொட்டிச் சிரித்தான்.

"ஆகா... அதான் உங்களைக் கட்டிக்க, வீட்டு வாசலிலே பெரிய வரிசை நிக்குது. செந்தில் சார், உங்களுக்கு ஒரு விசயம் தெரியுமா?"

"என்ன?"

"நம்ம ஊர் மரக்கடை மாணிக்கம் இருக்காரே... அதான், சாயந்திரமாச்சுன்னா அப்பாவோடு உட்கார்ந்து சீட்டு கச்சேரியும், வெத்தலை பாக்குமா ரவுண்டு கட்டி அடிப்பாரே... அவருக்கு வயசு அம்பத்தஞ்சு இருக்குமா? அட, அறுபதே வச்சுக்குங்க... பெண்டாட்டி சீக்குல படுத்துக்கிடந்தப்பகூட ஒருநாள் தவறாம சீட்டாட வருவாரு... ஏன், பெண்டாட்டி செத்த பதினாறாம் நாளு வந்து உட்கார்ந்திருந்தாரு. அவரு, இப்ப ஒரு மாசமா, எங்க வீட்டுப் பக்கம் வர்றதில்லே... தெரியுமா?"

"........."

"ஏன்னு கேட்கமாட்டீங்களா... விடுங்க, நானே சொல்றேன்.

போன மாசம் ரெண்டாம் கல்யாணம் கட்டிட்டாரு. நேத்து கோவிலிலே பார்த்தேன். புதுப்பொண்ணு எப்படி இருக்கா?'ன்னு கேட்டேன். 'அசப்புல பார்த்தா சிம்ரன் மாதிரி இருக்காள்'ன்னு அவர் சொன்னப்ப... அவர்முகத்தைப் பார்த்திருக்கணும் நீங்க. அடடா... அது என்ன வெட்கம்... என்ன சிரிப்பு..."

"சேச்சே... சுத்த மானம்கெட்ட மனுசனா இருப்பார் போல..."

"ரெண்டாந்தாரம் கட்டிக்கிறது மானம்கெட்டத்தனமா? அவரு என்ன, முதல்தாரம் இருக்கிறப்பவேவா, இன்னொருத்தியைக் கட்டிக்கிட்டாரு? அவ செத்துட்டா, இவருக்கு ஒரு துணை வேண்டாமா? வெளிப் பார்வைக்கு ஏகபத்தினி விரதனா வேசம் போட்டுட்டு, காசைக் கொடுத்து எங்கேயாவது போய் நோயை சம்பாதிக்கிறதைவிட, நிரந்தரமா ஒருத்தியை ரெண்டாந்தாரமா கட்டிட்டு வர்றது எத்தனையோ ஓசத்தி இல்லையா?"

செந்திலுக்கு முகம் சிவந்தது. சமையல் அறையில் அம்மா இருக்கிறாளே என்கிற நினைப்புதான் அவன் கையைக் கட்டிப்போட்டது.

"ஏய்... இந்த சாடை மாடை பேச்செல்லாம் வேண்டாம். இங்கே, யார் காசு கொடுத்துப் போறாங்க?"

அவன் உதட்டைச் சுழித்தாள்.

"அது யாருக்குத் தெரியும்? போறவங்க ஊர் முழுக்க நோட்டீசு கொடுத்துட்டா போவாங்க?"

"இந்தா... இந்தா... பல்லை உடைப்பேன்."

"ஏனோ தெரியலையே... நான் என்ன, உங்க பொண்டாட்டியா? யாரையோ சொன்னா, உங்களுக்கு ஏன் இத்தனை கோபம் வருது? நீங்கதான் சட்னிக்கு ஒரு ரூபாய்க்கு உடைச்சகடலை வாங்கறதுக்குக்கூட ஆயிரம் யோசிக்கிறவராச்சே... இதுக்குத்தான் பெரிசா செலவழிக்கப் போறீங்களாக்கும்?"

அரசி, இதற்குமேலும் அங்கே நிற்காமல், ஒரே ஓட்டமாய் ஓடிவிட்டாள்.

அரசி சுற்றிச் சுற்றி வந்து, ஏன் தன்னை உசுப்பேற்றி



விரும்புகிறாள் என்பது அவனுக்குப் புரியாமல் இல்லை.

அவனது இந்த இருபத்தியொன்பது வயசுக்குள், மறுமணத்துக்கு தூண்டில் போடும் விதமாக எத்தனையோ பெண்ணைப் பெற்ற தகப்பன்களும், ஏன்... பெண்களுமேகூட அவனுக்கு இதுபோல வலைவீசி இருக்கிறார்கள்.

இப்பொழுதுகூட அவன் வேலை செய்யும் வங்கியில் தலைமை குமாஸ்தா ராமலிங்கமும், கம்ப்யூட்டர் கனகலட்சுமியும் தினமும் ஒரு தரமாவது இதுபற்றிப் பேசி வருகிறார்கள்.

ராமலிங்கத்துக்கு மூன்று பெண்கள். அதில் ஒருத்திக்காவது செந்தில் பொருந்தி வரமாட்டானா என்கிற ஆசை.

கனகலட்சுமிக்கு செந்திலிடம் ஒரு மயக்கம். அவனது அழகுக்கும், நல்ல மனசுக்கும், எல்லாவற்றுக்கும்மேல் அவனது 'ஆபீசர்' பதவிக்கும் தன்னையே இழக்கக் காத்திருக்கிறாள். குழந்தை முகிலனைக்கூட, தான் பெற்ற பிள்ளையாய் வளர்க்க அவள் தயார்.

ஆனால், அவன்தான் தயாராக இல்லை.

இந்த வைகாசி வந்தால் அவனுக்கு இருபத்தியொன்பது முடிந்து, முப்பது பிறக்கப்போகிறது.

அவன் மனைவி விமலா இருந்திருந்தால் அமர்களப்படுத்தி இருப்பாள்.

திருமணமானபோது அவனுக்கு இருபத்திஐந்து வயசு. விமலாவுக்கு பதினெட்டுதான். சரியாய் ஒரே ஆண்டில் முகிலன் பிறந்தான். சென்னையில் ஓரளவுக்கு வசதியான மருத்துவ மனையில்தான் பிரசவம்.

என்ன கவனக்குறை- எதில் அலட்சியமாக இருந்தார்களோ... அவள் ஜன்னி கண்டு இறந்துபோனாள்.

பிரசவத்தில் அதிகம் இறப்பது எல்லாம் அந்தக் காலம். இப்பொழுதெல்லாம் எத்தனையோ மருத்துவ வசதிகள் எல்லாம் வந்துவிட்டது. ஆனாலும், விமலாவுக்கு ஆயுசு முடிந்துவிட்டது.

"என் மக சரியான கவனிப்பில்லாம செத்துட்டா. இந்த ஆஸ்பத்திரி மேல வழக்கு போடப்போறேன்" -இப்படி குதித்தார், விமலாவின் தந்தை.

"கல்யாணமான மறு ஆண்டே என் மகன்- இப்படி தனிமரமா நிக்கிறானே... கேசு போட்டா பணம் வரும்.

அவனுக்கு பெண்டாட்டி திரும்புவாளா... இல்லே, பிள்ளைக்குத்தான் அம்மா திரும்பி வருவாளா?" -இப்படிச் சொல்லி அழுதாள், செந்திலின் தாய் மீனாட்சி.

மொத்தத்தில் இதற்குப்பின், பட்டண வாசம் கசந்து போய்விட்டது, செந்திலுக்கு.

விமலாவின் பெற்றோர் எவ்வளவோ கெஞ்சியும் குழந்தையை அவர்களிடம் விடவில்லை, அவன். விமலாவின் நினைவையும், குழந்தையையும் சுமந்துகொண்டு, தாயுடன் இந்த கிராமத்துக்கு மாற்றல் வாங்கிக்கொண்டு வந்துவிட்டான்.

மீனாட்சிக்குத்தான் பொறுப்பும், வேலையும் கூடிவிட்டதே தவிர, செந்திலுக்கு அந்த கிராமம் பிடித்துப்போய்விட்டது.

ஊர் சிறியதாக இருந்தாலும், மரியாதை தெரிந்த மனிதர்கள்.

'பாங்கி தம்பீ' என்று அருமையாகக் கூப்பிடும் பெரியவர்கள்.

ஏதாவது ஆங்கிலத்தில் நட்டச்சு செய்யப்பட்ட அரசாங்க கடிதமென்றால்- உடனே பதறியடித்துக்கொண்டு, இவனைத் தேடி ஓடிவரும் அப்பாவி மக்கள்.

செந்திலின் தாய்க்கு உதவியாய் கரங்களை நீட்டிய உன்னதமானப் பெண்கள்.

அங்கலாய்த்த மீனாட்சி, தன் வீட்டுக்கு எதிர்வீட்டில்- வீடா அது, மாளிகை, அதில் வசித்த சட்டநாதன் தம்பதியரின் அன்பைக் கண்டு திணறிப்போனாள்.

சட்டநாதனின் வீடுகளில் ஒன்றில்தான் செந்தில் வாடகைக்கு இருக்கிறான். ஆனால், அவங்களோ, வீட்டுச் சொந்தக்காரர்கள் என்கிற கர்வமோ, வறட்டுப் பெருமையோ இன்றி பழகினார்கள்.

"குழந்தைக்கு கழுத்து ஒழுங்கா நிற்கலே. அவங்களுக்கோ, தெற்கே காலை வச்சா, வடக்கே இழுக்குது. அரசி, பாப்பாவை வாங்கிட்டு வா. தாயம்மாவைவிட்டுக் குளிப்பாட்டச் சொல்லலாம்."

"அய்யோ... உங்களுக்கு எதுக்கு சிரமம்!"

"சிரமமா? அரசியை நாளைக்கு ஒரு இடத்துல கட்டிக்கொடுத்தா, அடுத்த ஆண்டே பேரப் பிள்ளையைப் பார்க்கமாட்டோமா? பிள்ளையைக் குளிப்பாட்டுறது சிரமம்னா- பொங்கித் திங்கிறதுகூடத்தான் சிரமம்."

உச்சந்தலையிலிருந்து, உள்ளங்கால் வரையில் செல்வத்தின்



செழுமையில் மூழ்கிய- சொர்ணத்தின் பக்கத்தில் போய் பேசினால்தான் அந்த குழந்தை சுபாவம் புரியும்.

சட்டநாதன் அதற்கும் ஒரு படி மேல்.

பங்களா நிறைய தோட்டக்காரர்களும், வேலையாட்களும் நிறைந்து இருப்பார்கள்.

வாசலில் இரண்டு கார். தவிர, மயிலைக்காளை பூட்டிய வண்டி.... தொலைபேசிகள்... குளிர்பதனப்பெட்டிகள்... குளிர்சாதனம் பொருத்தப்பட்ட அறைகள்... மாட்டுக் கொட்டகையில்கூட மின்விசிறிகள்... கோடிக்கணக்கில் சொத்துகள்... அந்த ஊர் பாங்கி இருப்பதே இவரது சொந்த கட்டிடத்தில்தான். ஊரைச் சுற்றி ஏக்கர் கணக்கில் பரந்து விரிந்த நிலம்.

இத்தனை இருந்தும் மனிதர், வேட்டியை தார்பாய்ச்சிக் கொண்டு, மகள் ஆசையாய் நட்ட ரோஜாப் பதியன் ஏன் துளிர்க்கவில்லை என்கிற ஆராய்ச்சியில் இறங்கியிருப்பார்.

"அடேய் மாதய்யா... இதுமட்டும் ஏண்டா துளிர்க்கலே? பாவம் அரசி. தினமும் என்னென்ன உரமோ வாங்கிட்டு வந்து போடுறாளேடா..."

"அதுக்கு நிறைய உரம் போட்டதே தப்பாப்போச்சுங்க. அது இனிமே அவ்வளவுதான். போச்சு..."

"அடேய்... அரசி முன்னாடி அப்படி சொல்லிடாதே. துடிச்சுப்போயிடுவா. நீ என்ன பண்ணு... நாளைக்கு பொழுது விடியறதுக்குள்ளே வேற ஒரு ரோஜாக் கன்று வாங்கி வந்து, இதை எடுத்துட்டு, அதை வச்சிடு."

"பாப்பாவுக்குத் தெரிஞ்சது... நம்ம ரெண்டு பேரையுமே ஒரு வழிபண்ணிடுங்க."

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் சொன்னபடி செய். போ..."

இப்படி தோட்டக்காரனிடம் சொல்லிவிட்டு, புதுச் செடியை நட்டு, அது துளிர்த்து மொட்டுவிடும்போது மகள் முகத்தில் ஒளிரும் பரவசத்தைக் கண்டு ஆனந்தப்படுகிறவர்... அடுத்தாற்போல அவள் போடும் கேள்விக் கொக்கிகளுக்கு பதில் சொல்லப் படாதபாடுபடுவதும் அழகுதான்.

"அப்பா, மஞ்சள் ரோஜா செடிதானே வச்சிருந்தேன்... அது

இப்ப மொட்டு விட்டிருக்கு. ஆனா..."

"ஆனா... என்னம்மா? அந்தச் செடி மொட்டு விட்டிருக்கிறதே உன் கைப்பட்ட அதிருஷ்டம்தான். என்னமா சோகையா இருந்தது. இப்பப் பாரு... பளீர்னு கண்ணைப் பறிக்குது."

"எல்லாம் சரிதாம்பா... ஆனா, மொட்டு சிவப்பாயில்லே இருக்கு?"

"அப்படியா? செடியை வித்தவன் ஏமாத்தி இருப்பான்."

"அப்பா... அந்தச் செடி என் தோழி வீட்டு மஞ்சள் ரோஜா செடியில் இருந்து. பதியன்போட்டது. எப்படி சிவப்பு பூ பூக்கும்?"

"கண்ணம்மா... ஒவ்வொரு மண்வாகு... கைராசி... எல்லாம் இருக்குதில்லே? ஒருவேளை, உன் தோழி வீட்டு மஞ்சள் ரோஜாவோட அம்மா, பாட்டி இப்படிப்பட்ட வம்சத்துல சிவப்பு ரோஜா பூக்கிற மஞ்சள் ரோஜாச் செடி... அபத்தமா உளர்றேனோ... இதோ பாரு... நானும் கருப்பு; உங்க அம்மாவும் மாநிறம்தான். ஆனா, நீ மட்டும் எப்படி சந்தன மரத்துல இழைச்சு செஞ்சாப்பலப் பிறந்திருக்கே! எங்க அம்மாவோடப் பாட்டி உன்னை மாதிரிதான் இருப்பாங்களாம்."

"ஏன்... ஏன் அத்தை– அதான், உங்க தங்கைகூட என்னை மாதிரிதானே இருப்பாங்களாம். அம்மா சொல்லியிருக்கு."

"நல்ல நேரத்துல அந்த மூதேவி நினைப்பு எதுக்கு?"

"ஏம்ப்பா, அத்தையை எப்பவும் திட்டுறீங்க? பாவம், அவங்க உயிரோடக்கூட இல்லே."

"இந்த அண்ணன் சொல்றதைக் கேட்டிருந்தா, இப்படி அல்பாயுசுலப் போயிருக்கமாட்டா. காதல் பண்ணினா; எங்க பேச்சைக் கேட்காமக் கல்யாணம் பண்ணிக்கிட்டா; கட்டையில போனா. நீ அதைவிடு. ஒரு மஞ்ச ரோஜாச் செடி, சிவப்பு ரோஜா மொட்டு விட்டிருக்கே... உடனே பத்திரிகைக்காரங்களுக்கெல்லாம் சொல்ல வேண்டாமா?"

"போங்கப்பா... எப்பவும் கிண்டல்தான், உங்களுக்கு."

"சரி... சரி... சைக்கிளுக்கு காத்து இறங்கிப்போச்சுன்னு சொன்னியே... கொண்டா, அடிச்சுத் தர்றேன்."

அவர், அடுத்தாற்போல, சைக்கிளுக்குக் காற்றடிக்கும் வேலையில் இறங்க... வேலைக்காரர்கள் பதறிக்கொண்டு



ஓடிவருவார்கள்.

"அய்யா... இங்கே கொடுங்க. நாங்க காத்தடிச்சுத் தர்றோம்."

சட்டநாதன், அவர்களை சாடை காட்டி, விரட்டிவிடுவார். மகள், சைக்கிளுடன் பறந்தபின்பு சொல்லுவார்:

"உங்களுக்கெல்லாம் நான் எசமானாக இருந்தாலும், என் மகளுக்கு நான் அப்பாதான். பிள்ளையின் சைக்கிளுக்குக் காத்தடிக்கிறது ஒரு பெரிய வேலையா?"

இப்பேர்பட்ட சட்டநாதனுக்கு சொந்தமான வீட்டில், அதுவும் அவர் பங்களாவுக்கு நேரெதிர் வீட்டில் குடிவந்த செந்திலுக்கு பலவித வசதிகள்.

குழந்தை அழுதால்– பதினைந்து வயசு அரசி ஓடிவந்து தூக்கிச் சென்றுவிடுவாள்.

செந்திலின் தாய் மீனாட்சி, இட்லி– தோசைக்கு மாவாட்ட கல்லுரலில் அமர்ந்தால், சொர்ணம், தாயம்மாவை அனுப்பி, ஊறவைத்த அரிசி– உளுந்தை வாங்கிவரச் சொல்லுவாள்.

"வயசானக் காலத்துல எதுக்கும்மா கல்லைக் கட்டிட்டு அழுறீங்க? இங்கே கொடுங்க. கரண்டு மிஷினிலே ரெண்டு நிமிசத்துல ஆட்டிக் கொடுத்தனுப்புறேன்."

சொர்ணம், உரிமையுடன் அதட்டுவாள்.

செந்தில், இன்னமும் அரசியை அதே பதினைந்து வயசு சிறுமியாகத்தான் நினைத்துப் பழகி வந்தான்.

இந்த நாலைந்து ஆண்டுகளில் அவள் மட்டும் வளரவில்லை. மனசுக்குள் செந்திலைப் பற்றிய எண்ணங்களையும் அவள் வளர்த்துக்கொண்டுவிட்டாள்.

வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும், அந்தப் பார்வையும் சிரிப்பும் போதாதா?

அதுவும், மீனாட்சி சென்ற ஆண்டு– நோய்வாய்ப்பட்டு ஐந்தாறு மாதங்கள் போல மருத்துவமனையும் வீடுமாக அலைந்தபோது... அரசியின் உதவி மட்டும் இல்லாமல் போயிருந்தால்– செந்தில் திண்டாடிப்போயிருப்பான்.

இத்தனைக்கும் அரசி, அப்போது கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தாள்.

குக்கர் வைப்பதிலிருந்து, சின்னச் சின்ன சமையல்

குறிப்புகளை எழுதித் தருவது வரை எல்லாமே அவள்தான்.

ஒன்றுமில்லாத அல்ப விசயங்களையெல்லாம் ஊதிப் பெரிதுபடுத்தும் கிராமத்து மக்கள்– இவர்கள் விசயத்தில் கண்டுகொள்ளாமல் மவுனமாக இருந்ததற்குக் காரணம் என்ன?

செந்திலின் மீதுள்ள அதீத மரியாதை காரணமா? அல்லது, தாரமில்லாதவன் என்கிற பரிவா?

இல்லை, பெரிய மனிதர் வீட்டு சமாசாரம் நமக்கெதற்கு என்ற எண்ணமா?

என்னதான் ஏணி வைத்து எட்டினாலும் அரசியின் அந்தஸ்தை இவனெங்கே எட்டப்போகிறான் என்ற அலட்சியமா?

எதுவோ...

அரசியின் பெற்றோர்கூட, செந்திலின் அம்மா மருத்துவ மனையில் படுத்திருந்தபோது– 'அடுத்தவங்க வீட்டுக்கு நீ அடிக்கடி போகக்கூடாது' என்று மகளைக் கண்டிக்கவில்லை.

அவனிடம் அவ்வளவு நம்பிக்கை.

இன்றளவும் சட்டநாதன், செந்திலிடம் தனது வங்கிக் கணக்குகளைப் பற்றியும், சொத்துகளை விற்பது– வாங்குவது பற்றியும் அவ்வளவு ஏன், தன் வீட்டுக்கு சுண்ணாம்பு அடிப்பது பற்றியும் கூட ஒரு வார்த்தை கலந்து ஆலோசிக்காமல் செய்ததில்லை.

"படிச்சவன்... நிறைகுடம்... அமைதியானவன்... ஒரு வம்புக்கும் போகாதவன். இப்படிப்பட்ட பிள்ளையாண்டான் நம்ம வீட்டுல இருக்கிறதே ஒரு மதிப்பும்மா."

அவர், மகளிடம் இப்படிச் சொல்லும்போதெல்லாம் அவள் புன்னகைப்பாள்.

காரணம், அவள்தான் செந்திலை மனசுக்குள்ளேயே இருத்தி இருக்கிறாளே...

## 2

என்னதான் மூத்த மனைவியிடம் மாளாதப் பாசம் வைத்திருந்தாலும் தன்னந்தனியனாக வாழும் வாழ்க்கையில்,



பல நேரங்களில் அலுப்பும், செத்துப்போனவளின் மீது அநாவசிய கோபமும் வருவது இயற்கைதான்.

அதேநேரத்தில், முகிலன் அடம்பிடித்தால் எரிந்து விழுவதைத் தவிர, வேறு வழி தெரியாது.

மீனாட்சிக்கு, ஒரே நேரத்தில் இரண்டு வேலைகளைக் கவனிக்க முடியாது. முன்பு எப்படியோ... இப்பொழுது பலஹீனப்பட்டுப்போனபின்– அரிசியை சோறாக்குவதே பெரிய விசயம். அதுவும், செந்திலுக்கு நாக்கு செத்துவிட்டால், அவனே உள்ளே புகுந்து ஏதாவது சமைத்தால்தான் உண்டு.

அப்பொழுதெல்லாம் மீனாட்சி, மகனை அதட்டுவாள்.

"டேய்... அந்தக் குட்டிப் பிசாசு எதுக்கு அழுறதுன்னு பாருடா... வேளைகெட்ட வேளையில சின்ன வெங்காயத்தை எடுத்து வச்சுட்டு உட்கார்ந்திருக்கியே..."

செந்தில், முகிலனை மிரட்டுவான்.

"ஏய்... வாயை மூடப்போறியா? இல்லே, வாயில அடைக்கட்டுமா?"

"அடி பின்னிடுவேன்... சித்த நேரம் சும்மா இரேன்."

"........."

"அங்கே பார்த்தியா... அந்த மரத்துலதான் ரெண்டு ராட்சசன் இருக்கான். கூப்பிடட்டுமா?"

இவன், இப்படி திட்டும்போதெல்லாம், அரசிதான் முகிலனின் கட்சிக்காக வாதாடுவாள்.

"இந்த ஆம்பிளைங்களே இப்படித்தான். ஊரு மெச்ச ரெண்டாங் கல்யாணம் வேண்டாம்கிறது. அப்புறம், தனக்கு இருக்கிற ஆத்திரத்தையெல்லாம் பிள்ளை மேலக் காட்ட வேண்டியது..."

"இந்தா, என்கிட்ட அநாவசியமா வம்புக்கு வராதே... சொல்லிட்டேன்..."

"ஐயோ... ரொம்பத்தான் ஆசை, எனக்கு. முகில், உன் சிடுமூஞ்சி அப்பாவுக்கு 'டாட்டா' காட்டிட்டு வாடா, போகலாம்."

"ஆமா, நான் சிடுமூஞ்சிதான். என்னை மாதிரி உட்கார்ந்து சின்ன வெங்காயத்தை உரிச்சுப் பாரு... உன் மூஞ்சி எப்படி

இருக்குன்னு நானும் பார்க்கிறேன்."

அவள் 'களுக்'கெனச் சிரிப்பாள்.

"நானா வெங்காயம் உரிக்கச் சொன்னேன்? இல்லே, முகில் உரிக்கச் சொன்னானா?"

"அட, எனக்குத்தான் ஆசை. நாக்கு செத்துப்போச்சு. எப்பவும் இட்லிக்கு பொடி வச்சுக்கப் பிடிக்கலே. வெங்காயம் வச்சு காரச் சட்னி செய்யலாமேன்னு..."

அவன், இப்படி சொன்ன அன்று, அரசி 'சடக்'கென அவனருகில் அமர்ந்து, வெங்காயத் தட்டை தன் பக்கம் இழுத்தாள்.

"ஏய், கத்தி குத்தித் தொலைக்கப்போகுது. அப்புறம், நாளைக்கு பத்திரிகையில் வரும்; 'நகைக்கு ஆசைப்பட்டு, பாங்கி அதிகாரி 18 வயது பருவப் பெண்ணைக் கத்தியால் குத்திக் கொன்னான்'னு."

அவள், மெல்லியக் குரலில் நிதானமாய் கேட்டாள்:

"அப்பக்கூட நகைக்கு ஆசைப்பட்டுத்தானா?"

"பின்னே, வேறு எதுக்கு ஆசைப்பட்டு..."

யதார்த்தமாய் கேட்டவன், அவசரமாய் தலையை உயர்த்தி அவளைப் பார்த்தான்.

அந்த முகத்தில் ஏக்கம் கவிந்திருந்தது.

"அந்த பத்திரிகைக்காரங்களாவது, 'பொண்ணு மேல ஆசைப்பட்டு'ன்னு போடட்டுமே. படிக்கிறதுக்காவது சுவாரசியமா இருக்கும். உங்களுக்கு என்ன நஷ்டம், இதனாலே?"

இதைக் கேட்டவள், வெங்காயத் தட்டை எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் பறந்துவிட்டாள்.

அவன் ஒரு கணம் சமையல், சாப்பாடு, அலுவலகம் இப்படி சகலத்தையும் மறந்து உட்கார்ந்துவிட்டான்.

அடுத்த சிறிது நேரத்தில் உரித்த வெங்காயங்களை ஒரு டப்பாவில் போட்டு, முகிலன் தளர்நடை போட்டு வந்து 'ப்பா...' என மடியில் உட்கார்ந்து, நீட்டியபோதுதான் அவன் சுயநினைப்புக்கே வந்தான்.

அன்றிரவு முழுக்க அவன் தூங்கவில்லை.

மனசுக்குள் இனம்புரியாத பயம்.



'எத்தனைச் சுலபமாக் கேட்டுட்டா, இவ.' அவளது துணிச்சல், அவனை பிரமிக்க வைத்தது.

'இதெல்லாம் நடக்கிற காரியமா? சின்னப் பொண்ணு. இந்த கிராமத்திலே வெள்ளையும் சள்ளையுமா உடுத்திட்டு இருக்கிறவன் நான்தான். அதனால பாவம்... மயங்கிட்டா போல..."

'இதை வளரவிடக்கூடாது. இவ அப்பாவும், அம்மாவும் நம்மை நம்பி, பொண்ணை அடுப்பங்கரை வரைக்கும் புகுந்துவர அனுமதிச்சி இருக்காங்க. அந்த நம்பிக்கையை நாம கெடுச்சிடக்கூடாது.'

'அதுசரி... நம்ம வீட்டுல ஒரு பெரிசு இருக்கே... அதுவாவது, இப்படி வந்து போறதெல்லாம் தப்பும்மா... நாளைக்குக் கல்யாணமாகி, இன்னொருத்தன் வீட்டுக்குப் போகவேண்டிய பொண்ணு நீ'ன்னு சொல்லாதோ?'

அவன்தான் மண்டையைக் குடைந்துகொண்டானே தவிர, அவள் என்னவோ அன்று சொன்ன வார்த்தைகளை மறந்து விட்டவள் போலவே நடமாடினாள்.

அவனுக்கே ஓர் சந்தேகம்...

'ஏதோ பாவம்... விளையாட்டாச் சொன்னதை நாமதான் பெரிசா கற்பனை பண்ணிட்டோமோ? நல்லவேளை... அவளை அழைச்சு எதுவும் சொல்லலே." இது எல்லாம் நடந்தது ஒரு ஆண்டுக்கு முன்பு. அப்புறம் ஆயிரம் பேச்சு, சிரிப்பு, சீண்டல்...

அவள், எப்போதும் போலத்தான் இருந்தாள்.

அவன் பார்க்காத நேரத்தில் பார்ப்பது; அப்படியே அவன் பார்வையைச் சந்திக்க நேர்ந்தாலும் கழுத்தைச் சாய்த்து, பழிப்பு காட்டிவிட்டு ஓடுவது; அவன் அலுவலகத்துக்கு எடுத்துச் செல்லும் சாப்பாட்டு டப்பாவில், அவனுக்குத் தெரியாமல் தன் வீட்டுச் சமையலை வைப்பது; அவன் வீட்டு வாசலில் கோலம் போடுவது; விளக்கேற்றுவது; நடுநடுவே முகிலனை மையமாக வைத்துக்கொண்டு பூடகமாய் ஏதாவது பேசுவது...

"உம்... ஏதோ, எனக்கு கல்யாணமாகிற வரைக்கும் இத்தனையையும் கவனிக்கிறேன். நாளைக்கே நான் வேறு வீட்டுக்குப் போயாச்சுன்னா, இதையெல்லாம் யாரு

கவனிப்பாங்கன்னு கேளு, முகில்."

"இந்த வாயாடியைக் கட்டிக்க எவன் வரப்போறான்னு நீயும்தான் கேளுடா, முகிலா."

"அட, பூனை கண்ணை மூடிட்டா, பூலோகமே அஸ்தமிச்சுப் போயிடாதுன்னு சொல்லுடா உங்க அப்பாகிட்ட."

"மாமனார் வீட்டோடு உட்கார்ந்து தின்னே அழிக்கிறவன் எவனாவது வந்தால்தான் உண்டு."

இந்த சண்டை ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் நீண்டுகொண்டே போகும்போது, மீனாட்சிதான் அடுக்களையிருந்தபடியே குரல் கொடுப்பாள்.

"அடேய்... அந்தக் குழந்தைப் பொண்ணுகிட்ட என்னடா வாய் ஓயாத சண்டை? உன்னைவிட அவ பத்து வயசு சின்னவ. நினைப்பிருக்கட்டும்."

குறும்பும், கிண்டலும், நக்கலும், நகைச்சுவையுமாய் அது நேரம்வரையில் தொடர்ந்த பேச்சு, குருத்து வாழையில் அரிவாள் வெட்டு விழுந்தது போல அப்படியே நிற்கும்.

அரசி, அவனை சங்கடத்துடன் பார்த்துவிட்டு நகர்வாள்.

செந்திலுக்கும் என்னமோ போலத்தான் இருக்கும்.

தன் அம்மாவை எந்தவிதத்தில் சேர்த்துக்கொள்வது என்றே புரியாமல் திகைப்பான், அவன்.

உற்சாகம் ஊற்றாக பெருகும்போது, அம்மா எதற்காக இந்த வயசை ஞாபகப்படுத்துகிறாள்?

'உனக்கும் அவளுக்கும் பத்து வயசு வித்தியாசம் இருக்கிறது. சட்டநாதன், தன் மகளுக்கு ஐந்தாறு வயசு வித்தியாசத்தில், பணக்காரனாகப் பார்த்து முடித்து வைப்பார்; நீ ரொம்பத்தான் கோட்டை கட்டாதே' என்கிறாளோ...

அரசியின் பேச்சிலும், சிரிப்பிலும் பொதிந்திருக்கும் காதல், அம்மாவின் கண்ணில் படாமல்தான் இருக்குமா?

ஏற்கெனவே ஓர் முறை- முகிலனின் மூன்றாவதுப் பிறந்த நாளன்று, மனசு வந்து செந்தில் தனது வங்கி நண்பர்களை வீட்டுக்கு அழைத்திருந்தபோது, அம்மாவுக்கும் அவனுக்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தை இன்னும் மறக்கவில்லை.

சின்ன ஊர். அந்த வங்கியில் வேலை செய்பவர்களே மொத்தம் பத்து, பன்னிரண்டு பேர்தான். அழைத்தவுடன்



முதலில் வந்தது கனகலட்சுமிதான். அதற்குப்பின்தான் ஒவ்வொருத்தராக வந்தார்கள்.

முகிலனை எத்தனையோ கெஞ்சியும், கொஞ்சியும்கூட அவன், அரசியின் இடுப்பைவிட்டு இறங்க மறுத்துவிட்டான்.

"ஊகூம்... அவன் யார்கிட்டேயும் போகமாட்டான். எங்கம்மாவும் நானும்தான் மாறி மாறி தூக்கி வச்சிப்போம். இப்ப நீங்க வற்புறுத்தினா, எல்லாரும் வர்ற நேரத்துல பெரிசா அழுதுடுவான்."

அரசியின் வார்த்தைகள் கனகலட்சுமியைச் சோர்ந்துப்போக வைக்க, மெதுவாக சமையலறைப் பக்கம் நகர்ந்தாள்.

அங்கே, ஏற்கெனவே அரசியின் தாய் சொர்ணமும், தாயம்மாவுமாய் பஜ்ஜி, கேசரி, பிரியாணி என்று, சமையலறையையே கமகமக்கச் செய்துகொண்டிருந்தார்கள்.

மீனாட்சி, மழையில் நனைந்த பூனை போல ஒரு மூலையில் உட்கார்ந்து பஜ்ஜிக்கு வாழைக்காயைச் சீவிக்கொண்டிருந்தாள்.

கனகலட்சுமியைப் பார்த்ததும், அவள் சேலையைச் சரிசெய்துகொண்டு தட்டுத்தடுமாறி எழுந்திருந்தாள்.

"வாங்க... கூடத்துல நாற்காலி போடலே?"

"போட்டிருக்கு. நான், உங்களைப் பார்க்கத்தான் வந்தேன். செந்தில், உங்களைப் பற்றி நிறைய சொல்லி இருக்காரு."

"உம்..."

"எதுக்கு பாவம்... வயசான காலத்துல சிரமப்படுறீங்க? அந்தக் காயை இப்படிக் கொடுங்க. நான் சீவித் தர்றேன்."

"அய்யய்யோ... வேண்டாம். தம்பி பார்த்தாக் கோவிச்சுக்கும்."

"அட நீங்க வேற... எத்தனைப் படிப்பு படிச்சாத்தான் என்ன... இதுமாதிரிப்பட்ட வேலையெல்லாம் பொம்பிளைங்களுக்குத் தெரியாம இருக்கக்கூடாது. எங்கம்மா எனக்கு நல்லா பயிற்சி கொடுத்திருக்காங்க. நாளைக்கே மாப்பிள்ளை வீட்டுக்குப் போனா செய்யணுமில்லே?"

மீனாட்சி, எச்சிலைக் கூட்டி விழுங்கி, இதற்குப் பதில் சொல்வதற்குள், கருவாட்டு வாசம் பிடித்த பூனை மாதிரி, கனகலட்சுமியைப் பின்தொடர்ந்து வந்த அரசி ஒரே போடாகப் போட்டாள்

"அதெல்லாம் உங்களுக்கு பார்க்கிற மாப்பிள்ளை வீட்டுல வச்சுக்குங்க மேடம். இங்கே வேண்டாம். அதான் இங்கே ரெண்டு பேர் செய்யறாங்க. பத்தலைன்னா, எங்க வீட்டுல இருக்கிற மத்த ஆளுங்களைக் கூப்பிட்டுப்போம். சமையல்கட்டு சின்னதா இருக்கிறதால் இங்கே ரெண்டு பேர்தான் வேலை செய்ய முடியுது. முக்கியமானது எல்லாம், எங்க வீட்டுலேதான் தயாராகுது. நீங்க காத்தாட வெளியே போய் உட்காருங்க."

"இல்லே... வந்து..."

"ஏதுடா... செந்தில் சார், மனைவி இல்லாம, விருந்துக்கு எல்லாரையும் கூப்பிட்டுத் திண்டாடப்போறாரேன்னுதானே கவலைப்படுறீங்க?"

"ஆ... ஆமா..."

"இங்கே அவருக்கு ஒரு குறையுமில்லே... அவருக்கு பெண்டாட்டி இருந்தாக்கூட இத்தனைக் காரியங்களையும் இழுத்துப்போட்டு செஞ்சிருக்கமாட்டா. 'பாவம்; சின்ன வயசுலே பெண்டாட்டியை பறிகொடுத்தவர்'னு எங்கம்மா அவரையும், முகிலனையும் உள்ளங்கையில வச்சுத்தான் தாங்குறாங்க. எங்க அப்பா... என்னமோ இவரை, தன் வீட்டு மாப்பிள்ளை மாதிரிதான் கொண்டாடுறாரு. சண்டையோ, பூசலோ... அவருக்கு ஒருநாள் என்னைப் பார்க்கலைன்னாலும் என்னமோ போல ஆயிடும்."

இத்தனையையும் சொல்லிவிட்டு, கனகலட்சுமியை கீழ்பார்வை பார்த்தாள்.

"என்ன மேடம்... இப்ப சந்தேகம் தெளிஞ்சிருக்குமே..."

அரசியின் கண்களில் குறும்பு சுடர்விட்டது. கனகலட்சுமி இதை கவனித்தாளோ இல்லையோ, மீனாட்சியின் கண்கள் இதை ஊடுருவத் தவறவில்லை.

ஏற்கெனவே, நோயால் மெலிந்த அவளது தேகம், இப்பொழுது பயத்தால் வெடவெடத்தது.

அன்றிரவே...

பிறந்த நாள் விழா விருந்து முடித்து அவரவர் சொல்லிக் கொண்டு கிளம்ப, கனகலட்சுமி எதுவுமே பேசாமல் செந்திலைப் பார்த்து சோகமாய் புன்னகைத்துவிட்டு விடைபெற... வேலையாட்களைவிட்டு சமையலறையை சுத்தப்படுத்தச்



சொல்லிவிட்டு, முகிலனுக்கு தெரு மண் எடுத்து வந்து, கண்ணேறு படாமல் இருக்க அவனை உட்கார வைத்துச் சுற்றிப் போட்டுவிட்டு அரசியும் கிளம்ப...

மகனை மார்பின் மீது போட்டு, தட்டியபடியே தூங்க வைத்துக்கொண்டிருந்த செந்திலின் எதிரில் வந்து உட்கார்ந்தாள், மீனாட்சி.

"என்னம்மா... தூங்கப் போகலையா?"

"எப்படிடா தூக்கம் வரும்? ஏற்கனவே, பாதி இராத்திரி வரைக்கும் தூக்கம் வராம, பாயைப் பிறாண்டிட்டுக் கிடப்பேன். இப்ப அதுவும் போச்சு."

"ஏன்?"

"ஏனா... ஏன்னுன்னா கேட்கிறே? உங்க ஆபீசுலே இருந்து வந்திருந்தாளே... உசரமா, சிவப்பா, ஆந்திரக்காரப் பொண்ணு..."

"ஆமா... கனகலட்சுமி."

"அவளை இன்னிக்கு அரசி ஒரு விரட்டு விரட்டியிருக்கா பாரு... உன் பெண்டாட்டிகூட இப்படியெல்லாம் பேசியிருக்கமாட்டா..."

செந்தில் அதிர்ந்தான். ஆனாலும், தன் திகைப்பை வெளிக்காட்டிக்கொள்ளாமல், தாயைப் பார்த்தான்.

கிழவி, குரலில் நடுக்கம் மேலிட நடந்ததைச் சொன்னாள்.

"இதோ பாருடா... உனக்கும் அரசிக்கும் நடுவுல எதுனாச்சும் இருக்கா?"

"சிச்சி... என்ன நீ உளர்றே?"

"உளறலேடா... இன்னிக்கு அவ பேசினதை நீ கேட்டிருக்கணுமே... என்னமோ, உன்னை தன் முந்தானையில முடிஞ்சு வச்சிருக்கிற மாதிரிதான் பேசினா..."

"அவ குழந்தைம்மா. நீயாக எதையாவது நினைச்சிட்டுக் கலவரப்படாதே."

"அப்ப அந்த ஆந்திரப் பொண்ணு- கனகலட்சுமியா, விஜயலட்சுமியா? அவளையாவது கட்டிக்கடா."

"என்ன நீ... மூளை கலங்கிப்போச்சா? அவ எங்க பாங்கிலே குமாஸ்தாவா வேலை செய்யறா."

"இருக்கட்டுமே. நீ கட்டிக்கிறேன்னு சொன்னா, அவ

சம்மதிப்பாள்னுதான் தோணுது. அதெல்லாம் ஒரு பார்வையிலேயே எதிராளியோட மனசை எடை போட்டுடுவேன், நான். அரசி, அவளை வார்த்தையாலே புரட்டிப் புரட்டி எடுத்தப்ப, அவ முகம் எப்படி வாடிப்போச்சு தெரியுமா? பொண்ணு, பார்க்க நல்லாவும் இருக்கா. வயசு, உசரம், நிறம் எல்லாம் பொருந்தி இருக்கு."

அதென்னவோ, செந்திலுக்கு அதற்குமேல் அந்தப் பேச்சை வளர்ப்பதில் விருப்பமில்லை.

தூங்குவது போலப் பாசாங்கு செய்தான். மனசு மட்டும் கறுவியது.

"இருக்கட்டும். நாளைக்கு முகிலனைத் தூக்கிட்டுப்போக, இல்லைன்னா பாடத்துல சந்தேகம் கேட்க... இப்படி எதையாவது சாக்கு வச்சிட்டு வருவா இல்லே... அப்ப அவளை கவனிச்சுக்கிறேன்."

ஆனால், மறுநாள் காலையில் அவளைக் கண்ணிலேயே காணோம். சொல்லிவைத்தாற்போல, அவன் அலுவலகத்துக்குக் கிளம்பியபோது வந்து, அவனது வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டாள்:

"ஆமா... பாங்கிலிலே அந்த நெட்டைக் கொக்கை எப்படி சமாளிக்கிறீங்க? நேத்து அவ, உங்களைப் பார்த்துவிட்ட ஜொள்ளுலே கூடம், தாழ்வாரம் எல்லாம் நனைஞ்சுப்போச்சு. இராத்திரி நானும், தாயம்மாவும் சேர்ந்துக் கழுவிவிட்டதுலே, தாயம்மாவுக்கு இடுப்புப் பிடிச்சுடுச்சு."

"ஏய்... என்கிட்ட செமத்தியா வாங்கப்போறே, நீ."

அவன் கையை ஓங்க, அவள் 'களுக்'கெனச் சிரித்தபடியே பறந்துவிட்டாள்.

இப்போதும்கூட வேண்டுமென்றே, வம்புக்காகவே கனகலட்சுமியின் பெயரை அரசி இழுப்பதுண்டு... சில நேரங்களில் நேரடியாகவும் தாக்குவாள்.

"செந்தில் சார்... எத்தனை நாளைக்குத்தான் முந்தானை முடிச்சு பாக்கியராஜ் மாதிரி, குழந்தையைத் தூக்கிட்டு அலையப்போறீங்க; ஏதாவது நல்ல பொண்ணாப் பாருங்களேன்."

"ஏன்... நீதான் பாரேன்."



"பார்த்துக்கிட்டேதான் இருக்கேன். என்கூடப் படிக்கிற பொண்ணுங்களோட அக்காக்களையெல்லாம்கூட ஒரு ரவுண்டு கேட்டுப் பார்த்துட்டேன். ரெண்டாம்தாரம்னா ஓடுறாங்க" அவளது இதழில் நமட்டுச் சிரிப்பு வழியும்.

என்றாவது இவர்கள் தீவிரமாகப் பேசுவதும் உண்டு!

"என்ன அரசி... படிப்பு முடியப்போகுதே... மேலே படிக்கப்போறியா? இல்லே..."

"நான் போதும்கிறேன். அப்பாதான் என்னை மேலே படிக்க வைக்கணும்கிறாரு. நடுவுல அம்மா, எப்படியாவது இந்த ஆண்டுக்குள்ள கல்யாணத்தைப் பண்ணிவச்சிடணும்னு ஒத்தைக்காலுல நிக்கிறா."

"நிறைய பெரிய இடங்களிலே இருந்தெல்லாம் பொண்ணு கேட்டு வருது போல இருக்கே?"

"ப்ச்... இன்னும் ஒருத்தரும் பொண்ணு பார்க்கிற அளவுக்கூட வரலே. ஒண்ணு சரியா இருந்தா- இன்னொன்று உதைக்குது."

"ஏன்?"

"பெரிய இடத்துப் பையன்களுக்குப் படிப்பே இல்லே. படிச்ச பையன்களுக்கு, தான் படிச்ச படிப்பைத் தவிர, உலக அனுபவமே இல்லே."

"உன்னோட எதிர்பார்ப்பு என்ன?"

"ஏன்... எனக்கு நீங்க மாப்பிள்ளை பார்க்கப்போறீங்களா? எனக்குப் பணம் வேண்டாம். ஆனா, புருசன் நல்ல உத்தியோகத்துல இருக்கணும். மன்மதனா இல்லாட்டாலும், பார்க்க லட்சணமா இருக்கணும். பத்து, பன்னிரண்டு வயசு வித்தியாசம் இருந்தாக்கூடத் தேவலை. அப்பத்தான் பெண்டாட்டியையும் ஒரு குழந்தை மாதிரி நடத்துவான். நல்லா சிரிச்சுப் பேசணும். மத்த பொம்பளைங்ககிட்ட வழியக்கூடாது. சிக்கனமா ரெண்டு வார்த்தை பேசிட்டு நகர்ந்துடணும். தண்ணி, சிகரெட் பழக்கமெல்லாம் கூடாது. வெளிவட்டாரத்துல அவருக்கு நல்ல பேரு, மரியாதையெல்லாம் இருக்கணும்."

"........."

"ரெண்டாம் தாரமாக் கேட்டு வந்தாலும் சரிதான்."

"அரசி!"

"அட, என்ன சொல்லிட்டேன்னு இப்படி பதறுறீங்க? எத்தனை நாள்தான் மனசுல வச்சிட்டு, கண்ணாமூச்சி விளையாடுறது? ஆம்பிளைக்குத்தான் தைரியம் இல்லை. பொம்பிளையாவது துணிஞ்சு சொல்ல வேண்டாமா?"

"நீ சின்னக் குழந்தை, அரசி."

"ஆமா. இவரு பெரிய தாத்தா. முகில், நீ வாடா... உனக்கு நான் கதை சொல்றேன்!"

ஒவ்வொரு நேரம் அவள் இப்படிப் பேசிவிட்டுப் போகும்போதெல்லாம் செந்தில், தன்னைக் கண்டே பயந்துபோவான்.

'அய்யோ... என்னை அறியாமலே அவ மேல எனக்குள் ஒரு ஆசை... ஆசை இருக்கோ?'

இதுபோன்ற நேரங்களில் எல்லாம், அவனே வலியப்போய் சட்டநாதனிடம் பேச்சுக் கொடுப்பான்.

அப்படிப் பேசினால்தானே அவருக்கும் தனக்கும் இடையே உள்ள ஏற்றத்தாழ்வு 'பளிச்'சென மண்டையில் அடித்தாற் போலப் புரியும்?

## 3

சொர்ணம், மகளை சாடையாகப் பார்த்தாள். கண்ணும் மூக்கும் சிவுசிவுத்துக் கிடந்தன. கல்லூரியிலிருந்து வந்ததும் வராததுமாய், தன் அறைக்குள் போய், கதவை இறுகத் தாழிட்டுக்கொண்ட அரசியைப் பார்த்து, கவலையுடன் புருவத்தை உயர்த்தினார், சட்டநாதன்.

"ஏன்டி... குழந்தையை ஏதாவது சொன்னியா?"

"ஆமா. எனக்கு வேற வேலையே இல்லே பாருங்க. அவ எதுக்காக, யாரை முறைச்சிட்டு வந்திருக்காளோ... யாருக்குத் தெரியும்? ஆனாலும், ஒண்ணு மட்டும் நிச்சயமாச் சொல்லுவேன். நீங்க, உங்க அப்பாவைப் போலவே, பெத்த பொண்ணைத் தலைமேலத் தூக்கிவச்சுக் கொண்டாடுறீங்க. இவளும், இவ அத்தையை மாதிரிப் போயிடக்கூடாதேன்னு



நான் கிடந்து கவலைப்படுறேன்."

சட்டநாதனின் முகம் சுருங்கியது.

"சொர்ணா... என் மக அந்த மாதிரி வழிக்கெல்லாம் போகமாட்டா. ஆனா, உனக்கும் சொல்லி வைக்கிறேன்; வாய்க்கு வாய் அந்த ஓடுகாலியைப் பத்தி நீ அரசிகிட்ட எதையாவது சொல்லிட்டிருக்கே பாரு– அதை முதல்லே நிறுத்து. அரசியை 'டபுள் டிகிரி' வாங்க வச்சு, நல்ல இடத்துலக் கட்டிக்கொடுக்கப்போறேன்."

"கட்டிக்கொடுக்கப்போற பொண்ணுக்கு இன்னும் இன்னும் படிப்பு எதுக்குங்கிறேன்? அதான் உங்க ஆசைக்கு காலேஜுல சேர்த்துப் படிக்க வச்சிட்டீங்க. பொண்ணு வளர்ச்சியும், பீர்க்கங்கா வளர்ச்சியும் கண்ணை மூடித் திறக்கிறதுக்குள் எங்கேயோ போயிடும். முதல்லே கல்யாணத்தை முடியுங்க. அப்புறம், மாப்பிள்ளை விருப்பப்பட்டா மேலே படிக்கட்டும். இல்லே, பிள்ளையைப் பெத்துக்கட்டும்."

அவர் பேசவில்லை.

சொர்ணத்துக்கு, கணவரின் நிதானம் எரிச்சலைத்தான் தந்தது.

இதுபோலத்தான் அவள் மாமனார்– சட்டநாதனின் தந்தை, தன் ஒரே மகளை வீட்டோடு வைத்து, பாட்டுச் சொல்லிக் கொடுத்து, நாட்டியம் சொல்லிக் கொடுத்து அருமையாய் வளர்த்தார்.

ஆசைக்கு ஒரு பெண்; ஆஸ்திக்கு ஒரு பையன் என்றாலும் பெண்தான் உசத்தி!

நவநீதம் என்றால் உண்மையிலே வெண்ணையால் செய்யப்பட்ட சிலைதான்.

சட்டநாதனின் திருமணத்துக்கு முன்பே, நவநீதத்தைப் பெண் கேட்டு பல பெரிய இடங்களில் இருந்தெல்லாம் வந்தார்கள்.

"என் மகளுக்கு அப்படியென்ன வயசாயிடுச்சு? தங்கைக்குக் கல்யாணம் செஞ்சிட்டுத்தான் அண்ணன் மணப்பந்தல்லே உட்காரணும்னு எந்த சட்டத்துல எழுதிவச்சிருக்கு? அவன், இவளைவிடவும் பத்து வயசுப் பெரியவன். அது அது நடக்கிறபடி நடக்கட்டும்."

சொர்ணமே, மாமனார் சொல்வதைக் கேட்டு

வியந்திருக்கிறான்.

அப்பாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு தொங்கும் நவநீதம் எப்பொழுது, எப்படி காதல் வயப்பட்டாள் என்பது இன்றளவும் சொர்ணத்துக்கு வியப்புக்குரிய ஒன்றுதான்.

படிப்பைவிடவும் நவநீதத்துக்கு சங்கீதம், நாட்டியம் இவைகள் எல்லாம் நன்றாக வந்தன.

பெரிய மனிதர் வீட்டுப் பெண். அரங்கேற்றம் அமர்களமாக நடந்தது. நடனக் குழுவுடன் நாலைந்து நாட்டிய நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டாள்.

அங்கேதான் இது நேர்ந்திருக்க வேண்டும்!

பெயர் மாதவன். பெரிய இடத்துப் பையன்தான். ஏதோ கலை ஆராய்ச்சி பண்ணுகிறேன் என்று அறிமுகமானவன், காதல் ஆராய்ச்சியில் இறங்கிவிட்டான்.

ஆனால், இதுபற்றி யாருக்குமே தெரியாது. அத்தனை இரகசியமாய் வைத்திருந்தனர், இருவரும்.

முதன்முதலாக, திருச்சியிலிருந்து ஒரு பண்ணையார் வீட்டு சம்பந்தம் வந்தது. பெண் பார்க்கும் வைபவமே, ஊர் அழைக்கும் விழா மாதிரி தடபுடல்பட்டது.

இவளானால் தலைசீவிக்கொள்ளமாட்டேன் என்கிறாள்... பட்டுச்சேலையைச் சுருட்டி எறிகிறாள்... நகைகளை பெட்டியோடு விசிறியடிக்கிறாள்... குப்புறப் படுத்து 'ஓ'வென அழுகை...

இதோ இன்று மகளின் முகச்சுருக்கத்துக்காகக் கவலைப்படும் இதே சட்டநாதனும், அவர் தந்தையும் ஓடிப்போய், நவநீதத்தைச் சமாதானப்படுத்தி, கெஞ்சி, கொஞ்சி விசாரித்தபோதுதான் அவள் குண்டைத் தூக்கிப்போட்டாள்.

"மாதவனா..., யாரது?"

"ஆராய்ச்சியாளர். டான்ஸ் டீச்சர் வீட்டுல வந்து தங்கியிருக்கார். அவரும் பணக்காரர்தான். சாதிகூட நம்ம சாதிதான். எப்படியும் உங்ககிட்டேயும் அண்ணன்கிட்டேயும் மெதுவாச் சொல்லி முடிச்சிடலாம்னு இருந்தேன். அதுக்குள்ள நீங்க அவசரப்பட்டு..."

"அடி செருப்பாலே..." பெரியவர் வெகுண்டெழுந்தார்.

அவரால் இந்த அவமானத்தைத் தாங்க முடியவில்லை.

திருச்சிக்காரர்கள் குறைந்தது ஐம்பது பேர். தட்டுதட்டாய் சீர் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். வாசலில் பத்து, இருபது கார்கள் நிற்கின்றன. இந்தப் பக்கம் பெண் வீட்டைச் சேர்ந்தவர்கள் வேறு, சாரைசாரையாய் வந்துகொண்டே இருக்கிறார்கள்.

சிரித்துப் பேசி, மூக்கை அறுத்தாற்போலச் செய்துவிட்டாளே நவநீதம்.

அத்தனைப் பேரையும் திருப்பி அனுப்பியபோது சட்டநாதனும், அவர் தந்தையும் என்ன பாடுபட்டார்கள் என்பது சொர்ணத்துக்குத் தெரியும்.

கிட்டத்தட்ட ஒரு மாதம் வீட்டில் யாரும், யாருடனும் பேசவில்லை.

திடீரென ஒருநாள் பெரியவர், நவநீதத்தின் காதலனை அழைத்தார். முகத்தில் நெல் முனையளவுகூடச் சிரிப்பைக் காட்டாமல் கல்யாணம் பேசினார்.

"வீட்டுல யார் பெரியவங்க இருக்காங்க?"

"அப்பா படுக்கையில. நான்தான் மூத்தவன். என்னவோ சங்கீதம், நாட்டியம்கிற கலை ஈடுபாட்டுல கல்யாணமே செஞ்சுக்கலே. என் தம்பி ஒருவன் இருக்கான். அவனுக்குக் கல்யாணமாகி ஒரு பையன் பதிமூணு வயசுல இருக்கான்."

"என் மகளை உனக்குக் கட்டிவைக்கிறேன். என்னென்ன நகை, வெள்ளிப் பாத்திரம் உண்டோ எல்லாத்தையும் கொடுத்துடுறேன். உங்க வீட்டு மனுசங்களுக்கு நீயே சொல்லிடு. ஒரு நல்ல நாள் பார்த்து சொல்லு. என் வீட்டுல வச்சு கல்யாணத்தை நடத்திடுறேன். ஆனா..."

அவர் சற்று நிறுத்தி, சுருட்டுப் பிடித்து பழுப்பேறிய மீசையை விரலால் நீவிவிட்டுக்கொண்டே அழுத்தமாய் சொன்னார்:

"ஆனா, அதுக்கு அப்புறம் என்ன காரணத்துக்காகவும் அவளும் நீயும் இந்த வீட்டு வாசப்படி மிதிக்கக்கூடாது. நான் செத்தாக்கூட வரக்கூடாது. அதேமாதிரி உங்களுக்கு ஏதாவது ஆச்சுன்னாலும்..."

"அப்பா... ஒரு நல்லது நடக்கிற நேரத்துல என்ன பேச்சு இது?" சட்டநாதன்தான், தந்தையைத் தடுத்தான்.



"சொன்னா என்னடா? உன் தங்கைக்கு வேணுமானா இது கல்யாணம். என்னைப் பொறுத்தமட்டும் அவளுக்கு நான் செய்கிற கருமாதி. இது நடக்கட்டும்!"

நவநீதம் கொஞ்சமாய் அழவில்லை. தந்தையின் காலைக் கட்டிக்கொண்டுக் கதறினாள்.

அத்தனை பேர் எதிரில் மகள் தன்னை அவமானப் படுத்தியதால் பெற்றவருக்கு ஏற்பட்ட கோபம்... கோபம்கூட இல்லை... ஆத்திரம்... வெறி... எல்லாம்!

அடுத்து வந்த சில நாட்களில் வீட்டு மட்டோடு நவநீதம்–மாதவன் திருமணம் நடந்தேறியது. மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் என்று எண்ணி பத்து பேர்தான்.

மாதவனின் தந்தை வரவில்லை. படுத்தபடுக்கையாய் கிடந்தவரை தம்பியும், தம்பி மனைவியும் அருகிலிருந்து கவனித்துக்கொள்ள வேண்டியிருந்தது. மற்றபடி, ஒன்றுவிட்ட சித்தி என்றும், பெரியப்பா என்றும் நாலைந்து பேர். மாதவனின் நண்பர்கள் நாலு பேர்.

இதுதான்; இவ்வளவுதான்.

நவநீதம் அந்த வீட்டைவிட்டுப் போனபோது அரசி இரண்டு வயசுக் குழந்தை.

அத்தையின் வாழ்க்கையில் நடந்தது என்ன என்பது போகப் போக– சொர்ணம் சொல்லக் கேள்விதான்.

"அத்தை இருக்கிற வரைக்கும், இடுப்பைவிட்டு இறக்கமாட்டா, உன்னை. காதல் வந்து, எல்லாப் பாசத்தையும் வாரிட்டுப்போச்சு."

"அப்படிப் போனாளே... அவளாவது நல்லா இருந்தாளா? கல்யாணமாகிப் போன மூணாம் வருசமே புருசன்காரன் தீராத நோயிலப் படுத்து செத்துப்போயிட்டான். தந்தி வந்தது. உங்க அப்பாவைப் போகக்கூடாதுன்னுட்டாரு, தாத்தா. அவ்வளவுதான். புருசன் போனதுக்கு அப்புறம் பொறந்த வீட்டுக்குத்தானே பொண்ணை அழைச்சிட்டு வரணும்? அதுதானே வழக்கம். உங்க தாத்தா அதுக்கும் கூடவே கூடாதுன்னுட்டாரு. உண்மையில அவருக்கு, தன் மகளை அந்தக் கோலத்துலப் பார்க்கப் பிடிக்கலே. அதான் உண்மை."

"நவநீதமும் லேசுபட்டவரில்லே. உசிரே போனாலும்

பொறந்த வீட்டுலேயிருந்து அழைப்பு வராம, வரமாட்டேன்னு சொல்லிட்டாளாம். எந்த வேளையில சொன்னாளோ மகராசி, வராமலே ஒருநாள் கண்ணை மூடிட்டா. உங்க தாத்தாவும் அதேநேரத்துல உசிருக்கு இழுத்துட்டுக் கிடந்தார். உங்கப்பா மட்டும் தங்கச்சி போனதுக்கு அப்புறம் ஒரு மாசம் கழிச்சுப் போனாரு... அப்பவும் அவங்க வீட்டுக்குப் போகலே. ஒரு ஓட்டல்லே தங்கிட்டு போன் செஞ்சிருக்காரு. உங்க அத்தையோட மச்சினரும் அவங்க குடும்ப டாக்டரும் ஓட்டலுக்கே வந்து பார்த்து, ஆஸ்பத்திரி செலவு ஒரு லட்ச ரூபா ஆச்சுன்னு சொன்னாங்களாம். அதையும் 'செக்' எழுதிக் கொடுத்திட்டு வந்து சேர்ந்திட்டாரு. அவ்வளவுதான்."

"பெரியவங்க ஜாதகப் பொருத்தம் பார்த்து, நாள், நட்சத்திரம் பார்த்து, கட்டிவச்சாலே ஏறுமாறாப்போயிடுது. இவ, அவனைத்தான் கட்டிக்குவேன்னு ஒத்தைக்கால்லே நிக்கறப்ப, பொருத்தமாவது... வயசாவது..."

சொர்ணம் அவ்வப்போது, நாத்தினியை நினைவுகூர்வது போலச் சொல்வதெல்லாம் அரசிக்கு அதுபோல யார் மீதும் காதல், மோகம் எதுவும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான்.

"உங்கப்பா, செல்லம் கொடுத்து உன்னை குட்டிச்சுவராக்கின மாதிரிதான், உங்க தாத்தாவும் நவநீதத்தைத் தன் தலை மேலத் தூக்கி வச்சிட்டுக் குதிச்சாரு. கடைசியில, பொண்ணு மேல வந்த கோபத்துல அவளை வீசி எறிஞ்சவருதான். கடைசிவரைக்கும் அவ பேரைக்கூட உச்சரிக்காம, அத்தனை வைராக்கியத்தோடு போய் சேர்ந்தாரு. அரசி, உங்கப்பாவை அந்த நிலைக்குக் கொண்டுவந்துடாதேம்மா."

"கல்யாண விசயத்துல மட்டும் பெரியவங்களோட விருப்பப்படி நடந்துக்க. அதுதான் உனக்கும் நல்லது. அப்பாவுக்கும் கவுரவம்."

இத்தனைச் சொல்பவள், 'நீ அந்த எதிர்வீட்டு பாங்கி தம்பியிடம் கொஞ்சம் அளவோடு பழகு, என்றும் சொல்லி இருக்கலாம்.

சொர்ணம் ஒன்றும், எதுவுமே தெரியாத அப்பாவிப் பெண்மணியில்லை.



அவளும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறாள். ஒவ்வொரு முறையும் அரசி, எதிர் வீட்டுக்குப் போய் செந்திலிடம் வாய் அடிக்காய் பேசுவதையும், சிணுங்குவதையும் அவள் கவனிக்காமல் இல்லை. பெற்றவளாயிற்றே. மடியில் நெருப்பைக் கட்டிக்கொண்டுதான் இருக்கிறாள்.

என்றாலும், உள்ளூரக் கொஞ்சம் நிம்மதி. 'இவதான் இப்படி காணாததைக் கண்ட மாதிரி குதிக்கிறா... அந்தத் தம்பி, ரொம்பவும் அளவோடுதான் பேசறாரு. இப்படி ஒருத்தி பணமும், வயசும், அழகும் சேர, வெள்ளரிப் பிஞ்சு மாதிரி ஒருத்தனைச் சுத்திச் சுத்தி வந்தா... எவனுக்கும் மனசு தடுமாறும்தான். ஆனா, இந்தத் தம்பி–தங்கக் கம்பி. என் மகதான்...

சொர்ணம், தராசில் வைத்து அளப்பது போல் துல்லியமாய் எடை போட்டு வைத்திருந்தாள்.

அவ்வப்போது, மகள் எல்லை மீறும்போதெல்லாம், 'நறுக்'கென எதையாவது சொல்லி தலையில் தட்டியும் வைப்பாள்.

"இந்தா... சும்மா, எப்பவும் எதிர்வீட்டுலே என்ன வேலை உனக்கு? காலேஜ்விட்டு வந்தா, வீட்டுல இருப்போமா... ஏதோ பொம்பிளையா, லட்சணமா வீட்டு வேலையைப் பார்த்தோமான்னு இல்லே."

"முதல்லே உனக்கே இந்த வீட்டுல் ஒரு வேலை இல்லே. எல்லாத்தையும் தாயம்மாவும், மாதய்யனும் செஞ்சிடுறாங்க. நீ என்னைச் சொல்ல வர்றியா... நான் எதிர் வீட்டுக்குப் போறதே வேலை கத்துக்கத்தான். பூண்டு போட்டு ஒரு புளிக்குழம்பு வச்சேன் பாரு... முகிலனோடப் பாட்டி, என் கையைப் பிடிச்சு முத்தம் கொடுத்தாங்க."

"அதே புளிக்குழம்பை இங்கே செய்யேன். நானும்தான் கையைப் பிடிச்சு முத்தம் கொடுக்கிறேன்."

"அய்யே... கிழவிங்க முத்தம் கொடுக்கிறதுக்காகவா நான் சுத்தி சோப்பு போட்டு தேய்ச்சுத் தேய்ச்சுக் குளிக்கிறேன்."

"வேறு யாரு கொடுக்கணும்?"

"போம்மா.. என் வாயைப் பிடுங்கிறதே உன் வேலையாப் போச்சு."

முகத்தை ஒரு வெட்டு வெட்டி, நீண்ட பின்னலை சாட்டையாய் சுழலவிட்டு, முறுக்கிக்கொண்டு போகும் மகளை, கவலையுடன் பார்ப்பாள், அந்தத் தாய்.

'விவகாரம் பெரிசாகிறதுக்கு முன்னாலே ஒரு மூக்கணாங் கயிறைப் போட்டாகணும்.'

அவள் தவித்தாள். கணவரிடம் தன் மனசில் உள்ளதை விண்டு காட்டவும் முடியவில்லை.

இதைச் சொல்லப்போய், சட்டநாதன்பாட்டுக்கு, 'தாட்பூட்' எனக் குதித்து, எதிர்வீட்டுப் பையனிடம் போய் கத்தி, மகளுடன் பேச்சுவார்த்தையையே முறித்துக்கொண்டுவிட்டால் என்ன செய்வது?

தகப்பனின் இரத்தம்தானே மகளுக்கும்?

தன் மகளுக்கும், அவள் தகப்பனுக்கும் இடையில் சின்னதாய் பிளவு ஏற்பட்டாலும் சொர்ணத்தால் தாங்கமுடியாது.

அதனாலே, சட்டநாதனைப் போட்டு, மூட்டைப்பூச்சி போலப் பிடுங்கி எடுத்தாள்.

"அடடா... கல்யாணம்... கல்யாணம். இப்ப என்னடி வயசு அவளுக்கு? பத்தொன்பதே இன்னும் முடியலே. அவளை, புருசன் வீட்டுக்கு அனுப்பிட்டு, மொத்த பங்களாவுலேயும் ஏகபோகமா இருக்கணுமா, உனக்கு?" -இப்படிக் கத்திப் பார்த்தார்.

"சொர்ணம்... நீ சொல்லுறியேங்கிறதுக்காக, கழுநீர் பானையில கையைவிட்ட மாதிரி, எதையாவது செஞ்சு கோளாறாகிடக்கூடாது. நமக்கு இருக்கிறது ஒரே பொண்ணு. நாளைக்கு அது கண்ணைக் கசக்கிட்டு வந்து நின்னாக்க, நீயும் நானும் நிம்மதியா இருக்கமுடியுமா?" -இப்படிக் கெஞ்சிப் பார்த்தார்.

"ஆமா... கல்யாணம் பண்ணிடணும்னு குதிக்கிறியே... அவ 'டிகிரி' பாஸ் பண்ணியிருக்கா. நம்ம சொந்தபந்தங் களிலே எவனுமே எட்டாம் வகுப்புகூட தாண்டலே. ஒவ்வொருத்தனும் எண்ணைச் செக்கு மாதிரி இருக்கான். என் மக ரோஜாப்பூ மாதிரி இருக்கா. அடியே... கொஞ்சம் பொறுடீ" -இப்படியும் மிரட்டிப் பார்த்தார்.



சொர்ணம், தான் பிடித்த பிடியை விடவில்லை. எத்தனை தான் சட்டநாதன் கரடியாய் கத்தினாலும், கடைசியில் சொர்ணத்தின் வார்த்தைதான் நிற்கும்.

"அது என்னமோ தெரியாது. பள்ளிக்கூட வாத்தியாரு பெருமான்சாமியை வரச்சொல்லி இருக்கேன். இன்னிக்கு நாள் நல்லா இருக்கு. அரசியோட ஜாதகத்தை எடுத்து அவர்கிட்ட கொடுங்க. எப்ப கல்யாணம் கூடிவரும்னு ஒரு உத்தேசமாச் சொல்லச் சொல்லுங்க. அப்படியே, நம்ம குடும்பத்துக்கு ஏத்த மாதிரி படிச்ச, பெரிய இடமாப் பார்த்து அவரையே சொல்லச் சொல்லுங்க. வாத்தியாரு நாலு எடம் போறாரு, வர்றாரு. அவருகிட்ட படிச்ச பசங்க எல்லாம் அமெரிக்கா வரைக்கும் போய் சம்பாதிக்கிறாங்க. பள்ளிக்கூட வேலையைத் தவிர, தரகு வேலையும் பார்க்கிறார்தான்னாலும், ஒவ்வொரு தரகரைப் போல அநியாயத்துக்கு அளந்துவிடுகிறவர் இல்லே."

"வாத்தியாருக்கு சொல்லியே விட்டுட்டியா?"

"ஆமா."

"என்னன்னு சொல்லி அனுப்பிச்சே?" "இதுமாதிரி பண்ணை வீட்டுப் பொண்ணு அரசியோட கல்யாண விசயமாப் பேசணுமாம். அந்த வீட்டம்மா உங்களை வரச்சொல்லி அனுப்பிச்சாங்கன்னு சொல்லச் சொன்னேன். ஏன்?"

"ஏன்டீ... வீட்டுக்குள்ள உன்ராசாங்கமா இருக்கலாம். வெளியிலயாவது ஒரு மரியாதைக்காக என் பேரைச் சொல்லி, நான் கூப்பிட்டு அனுப்பிச்சதா சொல்லக்கூடாதா?"

சொர்ணம், சட்டநாதனைப் பார்த்துச் சிரித்தாள்.

"சரிதான். அம்மா கூப்பிட்டா என்ன... அய்யா கூப்பிட்டா என்ன... இந்த வீட்டைப் பொறுத்தவரைக்கும் அம்மாவும், அய்யாவும் ஒண்ணுதான்னு வாத்தியாருக்கே தெரியும்."

அன்று காலையில் வாத்தியார் பெருமான்சாமிக்கு தடபுடலாய் உபசாரம். தும்பைப்பூ போன்ற இட்லியும், தேங்காய் சட்னியும், மெதுவடையுமாய் அமர்க்களப்பட்டது.

அப்போதுதான் அரசி, முகிலனை இடுப்பில் சுமந்துகொண்டு ஒரே பாய்ச்சலாய், சாப்பாட்டுக் கூடத்தைத் தாண்டி, அடுக்களைக்குள் நுழைந்தாள்.

"தாயம்மா... வடையா சுடுறீங்க?"

**பெருங்காயம்**

பெருங்காயம் என்பது தனிப்பொருள் அல்ல. பெருலா என்னும் செடியிலிருந்து எடுக்கும் பாலுடன் கோந்தைச் சேர்த்து பெருங்காயம் தயாரிக்கிறார்கள்.

"வாத்தியாரு வந்திருக்கார இல்லே... அதான்."

"அது என்ன வாத்தியாருக் திடீர் உபசாரம்?"

தாயம்மா இதற்குப் பதிலே சொல்லவில்லை. அரசினை ஏறிட்டுப் பார்த்து, அளவா சிரித்துவிட்டு, தன் வேலையை தொடர்ந்தாள்.

அரசி, ஒரு வடையை எடுத் முகிலன் கையில் கொடுத்தாள். தானே, பாத்திர அலமா யிலிருந்து சாப்பாட்டு டப்பாவை தேடி எடுத்தாள்.

"தாயம்மா... இதுல எட்டு இட்லி, ஆறு வடை... கார சட்னி இருந்தா அதுல ரெண்டு கரண்டி, தேங்காச் சட் ரெண்டு கரண்டி உடனே போட்டுக் கொடு."

"இரும்மா... அப்பாவும், வாத்தியாரும் இப்ப சாப்பி வந்திடுவாங்க இல்லே... எதிர் வீட்டுக்கு நானே கொண் போய்க் கொடுக்கிறேன்."

தாயம்மா நாசூக்காக எடுத்துச்சொல்லியும் கேட்காம தானே எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு, ஒரே பாய்ச்சலா வாசலுக்கு ஓடினாள்.

சொர்ணம் நறநறவெனப் பல்லைக் கடித்தபடி பார்த்து கொண்டேதான் நின்றாள்.

"இது யாரு... அரசியா? என்னமா வளர்ந்துட்டா. எட்டா வகுப்பு என்கிட்டத்தான் படிச்சா. அரை மார்க்கு குறைஞ் லும் அழுது, ஊரைக் கூட்டிடுவா. இடுப்புல யார் வீட் குழந்தை?"

பெருமாள்சாமி, தன் சோடாபுட்டிக் கண்ணாடியை மூ நுனிக்கு சரித்துக்கொண்டு, கருடப் பார்வை பார்க்க...

"இன்னும் குழந்தைத்தனமே மாறலேங்க. என்னமோ, எ பெண்டாட்டியோடப் பிடுங்கல் தாளாம..." சட்டநா தழுதழுத்தார்.

வாத்தியார் கிளம்பிப் போனவுடனேயே சொர்ண மகளுக்கு ரோசம் வரும்படியாகக் குத்தினாள்:



"தலைகீழா நின்றாலும் மாப்பிள்ளை, எதிர்வீட்டுப் பிள்ளை இல்லே. அது ஞாபகமிருக்கட்டும்!"

## 4

பெருமாள்சாமிக்கு அந்த ஊரில் நல்ல பெயர்தான். இதுவரையில் அவர் பார்த்து நடத்தி வைத்தக் கல்யாணங்கள் எதுவுமே சோடை போனதில்லை.

ஆரம்பத்தில், ஆணையும் பெண்ணையும் ஜோடி சேர்த்து, இரண்டு குடும்பங்களுக்கும் இடையில் நடையாய் நடந்து, நல்லவிதமாகத் திருமணத்தை நடத்திக் கொடுத்தால், அவருக்கு புது வேட்டி சட்டையும், நூறோ, நூற்றிஐம்பதோ பணமும், வெற்றிலைப் பாக்கும் தட்டில் வைத்து, இரு வீட்டாரும் மரியாதை செய்வார்கள். கொஞ்சம் தாராள மனமுடையவர்கள், பணத்துடன் பலகாரம், பழங்களையும் ஒரு பையில் போட்டுத் தருவார்கள். இதுவே அவருக்கு ஏகபோகமாக இருந்தது.

ஆனால், இப்போது அப்படி இருக்க முடியவில்லை. குடும்பம் பெருகிவிட்டது. திடீரென, அவரது மனைவிக்கு உலகத்தில் இருக்கிற எல்லா உயர்ந்த பொருட்களின் மீது ஆசை வந்துவிட்டது.

கணவருடன், அவர் பார்த்து முடித்து வைத்த கல்யாணங்களுக்கெல்லாம் போய்வருவதன் பலன்...

"எங்க... பட்டுச்சேலைன்னா, அந்த கணக்கு வாத்தியார் சம்சாரம் கட்டிட்டிருந்தாளே... அது சேலை. 'நிருநிரு'ன்னு எப்படி இருந்தது. ஆமா அந்த ஆளும் உங்க கூடத்தானே வேலை செய்யறாரு? அவர் மாத்திரம் எப்படி இத்தனை செலவழிச்சு, பொண்ணைக் கட்டிக்கொடுக்க முடிஞ்சது?"

"அவன் அப்படியிப்படி சம்பாதிக்கிறான்டீ..."

"நீங்களும்தான் சம்பாதிக்கிறீங்க... ஒவ்வொரு கல்யாணமும் நல்லவிதமா முடியறதுக்காக, வாயிலே நுரைதள்ள ஓடுறீங்க. கடைசியில, நூறு ரூபாயும் தாம்பூலப் பையும்தான் மிச்சம்."

"இதுக்குமேல இதுல எதையும் எதிர்பார்க்க முடியாதுடீ..."

"ஏன் முடியாது? பெரிய எடமாய் பிடியுங்க. சும்ம ஜாதகத்தைக் கிண்டிகிட்டு இருக்காதீங்க. பொண்ணுக்கோ பையனுக்கோ ஏதாவது ஊனம், ஒச்சம் இருந்து, கல்யாணமே நடக்காதுன்னு முடிஞ்சுப்போன கேசை எடுத்து முடிச்சு காட்டுங்க. நிறைய பணம் பேசுங்க."

"அதெல்லாம் தப்பு."

"அப்ப இப்படியே ஆயுசுமுழுக்க உட்கார்ந்திருங்க. சர்க்கரை நோய் வேறு வந்தாச்சு. கல்யாணத்துல கொடுக்கிற லட்டு அதிரசத்தைக்கூடத் திங்க முடியலே... நாளைக்கு, கேட் நாதியில்லாம, கட்டிலிலே கிடந்தா, யாரு வைத்திய பார்க்கிறது?"

"அட, போனா போவிட்டுப் போறேன், பிள்ளைய குட்டியா?"

"அதுசரி... உங்களுக்கென்ன? போய்ச் சேர்ந்துடுவீங் நானில்லே. சந்தியில நிற்கணும்."

பல நேரங்களில் நல்ல சுபாவமுடைய ஆண்கள்கூட, தட மாறுவது, வீட்டுப் பெண்களின் பேராசையினாலும், தவ செய்ய தூண்டுகோலாக இருப்பதினாலும்தான். ஆனால், இ எங்கே மனைவிகளுக்குப் புரியப்போகிறது?"

பெருமாள்சாமியின் மனைவி காளியம்மாவுக்கு பணம்தா முக்கியம். கணவன் பார்த்து, சேர்த்து வைத்த ஜோடிகளி திருமணத்துக்குப் போய்விட்டு, வயிறுமுட்டத் தின்றுவிட் வெற்றிலையைக் குதப்பிக்கொண்டு, சாப்பிட்டு கை கழுவிய ஈர உலர்வதற்கு முன்பாகவே, புருசனை வார்த்தைகளா இடிப்பாள்.

"என்ன... அப்படியே பூரிச்சுப்போய் நிக்கிறே? இந் கல்யாணத்துல, இலையில மிச்சம் வச்ச பண்டங்கள்க ஆயிரக்கணக்கான ரூபாய் பெறும். உனக்கு என்ன கொ தாங்க? இருநூறு ரூபாய் பணம். எனக்கு தாம்பூலப் பைய ஒரு ரவிக்கைத் துணி. அதுகூட கைக்குட்டை அளவி தேவையா எனக்கு?"

அவள் ஏளனமாய் சொல்லிக் காட்டியோ என்னவோ கொஞ்சம் கொஞ்சமாய் பெருமாள்சாமியும் தன்ன மாற்றிக்கொள்ள ஆரம்பித்தார்.



பள்ளிக்கூடத்தில்கூட, நன்றாகப் படிக்கும் மாணவனைப் பாராட்டி, தட்டிக்கொடுப்பதை நிறுத்திக்கொண்டார். ஆமாம்; அதனால் அவருக்கு என்ன லாபம்? என்ன நட்டம்?

படிக்கிற பிள்ளை, யாருடைய ஊக்குவிப்பையும் எதிர்பாராமல், தனக்குத்தானே படித்து, முன்னேறும்.

ஆனால், படிக்காத, படித்தாலும் மண்டையில் ஏறாதப் பிள்ளைகளிடம்தான் அவர் முழு அக்கறை காட்டுவார். ஒரு ஆசிரியர் செய்யவேண்டிய பணிதான், அது.

இப்போது, புரியாதப் பாடங்களைப் புரியவைப்பதற்குப் பதிலாக, பிள்ளைகளின் பெற்றோரை அழைத்துப் பேசுவார்.

"இந்த வருசமும் பெயிலானா, உங்க மகனுக்கு டி.சி. கொடுத்து அனுப்பிடுவாங்க. நீங்களே பாருங்க. தென்னை மரத்துலப் பாதிக்கு வளர்ந்து நிக்கறான். இவன்கூடப் படிச்சவனெல்லாம், காலேஜ், பாலிடெக்னிக்குன்னு போயிட்டாங்க. இவன் இன்னும் எட்டாம் வகுப்பிலே பல்டி அடிச்சிட்டிருக்கான்."

"........."

"எனக்கு உங்க குடும்பத்தைத் தெரியும். படிப்பு இல்லைன்னாலும் ஊருக்குள்ள உங்களுக்குன்னு நல்ல பேரு. யாரைக் கேட்டாலும், 'அவரா'ன்னு, இடுப்புலத் துணியைக் கட்டிட்டுக் கேட்கிறாங்க. இவன் இப்படி இருந்தா, நாலு பேர் முன்னாலே, உங்களுக்குத்தானே அவமானம்? யோசியுங்க."

"அதுக்கு... நான் என்ன செய்யணுங்க?"

பெற்றவர் கொஞ்சம் இறங்கி வருவார். உடனே, இவர் 'ப'பென பிடித்துக்கொள்ளுவார்.

"என்ன இப்படி கேட்டுட்டீங்க? நீங்கதான் ஏதாவது செய்யணும். டியூசன் வையுங்க."

"எங்க தெருவுல ஒரு டியூசன் சென்டர் இருக்குது. அதுல சேர்த்துவிடட்டுமா?"

"அய்யய்யே... வேற வினையே வேண்டாம். அங்கே படிப்பா சொல்லித் தர்றாங்க? எல்லாப் பசங்களும் தெரு முனையில் ஒண்ணுக் கூடி நின்னுட்டு, 'தம்' அடிக்கிறதும், போற வர்ற பொண்ணுங்களை 'சைட்' அடிக்கிறதும்... நல்லவேளை கேட்டீங்க."

"அப்ப... தெற்கு மாடவீதியில் பழைய வாத்தியா சோமசுந்தரம் இருக்காரே... எனக்குத் தெரிஞ்சு, நாலஞ் பிள்ளைங்க அங்கிட்டுத்தான் படிக்கிறாப்பல..."

"அனுப்பலாம்தான். அய்யாவை எனக்கும் தெரியும் தங்கமானவரு. ஆனா, அவருகிட்ட படிக்கிற குழந்தைங்க, ஏதோ ஓரளவுக்கு மார்க் வாங்குறவங்க. 'பிளஸ் டு'வில் நல்ல மார் எடுக்கணும்னு போறாங்க. உங்க பையன் ஏதோ, பாஸ் மார் வாங்கி வெளியில வந்தாலே பெரிசு."

"........."

"அட... அப்படியே பாஸ் மார்க்கூட வாங்கலைன்னாலு கூடக் குறைச்சுப் போட்டு, அடுத்த கிளாசுக்கு அப்படியே தூக்கிப் போட்டுடணும். எத்தனை வருசம்தான் ஒ பெஞ்சைத் தேய்ச்சுட்டு உட்கார்ந்திருப்பான்? அதுமாதி வேலையெல்லாம் சோமசுந்தர அய்யா செய்யமாட்டாரு. அவ ஒரு மாதிரிங்க... இதுபத்தியெல்லாம் அவர்கிட்டப் பேச முடியாது. கொள்கை, லட்சியம்னு காந்தி காலத்துலே வாழுறவரு

"வேற... பேசாம நீங்களே டியூசனை எடுங்களேன். மார் போதல்லைன்னாலும்..."

"அய்யய்யோ... என்னை மாட்டிவிடப் பார்க்கிறீங்களே விசயம் வெளியே 'லீக்' ஆச்சு. மிச்சம் இருக்கிற பத்து ஆண் வேலை, தலைமை ஆசிரியர் கனவு எல்லாம் தூள்தூளாயிடும்

இதற்குப்பின், பையனைப் பெற்றவர், பெருமாள்சாமியி கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்வார். அவர், கொஞ்ச திமிறுவது போல நடிப்பார்."

"விடுங்க... அட, விடுங்க சார்."

"நீங்க அப்படி சொல்லிடக்கூடாது. என் மகனோ எதிர்காலமே உங்க கையிலதான் இருக்கு. பையன் மட்டு பாஸ் பண்ணிடட்டும். நீங்க கேட்கிற தொகையை கொடுக்கிறேன்."

"பணமா சார் பெரிசு? 'உங்க பையன்'னு நாலு பே இதேமாதிரி தோளில் கிடக்கிற துண்டை, இடுப்புல கட்டிட் மரியாதை செலுத்த வேண்டாமா? எனக்கு அதுதான் வேணு சரி, பையனை டியூசனுக்கு ஒழுங்கா அனுப்பி வையுங்க. நா நாலஞ்சு பிள்ளைங்களுக்கு வீட்டுல பாடம் சொல்



தர்றேன்தான். அவங்களுக்கெல்லாம், உங்க பையனை நான் பாசாக்கிறதுக்கு ஒத்துகிட்ட விசயம் தெரியவேணாம். தெரிஞ்சா, என் பேர் நாறிடும்."

"அய்யோ... அய்யோ... சொல்வேனா? சரி, டியூசன் பீஸ்?"

"அதெல்லாம் ஆண்டு கடைசியில மொத்தமாவாங்கிக் கிறேன். நீங்க எங்கே போயிடப்போறீங்க? இல்ல நான்தான் எங்கே போயிடப்போறேன்? சரி, பையன் வர்றப்ப வெறுங்கையா வரவேண்டாம். பத்து, இருபது கிலோ அரிசி, உங்க தோட்டத்துல கத்தரியும் வெண்டையும் பிஞ்சு பிஞ்சாக் காய்க்குமே... தேங்காகூட காய்க்கு இல்லே? போக வர்ற பார்த்திருக்கேன்."

"ஆகா... அதெல்லாம் ஒரு பெரிய சமாசாரமா? தேவையானதைக் கூச்சப்படாமக் கேளுங்க. பையன் மட்டும் பாஸ் பண்ணட்டும். நான் சொன்ன சொல் மாறமாட்டேன்."

"அது தெரியாதா? ஏதோ பத்தாப்பு வரைக்கும் தள்ளிவிட்டுடுவேன். உங்க பையனுக்கு அதுவே பெரிய படிப்பு. அப்பாலே, நீங்கதான் பார்த்துக்கணும்."

மேற்கண்ட முறையில்தான் பெருமாள்சாமி நிறைய சம்பாதித்தார்.

எந்தப் பையனிடமும் மாதச் சம்பளமாக, கைநீட்டிப் பணம் வாங்குவதில்லை. மளிகையாகவும், பாலாகவும், காய்கறியாகவும் வந்தவண்ணம் இருக்கும். இதனால் பள்ளியில் வாங்கும் சம்பளம் மொத்தமாகக் கையில் மிச்சம் இருக்கும்.

பற்றாக்குறைக்கு தரகு வேலை.

இப்பொழுதெல்லாம், சுலபமாய் நடக்கும் திருமணங்களைவிட, பிரச்சினைக்குரிய, சவாலானத் திருமண வேலைகளைத்தான் கையில் எடுத்துக்கொள்கிறார்.

விவாகரத்தானப் பெண்ணுக்கு ஏற்ற மாப்பிள்ளையைத் தேடித் தருவது... குடிகார மாப்பிள்ளையை தருமபுத்திரன் என்று வர்ணித்து, பெண் வீட்டாரை வளைத்துப்போடுவது... கேட்டால், கல்யாணத்துக்குமுன், தம்பி ரொம்பவும் சாதுங்க... இப்பத்தான் இப்படி. எதுக்கும் ஒரு பிராயசித்தம் பண்ணிடலாம்' என்பது.

பெண்ணிடம் தனிப்பட்ட முறையில், 'அம்மா, புருசன்னா

அப்படி இப்படித்தான் இருப்பான். நீதான் பார்த்து நடந்துக்கணும். நளாயினி, சீதாதேவி, இராவணன் சம்சாரம் மண்டோதரி இவங்க எல்லாம் பொறுமையா, புருசனை விட்டுக்கொடுக்காம இருந்ததுனால்தானே இன்னிக்கும் பேசப்படுறாங்க. அதுமாதிரி நீயும் இருந்தா, ஒருநாள் இல்லாட்டி ஒருநாள் உன் துன்பமெல்லாம் தீர்ந்துடும்' -இப்படிச் சொல்லி...

அத்தனை ஏன், அரசி- சில நாட்களுக்கு முன்பு செந்திலிடம் கூறினாளே... மரக்கடை மாணிக்கம்... அவருக்கு வயது ஐம்பதுக்கு மேலாகிறது. முதல்தாரம் போய், இரண்டாம் தாரத்துக்கு பெருமாள்சாமியிடம்தான் சொல்லி வைத்திருந்தார். அவருடைய அதிருஷ்டம், ஓர் ஏழை குமாஸ்தாவின் மூத்த மகள்... இருபத்திமூன்று வயசில், அல்வாத் துண்டு மாதிரி...

பெருமாள்சாமிதான், அந்த குமாஸ்தாவின் மனசை, நெருப்பிலிட்ட மெழுகாய் கரைத்து, மகளை இந்தக் கிழவருக்கு முடித்து வைத்தார்.

இத்தனை விலங்கங்கள் உள்ளே இருந்தாலும், விவரம் புரியாதவர்கள், இவரை, பழைய பெருமாள்சாமியாகவே மதித்து, தங்கள் குழந்தைகளுக்கும் தகுந்த வரனைக் கேட்டார்கள்.

சொர்ணம்கூட அப்படித்தான். சட்டநாதனைப் பொறுத்தவரையில், தன் ஊரைச் சேர்ந்தவர்களிடம் அபார அன்பு. பத்திரிகைகளில்கூட, எங்கேயாவது மிகச்சிறந்த மாணவன் என்றோ, 'ஐ.ஏ.எஸ்.' அதிகாரி என்றோ, சிறந்த விளையாட்டு வீரன் என்றோ செய்தி வந்திருந்தால் உடனேயே, அவர் தன் ஊர்க்காரரா என்று பார்ப்பார். அத்தனை மண்பற்று.

அப்படிப்பட்டவருக்கு, தெரியாத வெளியிடத்துத் தரகர்களிடம் போய் மாட்டிக்கொள்வதைவிட, தங்கள் ஊர்க்காரர், விசுவாசி, பள்ளிக்கூட வாத்தியார், அவரிடம் தங்களது அருமைப் பெண்ணின் புகைப்படம், ஜாதகம் இவைகளைத் தருவதில் எந்தவித மறுப்பும் இல்லை.

மனைவியைப் பாராட்டக்கூடச் செய்தார்:

"என்னைவிடவும், சில நேரங்களில் நீ புத்திசாலித்தனமா நடந்துக்கிறே சொர்ணம். அதை நான் ஒத்துகிட்டுத்தான்



ஆகணும்."

"போதுமே. எல்லாம் நீங்க சொல்லிக் கொடுத்ததுதான். உங்களுக்கு இல்லாத புத்திசாலித்தனமா? அதுமாதிரியெல்லாம் பேசாதீங்க."

இப்படி இந்த இரு வயதானக் குழந்தைகளும் ஒருவரை ஒருவர் பாராட்டிக்கொண்டிருக்க...

பெருமாள்சாமி, தன் மனைவி காளியம்மாவிடம் அங்கலாய்த்துக்கொண்டிருந்தார்.

"பாரு... லட்டு மாதிரி பொண்ணு. சொத்து, சுகம், காசு, கரை கணக்கே இடையாது. சட்டநாதன் மாளிகையைப் பார்த்திருக்கே இல்லே? சும்மா, பளிங்குத்தரை பளபளக்கும். கதவு ஒண்ணே ரெண்டு லட்ச ரூபாய் பெறும். அத்தனையும் பர்மா தேக்கு. என்னையும் தனக்கு சமமா உட்கார வச்சி, இலை போட்டு கேசரி என்ன... இட்லி வடை என்ன... சும்மா அமர்க்களப்படுத்திட்டாரு... காப்பியை வெள்ளித் தம்ளரில்தான் கொடுத்தாங்கன்னா பார்த்துக்க. அவர் வீட்டுப் பொண்ணுக்கு நல்ல மாப்பிள்ளையாகத் தேடுற பொறுப்பை என்கிட்ட விட்டிருக்காரங்க. அழைச்சு வச்சுப் பேசினதுக்கே, வெத்தலைப் பாக்கு பழத்தோடு ஆயிரம் ரூபா நோட்டை வச்சுக் கொடுத்தாங்க சட்டநாதன் சம்சாரம். கூடவே, 'இது அச்சாரம்தான் வாத்தியாரய்யா... இன்னும் போகப் போக என் கையாலே எவ்வளவோ வாங்கிக்கப் போறீங்க'ன்னு வேற சொல்லிக் கொடுத்தாங்க மகராசி."

காளி, கணவரிடமிருந்து அரசியின் புகைப்படத்தை வாங்கிப் பார்த்தாள். விழிகள் வெளியே தெறித்துவிடும் போல வியந்தாள்.

"பொண்ணு எலுமிச்சம்பழம் மாதிரி நல்லாத்தான் இருக்கா. ஆமா, இதுக்கேத்த எடம் எங்கே போய் தேடப்போறீங்க?"

"அதுதான் கவலையா இருக்கு. பண்ணை வீட்டம்மா என்னன்னா இந்த சித்திரைக்குள் பொண்ணு கல்யாணத்தை முடிச்சிடணும்னு ஒத்தைக் காலுல நிக்கிறாங்க."

"என்ன அவசரமாம்? பொண்ணு ஏதாவது காதல், கீதல்னு சிக்கலில் மாட்டியிருக்கோ? ஏன் கேட்கிறேன்னா, காலேசுல படிச்ச பொண்ணாச்சே?"

"சேச்சே... அதெல்லாம் பேசப்படாது. ஆனா, பொண்ணு

கொஞ்சம் வாயாடிதான். எங்கிட்டத்தானே படிச்சா: என்னமா அழுது, அழிச்சாட்டியம் செய்வா. அடேயப்பா..."

"அப்ப வாயாடிக்கு ஏத்த வல்லடியா இருந்தாத்தான் சரிபட்டுவரும்."

"அய்யய்யோ... வேண்டாம், காளி. பெரிய எடத்து விவகாரம். நல்ல படிச்ச, பணக்கார எடத்துப் பையனா கிடைச்சா, பண்ணையார் பத்தாயிரம் ரூபாய்கூடத் தருவாரு."

காளி, அதுநேரம் வரையில் கடைவாயில் அடக்கி வைத்திருந்த வெற்றிலைச் சக்கையைத் துப்பிவிட்டு வந்து, 'கடகட'வென ஒரு சொம்பு தண்ணீரைக் குடித்துவிட்டு, கணவனைப் பார்த்துச் சிரித்தாள்.

"அவ்வளவுதான் தருவாரா?"

"ஏய்... அதிகமா ஆசைப்படுறே? ஒரு மாப்பிள்ளை பார்த்துக் கொடுக்கிறதுக்கு, இதைவிட எவன் தருவான்?"

"ஏன்ய்யா... அந்தக் குடிகார மாப்பிள்ளை வீட்டுக்கு பொண்ணு பார்த்துக் கொடுத்தீங்களே... எவ்வளவு தந்தாங்க?"

"அது... விசயம் வெளியில தெரியாம இருக்க பதினைஞ்சாயிரம் கொடுத்தாங்க."

"மரக்கடை மாணிக்கம்?"

"ஏன்டி... கிழவனுக்கு யாரு இப்படியாப்பட்ட பொண்ணைக் கொடுப்பாங்க? ஏற்கெனவே, மாணிக்கத்துக்கு சர்க்கரை நோய். வாயில மொத்தமே பதினைஞ்சு பல்லுதான் தேறும். பச்சைத் தண்ணி உடம்புலப் பட்டா குளிர், காய்ச்சல் வந்துடும். இத்தனையையும் மறைச்சு, அந்தாளை கதாநாயகன் மாதிரியில்ல உசத்தி வச்சுப் பேசி, கல்யாணத்தை முடிச்சு வச்சேன். மனுசன் இருபத்தஞ்சாயிரம் கொடுத்தான். இங்கே சட்டநாதன் பொண்ணுக்கு என்ன குறைச்சல்? அத்தனைச் சொத்துக்கும் ஒரே வாரிசு. அவங்க வரன் தேடுறாங்கன்னு வெளியில தெரிஞ்சாலே, பையனைப் பெத்தவங்க வரிசையில் வந்து நிற்பாங்க. அப்படியெல்லாம் வேண்டாம்னுட்டுத்தானே, என்னைக் கூப்பிட்டு..."

"சரி. உங்களுக்கு என் பெரியம்மா மக சவுந்தரத்தைத் தெரியுமா?"

"யாரு... பெரிய எடத்துல வாழ்க்கைப்பட்டு, கல்கத்தாவுல



இருக்காளன்னு சொல்லுவியே... அவளா... அவளுக்கு கண்ணைக் கண்டாலே ஆகாதுன்னு சொல்லி இருக்கியே... பணக்காரங்ககூடத்தான் பேசுவாள்னு வேறு சொல்லி இருக்கே. நான் மறக்கலே."

"அவ இப்ப கல்கத்தாவுல இல்லே, பெங்களூருக்கு வந்துட்டா. போன மாசம் எங்க பெரியம்மா செத்த துக்கம் விசாரிக்க எங்க கிராமத்துக்குப் போயிருந்தேனில்லே? இவதானே எங்க பெரியம்மாவுக்கு மூத்த பொண்ணு. பிடிக்கிறதோ இல்லையோ கட்டிப்பிடிச்சி அழுதுட்டு வந்தேன். அப்பத்தான் சொன்னா..."

"என்னன்னு?"

"தன்னோட ஒரே மகன் செல்வத்துக்கு ஒரு கல்யாணத்தைச் செஞ்சு, அதை என் அம்மா பார்க்காமப் போயிட்டாங்களேன்னு அழுதா. அந்த செல்வத்துக்கு இதுவரைக்கும் நூத்துக்கு மேல வரன் பார்த்துட்டாளாம், சவுந்தரம். ஒண்ணுமே தோதுப்பட்டு வரலைன்னு சொல்லி அலுத்துகிட்டா. நான் வேணுமானா, என் புருசன் காதுலப் போட்டு வைக்கிறேன்னு சொன்னேன்."

காளி, கணவனை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, கொஞ்சம் எகத்தாளமாய் சிரித்தாள்.

"அவளுக்கு பெரிய கோடீசுவரன் வீட்டு சம்பந்தம் வேணுமாம். இதுக்காக மும்பை, கல்கத்தா, டில்லியில் இருக்கிற தரகர்கள்கிட்ட எல்லாம் சொல்லி வச்சிருக்காளாம். என்னமோ கம்ப்யூட்டரிலே தனி 'வெப்சைட்'டாமே... அதுலக்கூட கொடுத்திருக்காளாம். உங்க வீட்டுக்காரர் எல்லாம் எங்க தகுதிக்குப் பார்க்க முடியாது. அநாவசியமா சிரமப் படாதேன்னா."

"அப்ப விட்டுத்தள்ளு."

"என்ன இப்படி சொல்லிட்டீங்க? சவுந்திரமும் அவ புருசனும் சரணம் போட்டாக்கூட இந்த மாதிரி மருமக கிடைக்காது. இதுக்கு முன்னாடி அவ எந்த மூலை?"

"ஏன்டீ... அவளும் பெரிய பணக்காரிதானே?"

பெருமாள் அப்பாவியாய் கேட்டார். காளி, உதட்டைப் பிதுக்கியபடிச் சொன்னாள்:

"நானும் அப்படித்தான் நினைச்சேன். உண்மையிலே சவுந்தரத்தோட புகுந்த வீட்டுச் சொத்து, பல கோடிக்கு மேல தேறும். அத்தனையையும் இவளும், இவ புருசனும் உட்கார்ந்து தின்னு அனுபவிக்கலாம். சவுந்தரத்தோடப் புருசன் வேதாசலம் இருக்காரே... அவருக்கு ஒரு அண்ணன் இருந்தாரு... தம்பி கல்யாணத்துக்கு அப்புறம் தாமதமா ஒருத்தியைக் கட்டிட்டு இறந்தும் போயிட்டாரு. அந்தப் பொம்பிளையும் இறந்துட்டதாக் கேள்வி. சொத்து முழுக்க இவங்க மகன் செல்வத்துக்குத்தான் வரணும். ஆனா, சவுந்தரத்தோட மாமனார், 'தன் பேரனுக்கு கல்யாணமாகி, அவனுக்குப் பொறக்கப்போற குழந்தைங்களுக்குத்தான் சொத்து'ன்னு எழுதி வச்சிட்டுப் போயிட்டாரு. அத்தனையும் அவர் சம்பாதிச்சது. அதனால, ஒழுங்கான வாரிசு இல்லாட்டி, அத்தனையும் அநாதைங்களுக்குத்தான் போய்ச்சேரும்."

"இதுல என்ன சிக்கல்? பையனுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணிட்டா, அடுத்த வருடமே 'குழந்தை."

"கல்யாணத்தைப் பண்ணிட்டாத்தானே? அவனுக்கு ஏற்கெனவே ஒருத்தி மூலமா குழந்தை இருக்கிறதாக் கேள்விப்பட்டேன். ஆனா, அது செல்லாது" –காளி சிரித்தான்.

பெருமாள் மலைத்தார்.

## 5

பட்டுச்சேலைத் தலைப்பினால், தன் கண்களை அழுந்தத் துடைத்தபடி செந்திலின் எதிரில் நின்றாள், சொர்ணம்.

மீனாட்சி, பீதியில் முகம் வெளுத்து நின்றாள்.

"தம்பீ... நீங்கதான் அரசிக்கு புத்தி சொல்லணும். அடமா நிக்கறா. பதினெட்டு வருடத்துக்கு முன்னாலே இதே வீட்டுல, என் நாத்தி இப்படித்தான் அழும்புப்பிடிச்சிட்டு நின்னா... இப்ப இவ. இவளோட அப்பாவுக்கு மட்டும் இது தெரிஞ்சது... வீடே ரெண்டாயிடும்."

செந்திலுக்கு, சொர்ணம் என்ன சொல்ல வருகிறாள் என்பது புரிந்தது. அதே நேரம், அவளை எந்தவிதத்தில் சமாதானம் செய்வது என்றும் புரியவில்லை.

"நீங்க என்ன சொல்றீங்க?"

அவன் பரிவுடன் கேட்க, அவள் மறுபடியும் கண்ணையும் மூக்கையும் ஒருசேரத் துடைத்துக்கொண்டே தழுதழுத்தாள்.

"எங்க வீட்டுக்காரர் நல்ல மனுசர்தான். இளகின சுபாவம்தான். அதுவும், அரசி விசயத்துல, அவ என்ன சொன்னாலும் அவர் கேட்பார். எதைக் கேட்டாலும் உடனே வாங்கித் தந்திடுவார். இப்பக்கூட அவளை, இன்னும் பெரிய படிப்பு படிக்க வைக்கணும்னுதான் ஆசைப்பட்டார். நான்தான், கல்யாணத்துக்கு..."

"படிச்சிருக்கலாமே... அதுக்குள்ள கல்யாணத்துக்கு என்ன அவசரம்?"

செந்திலின் உதடுகள்தான் இதைக் கேட்டதே தவிர, அவனது உள்ளத்துக்கு மிக நன்றாகத் தெரியும்.

'அரசிக்கு இனிமேல் படிப்பதற்கு ஆசை வராது. அவளது மனசு முழுக்க நான்தான் நிறைந்திருக்கிறேன். இப்படி எல்லாம் தெரிந்து வைத்துக்கொண்டு, ஒன்றுமே தெரியாதவன் போல வேடம் போடுவது எத்தனை மோசமான செயல்?'

சொர்ணம், எதையும் லட்சியம் செய்யவில்லை. ஏற்கெனவே, தன் தங்கையின் காதலால் சட்டநாதன் எப்படியெல்லாம் நொந்துபோனார் என்பதைச் சொன்னாள்.

"அரசிக்கு இவர் இப்ப கொடுக்கிற செல்லமெல்லாம் ஒண்ணுமேயில்லே தம்பி. இவரோடத் தங்கையை, தங்கத் தாம்பாளத்துல வச்சுதான் தாங்கினார். இவர் அப்பாவுக்கு, தன் பொண்ணு மேல அளவிடமுடியாதப் பாசம். எல்லாத்தையும் ஒருநாள் தூக்கியடிச்சிட்டு, காதலிச்சவனைத்தான் கட்டுவேன்னு அடம்பிடிச்சு, அப்படியே கட்டிட்டுப்போய்ச் சேர்ந்தா."

"........."

"கடைசியில அவ புருசனும் செத்துட்டாரு. அதே துக்கத்துல அவளும் போய்ச் சேர்ந்துட்டா. தங்கச்சி செத்து ஒரு மாசம் கழிச்சு, அவ வாழ்ந்த ஊருக்குப் போய், ஓட்டலில் தங்கி, தங்கச்சியோட வைத்திய செலவுக்கு ஆனப் பணத்தைக்

கொடுத்துட்டு வந்திருக்காரு இவரு. இந்த வயித்தெரிச்சல் எங்கேயாவது நடக்குமா?"

"........."

"இப்ப இவ அதுமாதிரி கிளம்பி இருக்கா. இவளுக்கு நாங்க பார்க்கிற மாப்பிள்ளை வேண்டாமாம். உங்களை... உங்களைத்தான் கட்டிப்பாளாம். முகிலனைத்தான் தன் முதல் குழந்தையா மனசார தத்து எடுத்துகிட்டாளாம். தத்துபித்துன்னு பேசறா."

"உங்களுக்கு ஒரு குறைச்சலும் இல்லே. அழகு இருக்கு படிப்பு இருக்கு. நல்ல உத்தியோகம் இருக்கு. சொத்து சுகம் இல்லைன்னாலும் அது எங்ககிட்ட ஏகபோகமா இருக்கு அட, என் மகளை ரெண்டாந்தாரமாக் கட்டிக்கொடுக்கிறதைக்கூட நான் பெரிசா நினைக்கலே. ஆனா..."

அவள் கொஞ்சம் நிறுத்தினாள். செந்தில் மட்டுமல்லாது மீனாட்சியும் இதயம் படபடக்க அவள் அடுத்து என்ன சொல்லப்போகிறாள் என்பதையே எதிர்பார்த்து நிற்க—

"ஆனா, உங்களை என் வீட்டுக்காரரே தேர்ந்தெடுத்து 'அரசிக்கு செந்தில்தான் மாப்பிள்ளை'ன்னு சொல்லி இருந்தார்னா பிரச்சினையே' இருந்திருக்காது. இப்பப்போய் சொன்னா... அவர் தாங்கமாட்டார், தம்பி. தன்னைமீறிப் போயிட்டாளேன்னு அப்படியே குமுறிடுவார். அவருக்கு ஏதாவது ஆச்சுன்னா, அப்புறம் நான் உயிரோடு இருக்கமாட்டேன்."

"அடடா... என்னங்க நீங்க?" செந்தில் படபடத்தான்.

மீனாட்சி அழுதேவிட்டாள்.

"எங்களுக்கு எத்தனையோ உதவிகள் செஞ்சிருக்கீங்க. உங்களுக்கு நல்லதுதான் நடக்கும்மா. இப்படியெல்லாம் பேசாதிங்க."

மீனாட்சி, இதைச் சொன்னதுடன் நில்லாமல், மகனைப் பார்த்து ஒரு அதட்டல் போட்டாள்:

"ஏன்டா, அரசியைக் கூப்பிட்டு புத்தி சொல்லேன். இப்படியே நட்டுவச்ச மரம் மாதிரி நின்னுட்டிருந்தா எப்படி?"

அவன் தயங்கியபடியே, சொர்ணத்திடம் கேட்டான்:

"பெரியவர் எங்கே?"



"அவரு, மாப்பிள்ளை வீட்டுக்காரங்களைப் பார்த்துப் பேச பெங்களூர் போயிருக்காரு தம்பி. நம்ம வாத்தியார் பெருமாள்சாமிக்கு ரொம்பவும் வேண்டப்பட்ட இடம்தான். அவரும் கூடப்போயிருக்காரு. 'பொண்ணு பார்க்க வாங்க'ன்னு நேரே போய் அழைக்கிறதுதானே முறை. நானும் போயிருப்பேன். இந்த மூதேவி, நானில்லாத நேரத்துல எதையாவது செஞ்சிடப்போகுதேன்னுதான் இங்கே தங்கிட்டேன்."

செந்திலுக்கு மனசுக்குள் கல் விழுந்தாற்போல ஆகிவிட்டது. அரசியை அழைத்து, சமாதானப்படுத்துவதற்காக எழுந்தவன், என்னவோ தெரியவில்லை— கால்கள் வலுவிழந்தாற்போல உட்கார்ந்துவிட்டான்.

"என்ன தம்பி?"

"ஒண்ணுமில்லே. அவளை, நான் கூப்பிட்டேன்னு சொல்லி, இங்கே அனுப்பி வையுங்களேன்."

"வரமாட்டா தம்பி. மாடியில, அவளோட அறையிலதான் உள்ளே கதவைத் தாழ் போட்டுக்கிட்டு அடைஞ்சு கிடக்கா. நீங்க, முகிலனை எடுத்திட்டுப்போங்க. அவனைவிட்டுக் கூப்பிடச் சொல்லுங்க. ஓடிவந்து கதவைத் திறப்பா. குழந்தையைக் காக்க வைக்கமாட்டா."

கேட்டதுமே செந்திலின் விழிகளில் 'மளுக்'கெனக் கண்ணீர் சுரந்தது.

அரசி, வேறு ஒருவனை மணந்து, அவனுடன் குடும்பம் நடத்தப்போய்விட்டால், தன்னைவிடவும் ஏங்கிப்போகப் போவது முகிலன்தான் என்பதை நினைக்கும்போதே, துக்கம் தொண்டையை அடைத்தது, அவனுக்கு.

இன்றைக்கு விமலா உயிரோடு இருந்திருந்தால், தன் மகன் மீது எத்தனை அன்பைப் பொழிவாளோ... அத்தனை அன்பை, பாசத்தை இந்த சிறு பெண் மழை போலக் கொட்டுகிறாள்.

இதையெல்லாம் நினைத்துப் பார்க்கையில், இந்த சட்டநாதனுக்கு, தன் கண்ணெதிரே இருக்கும் மனிதனிடம் ஏன் கேட்கத் தோன்றவில்லை என்ற ஊமைக் கோபம்கூட செந்திலுக்குள் விசிறியது.

கூடவே, அவர் எப்படி, இரண்டாம் தாரமாய் தன் மகளை

ஒருவனுக்கு தாரைவார்த்துக் கொடுப்பார் என்கிற எண்ணமும் எழுந்தது.

கூடத்தில் விளையாடிக்கொண்டிருந்த மகனைத் தூக்கிக் கொண்டு, கால்கள் பின்னலிடத் தயங்கித் தயங்கி, சட்டநாதன் வீட்டு மாடிக்குச் சென்றான், அவன்.

இதுவரையில் அதிகமாய் செந்தில், இவர்கள் வீட்டு மாடிக்கு வந்ததில்லை.

ஒருமுறை, தன் மகன், அரசியின் பக்கத்தில் படுத்துத் தூங்கிவிட்டதைக் கேள்விப்பட்டு, எடுத்துப்போக வந்திருக்கிறான்.

"பரவாயில்லே... இங்கேயே தூங்கட்டுமே..."

"வேண்டாம், இராத்திரியில் அப்பா வேணும்னு அழுவான். சமாளிக்க முடியாது."

அப்பொழுது அவள் சிரித்தாள்.

"பரவாயில்லே... அவனுக்கு நீங்க வேணும்னா அழுதாவது காரியத்தைச் சாதிச்சுக்கிறான். எனக்குத்தான் என்ன செய்யறதுன்னு தெரியல்லே..."

குழந்தையைத் தூக்கப்போனவன், திடுக்கிட்டுத் திரும்பினான்.

"ஏய்... என்ன சொல்றே?"

"உம்... சொல்றேன்... சுரைக்காய்க்கு உப்பில்லைன்னு"

—அவள், 'வெடுக்'கெனச் சொன்னாள்.

முகிலனைத் தூக்கி தோளில் போட்டபோது, அவனுக்குப் போர்த்தியிருந்த அரசியின் தாவணி ஒன்றும் கூடவே வர, குழந்தையின் தூக்கம் கலையாமல், தாவணியை எடுக்க செந்தில் முயற்சிக்க—

அரசி, செந்திலின் கையைப் பிடித்துத் தடுத்தாள்.

"இருக்கட்டும். அவனுக்கு அந்த தாவணியைத் தூக்கி மேலப் போட்டுட்டாத்தான் தூக்கம் வரும். எடுத்தா, முழுச்சுக்குவான். அப்புறமா நானே வந்து எடுத்துக்கிறேன்."

செந்தில், இப்பொழுது மாடிப் படிகளில் ஏறும்போதுகூட அந்த நினைவுகள்...

இன்றும்கூட அந்த தாவணி, அவனது வீட்டில்தான்



இருக்கிறது. முகிலனுக்குத் தூக்கம் வந்தால் ஓடிப்போய் எங்கே இருந்தாலும் அந்தத் தாவணியை எடுத்துக்கொண்டு வந்து, அதை மேலே போட்டுக்கொண்டு, தாவணி நுனியை விரலில் சுற்றிக்கொண்டேதான் தூங்குவான்.

இரவின் தனிமையில், மகன் புரளும்போதெல்லாம் அந்தத் தாவணியின் மென்மையானத் தீண்டல், செந்திலின் மனசில் தூங்கும் தாபத்தை கிளறிவிடும்.

பல நேரங்களில் காலையில் அரசியைப் பார்க்கும்போது, இதுபற்றி எரிந்து விழுந்தும் இருக்கிறான், அவன்.

"இந்தா, அந்தத் துணியை எடுத்துகிட்டுப் போ."

"ஏனாம்... அது என்ன பண்ணுது, உங்களை? அது முகிலனோடது. டேய் முகில், அப்பா அந்த தாவணியைத் தொட்டா சுட்டுப்புடுவேன்னு சொல்லுடா."

"தொத்தா துத்துபிதுவேன்."

குழந்தையின் மழலை மிரட்டலில், ஆரவாரித்து கைதட்டிச் சிரிக்கும் அரசி...

அவளுக்கும், யாரோ ஒரு பெங்களூர்காரனுக்கும் திருமணமா... நினைத்தாலே வயிற்றில் அமிலம் சுரந்தது. முன்பின் பார்த்தேயிராத அரசியின் எதிர்காலக் கணவன் மீது பொறாமை பொங்கியது. ஆனாலும், கட்டுப்படுத்திக் கொண்டான்.

"அரசி... கதவைத் திற..."

"........."

"அரசீ..."

"........."

"டேய் முகில், அரசியைக் கூப்பிடு. கதவைத் திறக்கச் சொல்லு."

"அதசீ... தித..."

சொர்ணம், தன் மகளைப் பற்றி, சரியாகத்தான் கணித்து வைத்திருந்தாள்.

குழந்தையின் குரல் கேட்டதுமே, கதவு 'படக்'கெனத் திறந்தது.

அழுது சிவந்த முகமும், கலைந்த கூந்தலும், கசங்கிய ஆடைகளுமாய்...

செந்திலிடம் முகம் கொடுத்தே பேசாமல், 'சட்'டென
முகிலனைப் பிடுங்கிக்கொண்டாள். செந்தில்தான் அவளிடம்
வலியப் பேசவேண்டியதாயிற்று.

"அரசி... என்னது இது?"

"இப்ப உங்களுக்கு திருப்திதானே? போங்க. போய் அந்த
கலைலட்சுமியைக் கட்டிக்குங்க. நான் எக்கேடு கெட்டா
உங்களுக்கு என்ன?"

ஆத்திரமும், அழுகையும் போட்டியிட மூச்சிரைத்தாள்.

"நான் கலைலட்சுமியைக் கட்டிக்கிறது இருக்கட்டும்.
அம்மாகிட்ட என்னைத்தான் கட்டிப்பேன்னு சொன்னியாமே?
அவங்க என்னைப் பற்றி என்ன நினைப்பாங்க?"

"யார் என்ன நினைக்கிறாங்கன்னு எல்லாம் பார்த்து
கிட்டிருந்தா எப்படி? மனசுக்குப் பிடிக்காதவனோடு படுக்கிறதே
தப்பு. அதுதான் உண்மையான விபசாரம். தெரியுமா?"

"ஏய்... நான் என்னிக்காவது உன்னை விரும்பறேன்னு
சொல்லி இருக்கேனா?"

"........."

"சொல்லு... நான் சொல்லி இருக்கேனா?"

"வாயைத் திறந்து சொன்னாத்தானா? அதெல்லாம்
ஆம்பிளை மனசுல என்ன இருக்குன்னு, அவனை உசிருக்கும்
மேலா நேசிக்கிற பொண்ணுக்குத்தான் தெரியும். நீங்களும்
என்னைக் காதலிக்கிறீங்க. வெளியிலச் சொல்ல பயப்படுறீங்க.
ஏன்னா, நீங்க கோழை. பயந்தாங்கொள்ளி. நான் தைரியசாலி.
சொல்றேன்."

"உஷ்... அம்மா அங்கே அழுறாங்க. பார்த்தாலே பாவமா
இருக்கு. அப்பாவுக்குத் தெரிஞ்சா, அவருக்கு மாரடைப்பே
வந்துடும்னு சொல்றாங்க."

"அம்மா சொன்னாளா... எங்கம்மா ஒரு சுயநலக்காரி.
அவளுக்கு, தன் மஞ்சள், குங்குமம் நிலைச்சிருந்தாப் போதும்.
பொண்ணோட விருப்பு, வெறுப்பு பற்றிக் கவலையே இல்லே."

ஒரு கணம் என்ன சொல்வது என்றே தெரியாமல் திகைத்து
நின்றான், செந்தில். பிறகு, மனசைக் கல்லாக்கிக்கொண்டு
சொன்னான்:

"நீ நினைக்கிறது தப்பு, அரசி. எல்லா அம்மாக்களுக்கும்



தன் மகளை, இளவயசுக்காரனுக்குக் கட்டி வச்சு, அவங்
களுக்குப் பொறக்கிற குழந்தையை எடுத்து, சீராட்டணும்கிற
இயல்பான ஆசை இருக்கும். தவிர, நீயாவே, நான் உன்னை
விரும்புறதா நினைச்சிட்டா அதுக்கு நானா பொறுப்பு?
உண்மையைச் சொல்லப்போனா, எனக்கு இன்னொரு
கல்யாணத்துல விருப்பமே இல்லே. எப்ப விமலா என்னை
விட்டுப் போனாளோ... அப்புறம் நமக்கு விதிச்சது இவ்வளவு
தான்னு..." -மேலே பேசமுடியாமல் திணறினான், அவன்.

"ஏய்... விடு... விடு சொல்றேன்..."

அவன், தன்னைச் சுற்றி இறுக அணைத்து, அழுந்த
முத்தமிட்ட அரசியை, அதிர்ச்சியுடன் பிடித்துத் தள்ளினான்.
கோபத்தில் முகம் சிவக்க, கழுத்து நரம்புபுடைக்கக் கத்தினான்:

"ச்சீ... நீ ஒரு பொண்ணா?" "இல்லேதான். நான், இந்த
முகிலுக்கு அம்மா. உங்களுக்குப் பெண்டாட்டி. ஆனா, இதை
நீங்களே எல்லார் எதிரிலேயும் சொல்லணும்."

"கண்டிப்பாச் சொல்லமாட்டேன்."

"சொல்ல வைப்பேன். இதோ பாருங்க. எனக்கு மனசுதான்
முக்கியம். இதுக்கும் மீறி, என்னை எவனுக்கோ எங்க அப்பாவும்,
அம்மாவும் கட்டிவச்சாங்கன்னா..."

அவன், திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

"என்ன... நான் சொல்ல வந்ததை இன்னும் சொல்லவே
இல்லே. அதுக்குள்ளே பயந்து நடுங்குறீங்க? அப்படின்னா
என்ன அர்த்தம்? நீங்களும் என்னை விரும்புறீங்கதானே?
அம்மாவாவது எதுக்கு உதட்டு உபசாரம்?"

"அரசி... உங்கம்மா, நான் நல்ல பதிலைக்
கொண்டுவருவேன்னு கீழே காத்துட்டிருக்காங்க."

"போங்க. போய், அரசியை நான் அடக்கி உட்கார
வச்சிட்டேன். இனிமே நீங்க காட்டுறமரம், மட்டைக்குக்கூடக்
கழுத்தை நீட்டுவாள்னு சொல்லுங்க. ஆனா, எவன் என்
கழுத்துலத் தாலி கட்டினாலும் அது வெறும் ஒரு முழக்
கயிறுதான். ஆசைப்பட்டது கிடைக்கலியேன்னு செத்தெல்லாம்
போகமாட்டேன்."

"........."

"உங்களுக்கு ரெண்டாந்தாரமா வர்றதைத்தான் எங்க





அம்மாவாலே தடுக்க முடியும். மத்தபடி, நான் எடுக்கிற எந்த முடிவையும் அவங்களாலே மாற்ற முடியாது."

"நான் வர்றேன்."

அவன், 'விருட்'டென நகர்ந்தான்.

தனித்து இருக்கும் பெண்ணிடம் எத்தனை நேரம்தான் பேசுவது? என்னதான் சொர்ணம், தன் மீது மலையளவு நம்பிக்கை வைத்திருந்தாலும் இதெல்லாம் தவறு இல்லையா?

"குழந்தையை விட்டுட்டுப் போறீங்களே... நானே வச்சுக்கவா?"

பின்னாலிருந்து அரசியின் கிண்டலானக் குரல். அவன், அப்படியே குன்றிப்போகிறான்.

அவசரமாய் முகிலனை எடுத்துக்கொண்டு, கீழே இறங்கி வந்தவனை, கூடத்திலே வரவேற்கிறாள், சொர்ணம்.

"என்ன தம்பி... என்ன சொல்றா?"

"அ... அதெல்லாம் நீங்க சொன்னபடி கேட்பாம்மா."

"அப்படியா?"

"ஆமா."

"என்கிட்ட அந்த சுத்து சுத்தினா... உங்களுக்கு நான் எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலே... நல்லவேளை, விசயம் அவ அப்பா வரைக்கும் போகாம முடிஞ்சிடுச்சு."

செந்தில் அவளைப் பார்த்து, உயிரற்ற புன்னகை ஒன்றை உதிர்த்துவிட்டு நகர்ந்தான்.

வீட்டுக்குள் நுழைந்த மகனை, கவலையுடன் பார்த்தாள், மீனாட்சி.

மகன் மறுமணம் செய்துகொண்டால், அவளைவிடவும் சந்தோசப்படக்கூடியவர் வேறு எவருமில்லை.

அரசியிடம், தன் மகனுக்கு ஈர்ப்பு இருப்பதை அவள் உணராமலும் இல்லை.

'அதற்காக எட்டாதக் கனிக்கு ஆசைப்படலாமா?'

அவனிடம் ஆறுதலாய் இரண்டு வார்த்தை பேசவேண்டும் என்றுதான் அந்தத் தாயுள்ளம் தவித்தது.

அதேநேரம், அவன் நொந்துபோய் வார்த்தைகளைச் சிதற விட்டால் என்ன செய்வது என்கிற பயமும், கூடவே எழுந்தது.

'பாவி மகன்... தன்கூட வேலை செய்யற அந்த கனகலட்சுமியா, தங்கலட்சுமியா... அவளையே கட்டிக்கக் கூடாதா? அந்தப் பொண்ணும் இவன் மேல பிரியமாத்தானே இருக்கு?'

இரவு– செந்தில் சாப்பிடாமலே படுத்தான்.

தன்னை இறுகச் சுற்றி அணைத்த அரசியின் மென்மையானக் கரங்களில் அப்போது இருந்த வலிமையும், எதிர்பாராமல் அவள் தந்த முத்தமும் அவனை இரவு முழுக்கத் தூங்கவிடவில்லை.

அந்த அணைப்பிலும், முத்தத்திலும் சத்தியமாய் காமம் இல்லை. அவனை எந்த அளவுக்கு தான் ஆழமாய் நேசிக்கிறேன் என்பதை அவள் சொல்லாமல் சொல்லிய கவிதைதான், அது.

'சே... நானே நேரே போய் அவ அப்பாகிட்ட சொல்லி இருக்கலாம். அவ சொல்லிக் காட்டின மாதிரி... கோழைதான் நான்.'

காலையில், அலுவலகத்துக்குக் கிளம்பும் அவசரத்தில், முகத்தில் சோப்பைப் பூசி, மழிக்கப்போனவன், அதைச் செய்யாது, குளிர்ந்த தண்ணீரை முகத்தில் அடித்து சோப்பு நுரையைக் கழுவிக்கொண்டான்.

என்னவோ... அவளது இதழ் பதிந்த கன்னத்தில் சவரம் செய்யக்கூட மனசு ஒத்துக்கொள்ளவில்லை.

ஏதோ, குளித்தேன் என்று பேர் பண்ணிவிட்டு, அரை குறையாய் கொறித்துவிட்டுக் கிளம்பியவனை, வாசலிலே எதிர்கொண்டழைத்தார், சட்டநாதன்.

"தம்பி... உங்களுக்காகத்தான் காத்துட்டு இருக்கேன்."

'திக்'கென்றாகியது, செந்திலுக்கு.

"எனக்காகவா?"

"ஆமாங்க. நாளைக்கு வெள்ளிக்கிழமை. நம்ம அரசியை பொண்ணு பார்க்க, மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வர்றாங்க. பெரிய எடம். பையன் பெங்களூரிலே நல்ல உத்தியோகத்துல இருக்கான். இந்த சந்தோச சமாசாரத்தை உங்ககிட்ட சொல்லிட்டு, அப்படியே நாளைக்கு ஒருநாள் நீங்க அபீசுக்கு லீவு போட்டுட்டு, என் கூடவே இருக்கணும்னு கேட்கத்தான் வந்தேன். கண்டிப்பா இருக்கணும். இது நம்ம வீட்டு கல்யாணம்."



சட்டநாதன், செந்திலின் இரு கரங்களையும் சேர்த்துப் பிடித்துக்கொண்டார்.

தன்னையும் அறியாமல் செந்திலின் உடல் நடுங்கியது.

## 6

சிவுந்திரம் மலைத்துப்போய் உட்கார்ந்துவிட்டான். வேதாசலம் ஏதோ முனி அடித்தாற்போல சோபாவோடு சாய்ந்துவிட்டார். செல்வம்தான் வானத்துக்கும் பூமிக்குமாய் குதித்துக்கொண்டிருந்தான்.

எல்லாவற்றையும் பார்த்தபடி, விடாமல் வெற்றிலைச் சீவலை மென்றுகொண்டிருந்தாள், காளி.

பெருமாள்சாமி, கூடத்தில் நடக்கும் சம்பவத்துக்கும் தனக்கும் சம்பந்தமே இல்லை என்பது போல, சாப்பாட்டு மேசையில் அமர்ந்து பூரிக்கிழங்கை வெட்டிக்கொண்டிருந்தார்.

எதுவானாலும் தன் பெண்டாட்டி பார்த்துக்கொள்வாள் என்கிற நம்பிக்கை அவருக்கு.

"ஏம்மா, இத்தனைப் பெரிய எடம் வேணும்னு நான் கேட்டேனா? தாத்தாவோட உயில்படி, எனக்கு குழந்தை பிறந்தபிறகுதான், சொத்துகளை என் பெயருக்கு மாத்தவோ, விற்கவோ உரிமை உண்டு. அவ்வளவுதானே? அதுக்கு ஏதாவது ஒரு தரித்திரம் பிடிச்ச வீட்டுல இருந்து பொண்ணை எடுக்கவேண்டியதுதானே? எதுக்குப்போய் பெரிய எடத்துல சம்பந்தம் வைக்க ஆசைப்படுறீங்க? எனக்குத்தான் ஏற்கெனவே பெண்டாட்டி, குழந்தை எல்லாம் இருக்கே?"

"அது, அப்படி இல்லே ராஜா. தாத்தாவோட உயிலில் இருக்கிற ஒரு குறிப்பை நீ கவனிக்கணும். 'என் பேரக் குழந்தைகளில் எவன், ஒழுங்கா நம்ம குலத்துல, நல்ல பொண்ணாப் பார்த்துக் கட்டிட்டு, அந்த ஒருத்தி கூடவே குடித்தனம் நடத்தி, நம்ம குலம் தழைக்க ஒரு பிள்ளையைப் பெத்துக்கிறானோ, அவன்தான் இந்த சொத்தை ஆளவும், உரிமை கொண்டாடவும் முடியும்'னு எழுதி இருக்காரு. நம்ம குடும்பத்துல நீ ஒருத்தன்

தான் வாரிசே. நீ இழுத்துட்டு வந்திருக்கிறதோ ஒரு வங்காளப் பொண்ணை. அதிலும், அவளுக்கு நீ மூணாவது புருசன். அந்தக் குழந்தையும்..."

சவுந்திரம் மேலும் ஏதோ சொல்ல வர, செல்வம் கடுப்படித்தான்.

"இதையெல்லாம் இப்படித்தான் மூணாம் மனுசங்க முன்னாடிப் பேசணுமா? வரவர உனக்கு புத்தி மழுங்கியே போச்சு. தாத்தாவோட சொத்துக்கு அவர் ஆயிரம் நிபந்தனை போட்டிருக்காரு. என்னோட பிரேமா ஏற்கெனவே பணக்காரி. நான் என்ன கேட்டாலும் தருவா. இப்பகூடச் சொல்றா– 'ஒரு கோடி ரூபா வேணுமானாலும் உங்க அம்மா மூஞ்சியில விட்டெறிகிறேன். சொத்துக்காக எவளையாவது கட்டிட்டு சிக்கலில் மாட்டிக்க வேணாம்னு."

அவன் 'மூன்றாம் மனிதர்கள்' எனக் குறிப்பிட்டது தன்னையும், தன் கணவரையும்தான் என்பது காளிக்குத் தெரியும். ஆனால், இதற்காக எல்லாம் ரோஷப்படுகிறவள் அவள் இல்லை.

இன்னும் பார்க்கப்போனால், விசயம் எத்தனைக்கெத்தனை சிக்கலாகிறதோ, அத்தனைக்கத்தனை அவளுக்கு அல்வா சாப்பிட்ட மாதிரி.

அப்பொழுதுதானே மேலும் மேலும் வலையை வீசலாம். அவள், தன் நாவில் தேனையும், வெற்றிலையில் சுண்ணாம்பையும் தடவியபடியே பேசுகிறாள்:

"கண்ணு... என்ன நீ, என்னை மூணாம் மனுசின்னுட்டே? நான், உன்னோடப் பெரியம்மாப்பா... உங்க அம்மா எனக்கு தங்கை முறை. என்ன... வயிறுதான் வேற வேற... எங்க அம்மாவும், உங்க பாட்டியும் சொந்த அக்கா, தங்கச்சிங்க."

"ஆமாடா... காளி சொல்றதைக் கேளு."

சவுந்திரம் முதல் தடவையாக, காளியைத் தனக்கு கூட்டாகச் சேர்த்துக்கொண்டாள். அதிலே தனக்குப் பெரிய கிரீடம் வைத்தாற்போலப் பூரித்துப்போய்விட்டாள், காளி. செல்வத்துக்குப் புரியும்படியாக– என்னவோ இராணுவ இரகசியத்தை வெளியிடுகிற மாதிரி, தனது திட்டத்தை வெளியிட்டாள்.

"ராஜா... எனக்கு குழந்தை குட்டி கிடையாது. தங்கச்சி மகன்,



என் மகன்தான். என்ன... நான் செத்தா, 'அம்மாவோட அக்காவாச்சே'ன்னு எனக்கு ஒரு கொள்ளி போடமாட்டியா? அப்படி நீ எனக்கு செய்யப்போற கடமைக்குப் பதிலா உனக்கு நான் என்னத்தைப்பா வாரி வழங்கிடப்போறேன்? அதான் சொத்தோடச் சொத்தா– சட்டநாதன் வீட்டு சம்பந்தத்தையும் கொண்டுவந்தேன்."

"அது... அது இல்லீங்க... பிரேமாவுக்குத் தெரிஞ்சா, அட்டகாசம் பண்ணிடுவா."

அவன் மிரண்டான். ஏற்கெனவே கல்கத்தாவில் இருந்தபோது, இவன் செய்யாத அட்டகாசம் இல்லை. எத்தனையோ பெண்களை மணந்துகொள்வதாகச் சொல்லி, ஏமாற்றி இருக்கிறான். வயது வித்தியாசம் இன்றி, நல்ல குடும்பத்துப் பெண்களை எல்லாம் நடுத்தெருவுக்கு... இந்த பிரேமா.

இவள் இரண்டுமுறை மணவாழ்க்கையில் தோல்வி அடைந்தவள். இரண்டாவது கணவன் மூலமாக ஒரு மகன்கூட உண்டு. நிறைய படித்தவள்தான். பணம் படைத்தவள்தான். புத்திசாலிதான்.

ஆனாலும், செல்வத்தின் மயக்கும் வார்த்தைகளை நம்பி அவனிடம் விழுந்துவிட்டாள். அதன்பிறகுதான் அவன் குணமும், அவனது வீட்டு சொத்து பிரச்சினையும் தெரிந்தது.

"அந்த சொத்தே வேண்டாம், செல்வம். என்கிட்ட இருக்கிறதே நாலு தலைமுறைக்குப் போதும்."

"அது அப்படியில்லே, பிரேமா. இந்த சொத்துக்காக எங்க அப்பாவும், அம்மாவும் எத்தனைப்பாடு பட்டிருக்காங்கன்னு எனக்குத்தான் தெரியும். என் தாத்தாவோட மூணாவது தலைமுறைக்குப் பிறகுதான், சொத்துகளை எங்க அப்பாவோ, நானோ உரிமை கொண்டாட முடியும். அதுவரைக்கும் அனுபவிக்கலாம். குறிப்பிட்ட சில அசையாச் சொத்துகள் மூலமாகக் கிடைக்கிற வாடகை, குத்தகைப் பணம் இதையெல்லாம் வச்சிட்டு குடும்பம் நடத்தலாம். மத்தபடி, எங்க பாட்டியோட கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமான நகைங்க எல்லாம், குடும்ப வக்கீல் பாதுகாப்புல இருக்கு. ஒண்ணையும் தொடமுடியாது."

இப்படி சொன்னதற்குத்தான் பிரேமா, செல்வத்திட
சொன்னாள்:

"நான் ஒரு கோடி ரூபாய் தர்றேன். உங்க அம்மா மூஞ்சியி
விட்டெறிஞ்சிட்டு வந்துடு."

அவள் ஒன்றும் இதை, செல்வத்தின் மீது உள்ள காதலா
சொல்லவில்லை. என்னதான் பணக்காரியாக இருந்தாலு
வெளியிடத்தில் கவுரவமாய் சொல்லிக்கொள்ள- கணவ
என்கிற பெயரில் ஒருவன் வேண்டியிருந்தது. ஏற்கெனவே
இரண்டு முறை மணமுறிவு ஏற்பட்டதால், சுற்றம்... நட்
இவர்களது பேச்சு ஒருவிதமாகவே இருந்தது.

'பிரேமாவா... அவ, சேலை மாத்துற மாதிரியில்லே புருசனை
மாத்துவா.'

இப்படியொரு விமர்சனம், தன்னைச் சுற்றி உள்ள
அவளுக்குத் தெரியும். இத்தனையையும் தாங்கிக்கொண்டு வங்
ஒன்றில் வேலையும் பார்க்கிறாள்.

வேலை பார்க்க வேண்டும் என்கிற அவசியமில்லை
ஆனாலும், வீட்டில் உட்காரப் பிடிக்காததால் வேலை
கல்கத்தாவிலிருந்து செல்வத்தின் குடும்பம் பெங்களூருக்கு மாற
வந்தபோது, இவளும் தன் உத்தியோகத்தை பெங்களூக்கு
மாற்றிக்கொண்டிருக்கிறாள்.

வங்கியில் எத்தனை வேலைகள் இருந்தாலும்
ஒரு மணிக்கொரு தரம் செல்போனில், கணவனைக்
கண்காணித்துக்கொண்டே இருப்பாள்.

"எங்கே இருக்கே டியர்?"

"ஆபீஸிலேதான்டா."

"சரி... உங்க அம்மா வீட்டுக்குப் போயிடாதே. அவங்க
பணத்துக்காக மருந்து, மாயம் வச்சு, உன்னை பைத்தியமாக்
கிடுவாங்க. உங்க அப்பாவோட அண்ணன் பெண்டாட்டியை
வச்சிருக்கிற மாதிரி."

"சேச்சே... நான் அவங்களோட ஒரே மகன் பிரேமா.
அப்படியெல்லாம் செய்யமாட்டாங்க."

"நான் நம்பமாட்டேன். சாயந்திரம் அஞ்சு மணிக்கு

காரோடு பாங்கி வாசல்லே நிற்கணும்."

"சரி... சரி..."

"ஏன் அலுத்துக்கிறே?"

"அலுத்துக்கிறேனா... நானா? என்னடா நீ என் தங்கம் இல்லையா... செல்லம் இல்லையா... இன்னிக்கு உன்னையும், குழந்தையையும் அழைச்சிட்டு வெளியில போகலாம்னு இருக்கேன். என் 'மூடை' கெடுக்காதே."

செல்வத்தின் நிலை, உரலுக்குள் தலையை விட்டுக்கொண்ட கதை.

ஏதோ ஓர் மயக்கத்தில், தன் குடும்ப இரசியங்களையெல்லாம் இவளிடம் கொட்டியதன் பலன்– இப்போது, அதை வைத்துக் கொண்டே செல்வத்தை அச்சுறுத்திக்கொண்டிருக்கிறாள்.

"உங்க அம்மா, தன் ஓரகத்தியை பணத்துக்காக பைத்தியமாக்கி, காலுல சங்கிலி போட்டு வச்சிருக்காங்கன்னு சொன்னியே... அப்படிப்பட்ட ராட்சசி, வேறு என்னதான் செய்யமாட்டா?"

"இதோ பாரு... கருப்போ, சிவப்போ... அவங்க பார்த்து வைக்கிற பொண்ணு கழுத்துல தாலிகட்டப்போறது மாத்திரம்தான் நான். மத்ததெல்லாத்தையும் பார்த்துக்க, அப்பாவோட டாக்டர் நண்பர் இருக்காரே... அவரும், அவரோடப் பையனும் இருக்காங்க."

"மத்ததெல்லாம்னா?"

"புரியாத மாதிரி கேட்கிறியே... அந்த வாரிசு விசயம்தான். நான், உன்னைத் தொட்ட கையாலே, வேறு எவளையும் தொடமாட்டேன். இது சத்தியம். தாலியைக் கட்டி, வீட்டுக்கு அழைச்சிட்டு வர்றவரைக்கும்தான் நான் புது மாப்பிள்ளை. அப்புறம், நேரே என் சொர்க்கத்துக்கு வந்துடுவேன்."

"இது பாவம்னு உனக்குத் தோணலே?"

"தோணுது. அதேநேரம், என்னைப் பெத்தவங்களைப் பார்த்தாலும் பாவம்னு தோணுது. உன்னைப் பார்த்தாலும் பாவம்னு தோணுது. இரக்கமுள்ள மனுசனுக்கு எப்பவும் சங்கடம்தான்."

அவளிடம் இத்தனைச் சொல்லி, ஒரு பொம்மைக் கல்யாணத்துக்கு ஒப்புக்கொண்டவன், தன் தாய் சவுந்தரத்திடம்

சொன்னதே இதுதான்:

"அம்மா... பிரேமா என்னை விடமாட்டா. அப்படி எனக்கொரு' எண்ணம் இருக்குன்னு தெரிஞ்சாலே, போலீஸ் வரைக்கும் போய், நம்ம குடும்பத்தையே நடுத்தெருவுக்கு இழுத்துட்டு வந்துடுவா. அப்புறம், நீ வீட்டோடு பொத்திப் பொத்தி வச்சிருக்கியே... அந்த பைத்தியக்காரி கதையெல்லாம் போஸ்டர் ஒட்டி வெளியாயிடும். முதல்லே 'தினத்தந்தி'யில் வரும், பெரிசா கொட்டை எழுத்துல:'பதினேழு வருசமா காலுல விலங்கு மாட்டி, வீட்டுச் சிறைக்குள்ளே வைக்கப்பட்டிருந்த பெண்'ணுன்னு படத்தோடு வரும்."

"டேய்... என்னடா எனக்கே விளக்கெண்ணை கொடுக்கிறே..."

"இல்லேம்மா... நம்மைப் பத்தி இங்கே யாருக்கும் எதுவும் தெரியாது. தெரிஞ்சா நாறிப்போயிடுவோம்னு சொல்ல வந்தேன். பார்க்கிற பொண்ணை, ஏதோ சுமாரா இருக்கிறவளாக பாரு. ரதி, மேனகைன்னு தேடாதே."

"என்னடா... நாளைக்கு நம்ம வீட்டு மருமகள்னு நாலு பேர்கிட்ட காட்ட வேண்டாமா? கொஞ்சமாவது பார்க்கிறதுக்கு நல்லாயிருக்க வேண்டாமா?"

"என்னவோ பண்ணு... ஆனா, கல்யாணம் முடிஞ்சதுமே கிளம்பிடுவேன். இல்லைன்னா, இவ என்னைத் துரத்திட்டு வந்திடுவா."

"அதெல்லாம் கவலைப்படாதே. சாந்தி முகூர்த்தம் எங்க வீட்டுலதான் பண்ணணும்னு சொல்லி, இங்கே அழைச்சிட்டு வந்துடுவேன்."

"கொஞ்சம் பயந்த சுபாவமா, சாதுவானப் பொண்ணாகப் பாரு... இல்லேன்னா, உன்னை வித்து, வெல்லம் வாங்கிச் சாப்பிட்டுடுவா."

"ஏன்டா இப்படி அபசகுனம் பிடிச்ச மாதிரி பேசுறே? நம்ம காளியும் அவ வீட்டுக்காரரும் உனக்காக அழகான வரனாக் கொண்டுவந்திருக்காங்க. நாளைக்கு பொண்ணைப் பெத்தவர் இங்கே வர்றார்."

செல்வம் விதிர்விதிர்த்துப்போனான்.

"இங்கேயா?"



"ஆமா. காளி வீட்டுக்காரர், சம்பந்தியை அழைச்சிட்டு வருவாரு. அப்படியே அலுங்காம கூட்டிட்டும் போயிடுவாரு. நம்மைப் பற்றி– முக்கியமா உன்னைப் பற்றி எந்தத் தகவலும் தெரியாதபடி அவர் பார்த்துக்குவாரு."

சவுந்தரம் சொன்ன மாதிரிதான் நடந்தது. பெருமாள்சாமி, சட்டநாதனுடன் ஒட்டிக்கொண்டேதான் வந்தார்.

பெண்ணைப் பெற்றவரை அசத்துவதற்காகவே, பங்களாவில் ஒரு சின்ன விருந்தே ஏற்பாடாகி இருந்தது. தஞ்சாவூர் சமையலும், தந்தூரி கோழிக்கறியுமாக வீடே கமகமத்தது. எங்கேயிருந்தோ ஒரு நாதசுர வித்வானை வரவழைத்து, ஒரு பக்கம் ஜமக்காளம் விரிக்கப்பட்டு, காம்போதியையும், கல்யாணியையும் மிதக்கவிட்டாயிற்று.

பெங்களூரில், சம்பூர்ணத்துக்குத் தெரிந்த ஒரு சில பணக்காரப் பெண்மணிகளை வைரமும், பட்டுச்சேலையும் மின்னலடிக்க நடமாட விட்டாயிற்று.

"ஆமா... நம்ம டாக்டரை அழைக்க வேண்டாமா?" சவுந்தரம், கணவனைக் கேட்டாள்.

"அவரை மாத்திரமில்லே, அவரோட மகன் வல்லபனையும் அழை. இந்த வீட்டு மருமகளுக்கு அவன்தானே... அவனுக்கும் பொண்ணைப் பிடிக்க வேண்டாமா?" கிண்டலடித்தான், செல்வம்.

சட்டநாதனுக்கு தனது நண்பர்களையும், அவர்களின் குடும்பங்களையும் அறிமுகம் செய்து வைத்தார், வேதாசலம்.

இத்தனை ஆடம்பரமான வரவேற்பை சட்டநாதன் எதிர்பார்க்கவே இல்லை. அவரும் மிகப்பெரிய பணக்காரர்தான் என்றாலும், இதுமாதிரியெல்லாம் காசை வீசியெறிந்து படாடோபமாய் விருந்து கொடுக்க அவருக்குத் தெரியாது. ஆதலால், வாய்பிளந்து நின்றுவிட்டார்.

"இவர், பெங்களூரில் பெரிய வைர வியாபாரி. பேரு மிட்டாலால்."

"வணக்கம்."

"இவர், ஓய்வு பெற்ற நீதிபதி. நான் இல்லைன்னா ஒரு காரியம் ஓடாது, இவருக்கு."

"வணக்கம்."

"இவரு நம்ம குடும்ப டாக்டர். நாகநாதன்னு பேரு. ரொம்ப
காலமா இவர்தான், எங்களுக்கு. நாங்க எந்த ஊருக்குப் போறதா
இருந்தாலும் முதல்லே இவருக்கும் சேர்த்து டிக்கெட்
வாங்கிடுவோம்."

"........."

சட்டநாதன் அவரைப் பார்த்துக் கைகுவித்தார். நெற்றி
ஒருமுறை சுருங்கி விரிந்தது.

"உங்களை எங்கேயோ..."

"அப்படியா? பார்த்திருக்க வாய்ப்பு இல்லே. நான், மிஸ்டர்
வேதாசலம் குடும்பத்தோடு அப்படியே ஐக்கியமானவன். சார்
நாலு வருடம் போல அமெரிக்கா போனார். அப்பகூட நானும்
அவர்கூடவேதான் போயிருந்தேன். என்னைப் பார்த்
திருந்திங்கன்னா, வேதாசலத்தோடுதான் பார்த்திருக்கலாம்."

"ஒருத்தரை மாதிரி உலகத்துல ஏழு பேர் இருப்பாங்கன்னு
சொல்லிக் கேள்விப்பட்டிருக்கேன். இப்ப, நம்ம பண்ணையாரை
உங்களுக்கெல்லாம் அறிமுகப்படுத்தி வைக்கிறேன்."

வாத்தியார் பெருமாள்சாமி, இடையில் புகுந்து பேச்சை
மாற்றினார்.

"பண்ணையார் பேரை நாங்க யாரும் சொல்றதில்லே.
ஆனாலும், இங்கே சொல்றதுதானே மரியாதை. அய்யா பேரு
சட்டநாதன். இவரோட அப்பா அந்த நாளையிலே ரொம்பவும்
பெரிய தனக்காரர். மயிலாபுரத்துச் சுத்துவட்டாரமெல்லாம்
இவங்களோடதுதான். எத்தனைக் கோடிக்கு அதிபதின்னு
கணக்கெல்லாம் எனக்குத் தெரியாது. மயிலாபுரத்து கோவில்லே
இருந்து, கடைவீதி, ஆஸ்பத்திரி, இன்னும் பலப்பல கட்டடங்
களுக்கு சொந்தக்காரர். பொண்ணு ஆசைப் பட்டாள்ன்னு
யானைக்குட்டி வாங்கித் தந்தவர்னு சொன்னாலே போதும்."

இப்படிச் சொன்னவர், சட்டநாதனைத் திரும்பிப் பார்த்து,
பெருமை பொங்கச் சிரித்து, 'என்னங்க, நான் சொன்னதெல்
லாம் சரிதானே? அந்த யானைக்குட்டி இப்பகூட
இருக்குதில்லே?' என்று வினவ...

சட்டநாதன் அடக்கத்துடன் புன்னகைத்தார்.

ஆனால்—

சவுந்தரம், வேதாசலம் இவர்களின் முகம்தான் இஞ்சி



தின்ற எதுவோ மாதிரி ஆகிவிட்டது. ஒருவரையொருவர்
பதற்றத்துடன் பார்த்துக்கொண்டனர்.

மருத்துவர் நாகநாதன் மெதுவாக அங்கிருந்து நழுவினார்.

மருத்துவர் நாகநாதன் மெதுவாக அங்கிருந்து நழுவினார்.
வேதாசலம் மட்டும், தன்னை உடனே சுதாரித்துக்கொண்டு,
வடக்கே வாரணாசியில் தங்களது மூதாதையர்கள் கட்டி வைத்த
பெரிய அன்னசத்திரம் இருப்பது பற்றியும், இன்றைக்கும்
காசிக்கு வரும் யாத்திரிகர்களுக்கு அங்கே மூன்று வேளையும்
அன்னதானம் செய்வது பற்றியும் விவரித்துக் கூறினார். சூரத்தில்
பட்டு சரிகைத் தொழிற்சாலை மூன்று இருப்பதாகக்
கூறினார். அகமதாபாத்தில் உள்ள மிகப்பெரிய மில்லே
தங்களுடையதுதான் என்றும், வருமானவரிக்காரர்களின்
தொல்லையைத் தவிர்க்க— அது, தன் மனைவியின் பெயரில்
இருப்பதாகவும் பெருமைப்பட்டுக்கொண்டார்.

இன்றும் சேலத்தில் கரும்பாலை, திருச்சியில் பல நூறு ஏக்கர்
கணக்கில் நஞ்சை, மாந்தோப்பு...

நடுவே விவரம் புரியாத பெருமாள்சாமி, 'எங்க
கல்கத்தாவுல...' என்று இழுக்க, அந்த ஒரு கணத்தில், தூக்கத்தில்
இருந்து விழித்தவள் போல, சவுந்திரம் துள்ளி எழுந்து,
பெருமாளை தரதரவெனத் தள்ளிக்கொண்டு போனாள்.
அப்படிப் போகும்போதே, சட்டநாதனிடம் அசடுவழிய சிரித்து
மழுப்பவும் தவறவில்லை.

விட்டால் இவர் பேசிட்டே இருப்பாரு. பயணக் களைப்பு
போக, குளிச்சிட்டு வாங்க. நம்ம வீட்டுல மூலிகை மசாஜ்
செய்யறதுக்குன்னே ரெண்டு ஆளுங்க எப்பவும் உண்டு.
ஒரு தடவை செஞ்சு பாருங்க. உடம்பு சும்மா, ...டடா'ன்னு
இருக்கும். குளிச்சிட்டு வந்தவுடனே, டிபன் தட...ரா இருக்கு.
சுடச்சுட எங்க வீட்டு 'வெங்காய தோசை'க்கும் தேங்காச்
சட்னிக்கும் மயங்காதவங்களே கிடையாது. ஆட்டுக்கறி—
மாட்டுக்கறிகூட இருக்குது. எங்களுக்கு எதுவும் தள்ளுபடி
கிடையாது. வாத்தியார் மாமாகிட்ட சில பொறுப்புகளை
எல்லாம் ஒப்படைக்கணும்."

இப்படிச் சொன்னதோடு நிற்காமல், வேதாசலத்தையும்
பார்த்து ஒரு அதட்டல் போட்டாள்.

"என்னங்க.. பேசிட்டே நின்னுட்டிருந்தா எப்படி? அவரை,

அவருக்காக ஏற்பாடு செஞ்சிருக்கிற அறைக்கு அழைச்சிட்டுப் போங்க. செந்தில் ஆபீஸ் விசயமா போயிருக்கான். டிபனுக்கு வந்துடுவான்."

இத்தனைக்கும் பிறகுதான், பெருமாள்சாமியிடம் சவுந்தரம் விசயத்தை விளக்கினாள்.

"என்ன புரோக்கர் மாமா?"

"வாத்தியார்ன்னு கூப்பிடு. இல்லே, அக்கா புருசன் என்கிற மரியாதைக்காகவாவது 'மாமா'ன்னு கூப்பிடு. இப்படி புரோக்கர் மாமான்னு பண்ணையார் முன்னாடி சொல்லிடாதே. மானம் போயிடும்."

"அதுசரி... இப்ப எங்க மானமில்லே கப்பலேறிடும் போல இருக்கு."

"ஏன்... என்னாச்சு?"

"நீங்க முன்னலே மயிலாபுரம் பண்ணை சட்டநாதனைத் தான் அழைச்சிட்டு வரப்போறேன்னு சொன்னீங்களா?"

"சொல்லலே... ஏன், அதுக்கு என்ன இப்ப?"

"அவரு ஏற்கெனவே இந்த வீட்டுலப் பொண்ணைக் கொடுத்தவருதான்."

"என்னது? அவருக்கு அரசி ஒரே வாரிசும்மா. சின்னவீடு சமாச்சார்மெல்லாம் தெரியாது. அப்பாவி."

"பொண்ணைக் கொடுத்தவருன்னா, அவர் பொண்ணைக் கொடுத்தாத்தானா? அவருக்கு ஒரு தங்கச்சி இருந்தா நவநீதம்னு. அவளைத்தான் என் மூத்த கொழுந்தன் காதலிச்சு கல்யாணம் செஞ்சிட்டாரு. நல்லவேளை... கல்யாணத்துக்கு நானும் எங்க வீட்டுக்காரரும் போகலே. ஆனா, இவரு தங்கச்சி இறந்த தகவல் கேட்டு ஒரு மாசம் கழிச்சு, கல்கத்தாவுக்கு வந்து, ஒரு ஓட்டலில் தங்கிட்டு, தங்கச்சியோட மருத்துவ செலவையெல்லாம் நம்ம டாக்டர்கிட்ட பைசல் பண்ணிட்டு போனாரு."

"அப்படியா?"

வாயைப் பிளந்த பெருமாளின் திறந்த வாய்க்குள் முழு லட்டுவைத் திணித்தான், சவுந்திரம்.

"அதெல்லாம் இருக்கட்டும். இந்த இடத்தைப் பேசி முடிக்கணும்."

# 7

எல்லாமே, நினைத்ததைவிட வேகமாக நடந்தது சட்டநாதனுக்கே, 'இத்தனை அவசரம் ஏன்?' என்று புரியவில்லை!

பெருமாள்சாமி சொன்னது போல, வெள்ளிக்கிழமை- அரசியைப் பெண் பார்க்க மட்டுமே மாப்பிள்ளை வீட்டார் வருகிறார்கள் என்று நினைத்திருந்தது போக-

வந்தவர்கள், அன்றே தட்டு மாற்றி, பூ வைத்துவிடத் தயாராக இருந்தார்கள்.

சட்டநாதன் தயங்கினார்.

"அதில்லீங்க... நிச்சயதார்த்தம் செய்கிற அன்னிக்குத்தான் பூ வச்சு, பத்திரிகை எழுதறது எங்க வழக்கம். இப்படி வீட்டோடு செய்ய, எங்க மனுசங்க, ஊரைச் சேர்ந்தவங்க விடவே மாட்டாங்க. பெண்ணைப் பார்த்து, எல்லாம் பேசி முடிச்சதுக்கு அப்புறம்- தட்டு மாத்தி, நிச்சயம் பண்ண ஒரு முகூர்த்த தேதியைக் குறிச்சு..."

அவர் பேசிக்கொண்டிருக்கும்போதே, சவுந்தரம் பலமாகத் தலையைக் குறுக்குவாட்டில் அசைத்தாள்.

"அட, நீங்க இன்னும் எந்தக் காலத்துல இருக்கீங்க? பொண்ணைப் பார்த்துட்டு, ஊருக்குப் போய் தகவல் தெரிவிக்கிறோம்னு சொல்லுறவங்க நாங்க இல்லே. பிடிச்சிருக்கா... அவ்வளவுதான். பூ வைச்சு, தட்டு மாத்திடுவோம். நீங்க நிச்சயதாம்பூலத்துக்குக் குறிக்கிற நாளிலே கல்யாணத்தை நடத்திடலாம்."

"ஆமாம் பண்ணை... உங்களுக்கு என்ன? ஒவ்வொருத்தரைப் போல நெல்லு வித்து பணம் வரணுமா? இல்லே, ஆள் படைக்குத்தான் பஞ்சமா? எப்படியும் முகூர்த்தம் குறிக்க, என்கிட்டத்தானே வரப்போறீங்க? அதான், பக்கத்துலே காகிதத்தை வச்சிட்டுத் தயாரா இருக்கேனே..."

பெருமாள்சாமி வேறு, சவுந்தரத்துக்குப் பக்கபலமாய் தாளம் போட்டார்.

பெங்களூரிலிருந்து வேதாசலம்- சவுந்தரம் தம்பதியருடன், செல்வமும், மருத்துவர் மகன் வல்லபனும் வந்திருந்தனர்.



வல்லபன், செல்வத்துக்கு மாப்பிள்ளைத் தோழன்.
காளியம்மா, பெருமாள்சாமி பற்றிச் சொல்லவே வேண்டாம்.
இவர்களுடன் ஒட்டிக்கொண்டுவிட்டார்கள். இனிமேல், தட்டு
மாற்றியவுடன் காளியின் கையில் சவுந்தரம் ஒரு லட்சம்
தருவதாகவும், தாலி கழுத்தில் ஏறியபின், இன்னொரு லட்ச
ரூபாய் கொடுத்துவிடுவதாகவும் பேச்சு.

எப்படியும் இந்த வரனை முடிப்பதில், வேதாசலத்தைவிடவும்
சவுந்திரம்தான் தீவிரமாக இருந்தான்.

"நீங்க ரெண்டு பேரும் என்ன செய்வீங்களோ, ஏது செய்வீங்
களோ எனக்குத் தெரியாது. சட்டநாதன் பொண்ணுதான்
என் மகனுக்குப் பெண்டாட்டியா வரணும்."

"நீ சுலபமாச் சொல்லிட்டே, சவுந்தரம். ஏற்கெனவே அந்த
வீட்டுப் பொண்ணு ஒண்ணு இந்த வீட்டு மருமகளா வந்து...
இருக்காளா, இல்லே செத்துப்போச்சா?"

"........."

"ஏதோ, பண்ணைக்கு உன் கணவனும், அந்த டாக்டரையும்
மறந்துபோச்சு. ஞாபகம் வந்திச்சு... உங்ககூடச் சேர்ந்து
நாங்களும் இல்லே கனி தின்னணும்."

"பதினெட்டு வருசங்களுக்கு முந்தி, ஒரு ஓட்டலில் வச்சுப்
பார்த்தது. அதுவும் பதினைஞ்சே நிமிடம்தான். டாக்டர்
அன்னிக்குப் பார்த்ததுக்கு கொஞ்சம்தான் மாறி இருக்காரு.
அதனாலே, அவரைப் பார்த்ததும் சட்டநாதன் கொஞ்சம்
தடுமாறிட்டாரு. என் வீட்டுக்காரர் அப்ப, உடம்புல இன்னி
எடுக்க சதையே இல்லாம வத்தலும் தொத்தலுமா இருந்தாரு.
இப்ப யாராச்சும், 'இவர்தான் அவரு'ன்னு சத்தியம்
பண்ணினாக்கூட நம்பமாட்டாங்க."

சவுந்தரம் அடித்துச் சொன்னாள். வேதாசலத்துக்கு
கொஞ்சம் கவலைதான்.

"அப்படியாவது இந்த இடம் வேணுமா, சவுந்தரம்? எதுக்கு
விஷப் பரிட்சை?"

"நீங்க வாயை மூடிட்டு இருங்க. உங்க அப்பாவாவது
மூணாவது தலைமுறைக்கு பிறகுதான் சொத்துல உரிமை
கொண்டாட முடியும்னு சொல்லி எழுதி வச்சிட்டுப்
போயிட்டார். சட்டநாதனுக்கு இது ஒரே வாரிசு. பொண்ணு

கூடவே அத்தனைச் சொத்தும் வரும். தானா வர்ற சீதேவியை ஏன் நாமளா விரட்டணும்? நம்ம செல்வத்துக்கு முப்பத்திரண்டு வயசுல, "கஜ கேசரி யோகம்" இருக்குதுன்னு எங்க அம்மா சொல்லிட்டே இருப்பாங்க. அதான், எல்லாம் இப்படிக் கூடிக் குவிஞ்சிருக்கு."

இதைச் சொன்னவள், காளி, 'பெருமாள்சாமியிடம் உரிமையுடன் அதட்டல் போட்டாள்.

"பொண்ணு பார்க்கப் போறப்பவே தட்டு மாத்தியாச்சுன்னா, பாதிக் கல்யாணம் நடந்த மாதிரிதான். சட்டநாதன் அந்தக் கால மனுசர். தட்டு மாத்தினதுக்கு அப்புறம் பேச்சு மாறமாட்டார். அதனால, அதைமட்டும் நீங்க ரெண்டு பேரும் வெள்ளிக்கிழமையே முடியுங்க. பேசினத் தொகையில் பாதியை அன்னிக்கே சலவை நோட்டாகக் கொடுத்துடுறேன்."

காளிக்கு இந்த வார்த்தை, ஆசைத் தீயை மூட்டிவிட்டது.

"செய்யலாம்தான். ஆனா, எதையும் இப்படி சின்னதாச் செஞ்சுப் பழக்கமில்லையே, பண்ணைக்கு. நிச்சயதார்த்தத்துக்கே ஐநூறு, ஆயிரம் இலை விழும். மாப்பிள்ளைக்கு அப்பவே தங்கமும், வைரமுமா இழைச்சு, காடு– பங்களான்னு எல்லாம் கொடுத்து அமர்க்களப்படுத்திடுவாரே..."

சவுந்தரம், காளியின் கையை இறுகப் பிடித்துக்கொண்டாள்.

"அதெல்லாம் எதுவும் வேண்டாம், காளி. கிணத்து நீரை வெள்ளம் கொண்டுபோகாது. மேலும், பெரிசா, ஆடம்பரமா எதைச் செஞ்சாலும், இங்கே இவனைப் பிடிச்சு வச்சிருக்கிற 'பெங்காலி' பிசாசுக்குத் தெரிஞ்சிடும். அதனால்தான் சொல்றேன்; காதும் காதும் வச்ச மாதிரி முடிச்சிடணும்னு: கல்யாணத்தைக்கூட, திருப்பதி, பழநின்னு எங்கேயாவது முடிச்சிட்டாப் பரவாயில்லைன்னு நான் பார்க்கிறேன்."

காளி, அவளைப் பார்த்து, விஷமமாய் சிரித்தபடியே கேட்டாள்:

"ஒரு பையனைப் பெத்து வச்சிட்டு, நீயும்தான் எத்தனை தடவை மாமியாராவே? அதுசரி... உன் ஓரகத்தி... அவ இந்த பங்களாவுலதான் ரெண்டாவது மாடியில இருக்காப் போல! இந்தா... இந்தா... அப்படிப் பார்க்காதே... சும்மா வீட்டைச் சுத்திப் பார்க்கப் போனேன். மாடியில ஒரு அறை மட்டும்



வெளியிலப் பூட்டியிருக்கு. உள்ளேயிருந்து பாட்டுச் சத்தம் கேட்குது. அட, இப்ப நமக்குள்ள என்ன ஒளிவு மறைவு?"

"........"

"நீ யார்கிட்ட வேணுமானாலும் மறைக்கலாம். ஆனா, என்கிட்டே வெளிப்படையாக இருந்திடு. அப்பத்தான் என்னாலேயும் உனக்குத் தேவையான உதவிகளைச் செய்ய முடியும்."

சவுந்தரம் வாயடைத்துப்போனாள். பெருமாள் தன் மனைவியிடம் அந்தரங்கமாய் கேட்டார்:

"அவ மூஞ்சி செத்துப்போச்சுடி. நமக்கு லட்ச லட்சமாகக் கொடுக்கப்போறா. அவகிட்டப்போய் என்னத்துக்குக் கிடுக்கிப்பிடி போடுறே?"

"சும்மா இருங்க. நீங்க இப்ப வர்ற லட்சத்தைப் பார்க்கிறீங்க. நான், போகப் போக வரப்போற மிச்சத்தைப் பார்க்கிறேன். எதிராளியோட இரகசியங்கள், எப்ப நமக்குத் தெரிகிறதோ, அப்பவே, நாம கேட்கிறப்ப எல்லாம் அவங்க 'செக்' வெட்டத் தயாரா இருக்கணும்."

மனைவியின் பதிலைக் கேட்டு, மூக்கில் விரலை வைத்தார், பெருமாள்.

"உனக்கு மட்டும் கொஞ்சம் படிப்பறிவு இருந்தது இன்னிக்கு 'பக்கா' அரசியல்வாதி ஆகியிருப்பேடி."

"அரசியல் எதுக்கு? முதல்லே அந்த அரசியைப் பிடிக்கிற வழியைப் பார்ப்போம்."

இவர்கள் இப்படி, தகுந்த முன்னேற்பாட்டோடு வந்திருப்பதை அறியாத சட்டநாதன், வெறும் பெண் பார்க்கும் படலம்தானே, இதற்கு ஊரில் தனக்கு வேண்டிய சில பெரியவர்கள் போதும் என்று அழைத்திருந்தார்.

மற்றபடி– வரவேற்பிலும், உபசரிப்பிலும் ஒன்றும் குறைவில்லை.

தன் கூடவே செந்திலை வைத்துக்கொண்டு, அவ்வப்பொழுது, அவனையும் கலந்து பேசிக்கொண்டார்.

நடுவில், சொர்ணம் வேறு இரகசியமாய் அவனை உதவிக்கு அழைத்தாள்.

"தம்பி... அந்தப் பொண்ணைக் கொஞ்சம் போய் பாரு.

ஆச்சு; மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வரப்போற நேரமாச்சு. இவளானா, ஒரு சுடிதாரைப் போட்டுட்டு உட்கார்ந்திருக்கா. பெரிய சரிகை சேலை எல்லாம் வேண்டாம். ஏதோ, நம்ம அந்தஸ்துக்குத் தகுந்த மாதிரி துணி கட்டிக்கக்கூடாதா? காதுல, கழுத்துலக்கூட ஒண்ணுமில்லே. வேணும்ன்னு என்னை இந்தப் பாடுபடுத்தறா."

அழுகையில் சொர்ணத்தின் முகம் சிவப்பதைக் காணச் சஙியாமல், மாடிக்கு ஓடி, அரசியை அதட்டி...

"இந்தா, முகத்தைக் கழுவி, நல்ல சேலையாகக் கட்டிக்க. செயின், கம்மல் எல்லாம் எடுத்து மாட்டு."

"ஏன், என்னை வெளியில எங்கேயாவது கூட்டிட்டுப் போகப்போறீங்களா?"

"அரசி... நான் ஒரு அறை விட்டேன்னா, கன்னம் பழுத்துடும்."

"என்கிட்ட வரப் பயந்துகிட்டு, அறைக்கு வெளியில இருந்தே குரல் கொடுக்கிறீங்களே... அதுலேயிருந்தே தெரிகிறது உங்க வீரம். அடிங்களேன்... அதையாவது அனுபவிக்கிறேன்."

"உன்னை..."

"ஒண்ணும் பண்ணமுடியாது. நான், உங்களுக்குத்தான். அதென்னவோ, என் மனசுல அழுத்தமாஒரு நம்பிக்கை இருக்கு. செத்துப்போய், தெய்வமா இருக்கிற என் அத்தைதான் எனக்கு 'வீனஸ்' தேவதை. அவகிட்ட மனசார வேண்டிட்டிருக்கேன். நம்ம கல்யாணம் முடிஞ்சதும் நூத்தியொரு ஏழைப் பொண்ணுங்களுக்குப் பட்டுச்சேலை, தாலி எடுத்துக் கொடுத்து, கல்யாணம் செஞ்சு வைக்கிறதா நேர்ந்து இருக்கேன். மொத்தமா எத்தனைச் செலவாகும்னு ஒரு கணக்கு போட்டு வையுங்க."

அவன், அவளது இடக்குப் பேச்சில் தவியாய் தவிக்க,

கடைசியில் சட்டநாதன், மாடியேறி வந்து ஒரு அதட்டல்– செல்லமாகத்தான்– போட்டவுடன்தான் எழுந்தாள்.

"என்னம்மா இது... செந்தில்கிட்ட விளையாட உனக்கு நேரம் காலமே கிடையாதா? போ... போய் நல்ல சேலை கட்டிட்டு வா."

"அதுபத்தித்தாம்ப்பா அவர்கிட்ட கேட்டுட்டிருந்தேன். நான் என்ன நிறம் கட்டினா எடுப்பா இருக்கும்னு கேட்டுட்டு



இருந்தேன். 'உனக்கு எது கட்டினாலும் எடுப்பாகத்தான் இருக்கும்'னு சொல்லிட்டிருந்தாரு."

அவளது வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவனை பசிமுனையில் நிற்கவைத்தன. அரசியோ, செந்திலின் தவிப்பை ஓரக்கண்ணால் ரசித்தபடி, குளியலறைக்குள் நுழைந்தாள்.

'என்ன, இந்தப் பொண்ணு... இத்தனை விளையாட்டுப் புத்தியா இருக்கு? இவளைக் கட்டிக்கப்போறவன் என்ன பாடுபடப்போறானோ?'

தனக்குள் புலம்பியவர், செந்திலின் தோள் மீது கையைப் போட்டபடி கீழே இறங்கவும், வாசலில் இரண்டு கார்கள் வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

"வாங்க... வாங்க... வணக்கம்."

உள்ளே காலெடுத்து வைக்கும்போதே, பங்களாவின் முகப்பையும், தரையெங்கும் பதிக்கப்பட்டிருந்த பளிங்குக் கற்களையும் விழிகளை அகற்றிப் பார்த்தபடிதான் நுழைந்தாள், சவுந்தரம்.

சொர்ணம், அரசியை அழைத்து வந்தபோதுகூட சவுந்தரத்தின் கண்கள், சொர்ணத்தின் காதையும், கழுத்தையும்தான் மேய்ந்தன.

வேதாசலம் ஏதோ சீக்குக் கோழி மாதிரி சோபாவின் ஒரு பக்கமாய் புதைந்துகிடந்தார். செல்வம், அரசியை ஒருமுறை நிமிர்ந்துப் பார்த்துவிட்டு, பார்வையை தரையில் விரித்திருந்த இரத்தின கம்பளத்தில் பதித்தான்.

அவன் கூடவே வந்திருந்த வல்லபன் மாத்திரம், கொஞ்சமும் கூச்சநாச்சமில்லாமல், அரசியை அப்படியே பார்வையால் சாப்பிட்டுக்கொண்டிருந்தான்.

இதை செந்தில் கவனிக்கத் தவறவில்லை. அரசியின் முகமும் சுருங்கியது.

எந்த நேரமும் எழுந்து உள்ளே போக அவள் துடித்துக் கொண்டிருந்தாள். அடிக்கடி, கண்களில் நீர்மல்க, செந்திலைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

ஒருமுறை சோபாவைவிட்டு எழுந்தேவிட்டாள். செந்தில்தான் மெதுவானக் குரலில் கண்டித்தான்.

"உட்காரு அரசி. அவங்க உன்கிட்ட ஏதாவது பேசணும்னா

பேசட்டும்."

அப்போதுதான் வல்லபன், குரலில் அலட்சியம் தொனிக்க, சட்டநாதனைப் பார்த்துக் கேட்டான்:

"இவரு யாரு?"

"இவரு... எனக்கு ரொம்ப வேண்டப்பட்ட தம்பிதான். எதிர்வீட்டுல குடியிருக்கார்."

"உங்க பொண்ணோட நண்பர் போல..."

வல்லபனின் பேச்சில் இருந்த குத்தலில் சட்டநாதன் கொஞ்சம் ஆடிப்போய்விட்டார். சொர்ணம் 'சட்'டென வெளிறிப்போனாள். செந்தில்கூட ஒரு கணம் பேச்சு வராமல் திகைத்தான்.

அந்த நேரத்தில் அரசிதான், கணீரெனத் தன் தந்தையைப் பார்த்துக் கேட்டாள்:

"ஆமா... இவரு யாருப்பா?"

இவளதுக் கேள்வியில் அத்தனைப் பேருமே, தூக்கிவாரிப்போட நிமிர்ந்தார்கள்.

காளிக்கு உள்ளூரக் கவலை பிடித்துக்கொண்டது.

'ஏது... பொண்ணுபெரிய வாயாடியா இருப்பா போலிருக்கே... எப்படியாவது தட்டை மாத்தியாகணுமே..."

அவள் எழுந்து வந்து, அரசியின் தலையைத் தடவியபடி கொஞ்சலாகக் கூறினாள்.

"அவரு, மாப்பிள்ளையோட சிநேகிதரும்மா. உன்னை மாதிரிதான் மனசுல இருக்கிறதை அப்படியே கேட்டுடுவாரு. ஆனா, தங்கமானப் பிள்ளை. நம்ம செல்வத்தோட சிநேகிதங்க எல்லாருமே, அவனுக்காக உசிரையே கொடுப்பாங்க. நீதான், பெங்களூருக்கு வரப்போறியே... அப்பத் தெரிஞ்சுப்பே..."

சவுந்தரம், மிதப்பாகக் குறுக்கிட்டாள்.

"காளி... என்னத்துக்கு 'வளவள'ன்னு பேச்சு? பொண்ணை எனக்குப் பிடிச்சிருக்கு. எனக்குப் பிடிச்சிருந்தா, என் பையனுக்கும் பிடிச்ச மாதிரிதான்."

சட்டநாதனுக்கு இந்தப் பதில் திருப்தியளிக்கவில்லை.

"அதெப்படி? மாப்பிள்ளையைப் பேசவிடுங்க."

செல்வம், அவரை நிமிர்ந்து பார்த்தான். அரசியின் பக்கம் திரும்பிப் பார்க்காமலே பேசினான்:

"எங்கம்மா சொல்றது உண்மைதான். அம்மாவுக்குப் பிடிச்சா,

எனக்கும் பிடிக்கும்."

அரசியின் இதழ்களை [illegible] விண்டதும், கேலியும் புன்னகையாக வழிந்தது. அவள் எதுவு[illegible] பேசிவிடாதபடி, தோளை அழுத்திக் கொண்டு நின்றாள், [illegible]ரணம்.

அப்பொழுதுதான், [illegible]ரும் எதிர்பாராதவிதமாக, சவுந்தரம் தான் கொண்டுவந்திரு[illegible] மல்லிகை பந்திலிருந்து, நாலைந்து முழம் மல்லிகைச் சர[illegible]தை எடுத்து, அரசியின் தலையில் சூட்டினாள்.

சொர்ணம் பதறிப்போ[illegible]னாள்.

"என்னங்க இது?"

"என்ன... பூ வச்சு [illegible] சம்மதத்தைத் தெரிவிச்சிட்டேன். இப்படி தாம்பூலம் ம[illegible]த்திக்குவோம். அடுத்தது கல்யாணம் தானே? நல்ல விசயத்தை எப்பவும் தள்ளிப்போடக்கூடாது."

அப்பொழுதுதான் [illegible]டநாதன் இடைமறித்தார்:

"அதில்லீங்க, திச் [illegible]தாம்பூலம் எங்க குடும்பத்துல ஒரு கல்யாணம் மாதி[illegible] நடக்கும். இப்பத்தானே நீங்க [illegible]ண்ணைப் பார்த்[illegible]ருக்கீங்க... பிடிச்சுப்போச்சுன்னு [illegible]லவிட்டீங்க. நானு[illegible] என் பொண்ணுகிட்ட ஒரு வார்த்தை [illegible]ட்டாலும், அவளும் [illegible] பேச்சை எதிர்த்து, ஒரு காரியம் செய்யமாட்டாள்னு [illegible]ங்க. ஆனாலும், கேட்க வேண்டாமா... செல்லமா வ[illegible]த்தப் பொண்ணு அவ... அப்புறமா தட்டு மாத்த, தேதி குறி[illegible] நாங்க உங்க வீட்டுக்கு வருவோம்."

"அய்யய்யோ... அ[illegible]தெல்லாம் எதுக்குங்க வீண்செலவு? ஒவ்வொரு தடவையு[illegible] ரெயில்காரனுக்கு ஏன் தண்டம் அழணும்? நான் என்ன [illegible]ல்றேன்னா... இந்தக் காலத்துக்குத் தகுந்த மாதிரி, நாமும் சி[illegible] பழக்க வழக்கங்களை மாத்திக்கணும். பொண்ணைக் கேட்கிற[illegible]ன்னா கேட்டுச் சொல்லுங்க. எங்க பையன் என்ஜினீய[illegible] எங்க குடும்ப தொழிலைப் பார்த்துக்கிறான். தண்ண[illegible] சிகரெட் எல்லாம் என்னதுன்னே என் பிள்ளைக்குத் தெரி[illegible]து."

அந்த நேரத்தில் [illegible]த்தில்தான், சட்டநாதனுக்குக் கை கொடுத்தான்.

"நீங்க ரொம்பவும் வெ[illegible]ளிப்படையாகப் பேசறீங்க. உங்களை மாதிரி எல்லாரும் [illegible]ந்தா பிரச்சினையே இல்லே.



[illegible]ண்மையிலே அரசி, இப்படிப்பட்டவங்க வீட்டு மருமகளாப் [illegible]றதுக்கு ரொம்பவும் கொடுத்து வச்சிருக்கா. அவளுக்கும் [illegible]ப்பிள்ளையைப் பிடிச்சிருக்கும்னு நினைக்கிறேன். ஆனாலும், [illegible]பொம்பிளை பாருங்க... ஒரு சேலை எடுக்கிறதுன்னாலே, [illegible]லஞ்சு கடை ஏறி இறங்குவீங்க. புருசன் விசயத்துல யோசிக்க, [illegible]கொஞ்சம் அவகாசம் கொடுக்க வேண்டாமா? எதுக்கும் [illegible]ரெண்டு நாள் அவகாசம் கொடுங்களேன்."

காளி, செந்திலை முறைத்துப் பார்த்தான்.

"என்ன தம்பி? பெங்களூர் என்ன பக்கத்துலேயா இருக்கு? ரெண்டு நாள் கழிச்சு, திரும்பி வந்து, தட்டு மாத்த? எங்க செல்வத்தோட படிப்புக்கும், பதவிக்கும் எத்தனையோ பொண்ணுங்க வரிசையில் நிக்கிறாங்க. அவன் பாவம்; வெகுளி. அவனோட அம்மாவுக்குப் பிடிச்சிருக்குன்னு தெரிஞ்சவுடனே தனக்கும் பிடிச்சிருக்கிறதாச் சொல்லிட்டான். ஒரு ஆம்பிளை அவனே..."

அரசி, மெதுவாக– அதேநேரத்தில்– மிகத் தீர்மானமாகக் கூறினாள்:

ஒரு ஆம்பிளைக்கு இன்னிக்குப் பிடிச்ச பொண்ணை நாளைக்குப் பிடிக்கலைன்னா தள்ளிவச்சிட்டு, வேறு கல்யாணம் செஞ்சுக்கலாம். பொம்பளை அப்படியா? ஒரு தடவை கழுத்தை நீட்டினா– நீட்டினதுதான். ரெண்டு நாள் அவகாசம் எடுத்துக்கிறதுனாலே ஒண்ணும் ஆயிடாது."

செல்வத்துக்கு வந்த ஆத்திரத்தில், அக்கணமே, 'சீச்சீ' என எகிறிவிட்டுப போயிருப்பான்.

தன் அம்மா ஏன் இந்தச் சின்னப் பெண்ணின் பேச்சைக் கேட்டுக்கொண்டு, மஞ்சள் தண்ணீர் தெளிக்கக் காத்திருக்கும் பலியாடு மாதிரி நிற்கிறாள் என்பது புரியவில்லை.

வேதாசலத்துக்குக்கூட சவுந்தரத்தின் மவுனம், குழப்பத்தை உண்டுபண்ணியது.

ஆனால், சவுந்தரம் மிகத் தெளிவாக இருந்தாள். அரசியின் பேச்சில், தான் எந்தவிதத்திலும் பாதிக்கப்ப[illegible] போல [illegible]துவது போல அகலமாய் சிரித்தாள்; அப்படியே [illegible] சொன்னாள்:

"காளி... நீ இன்னும் அந்த காலத்துலே இருக்கே. உலகம்

எவ்வளவோ முன்னேறியாச்சு. மேல்நாடு மாதிரி, நம்ம நாட்டுலேயும், பொண்ணுங்க அவங்களுக்குப் பிடிச்ச புருசனைத் தேர்ந்தெடுக்கிறதுக்கு சுதந்திரம் வந்தாச்சு. அந்தப் பொண்ணு படிச்சிருக்கா. அவளுக்குன்னு அபிப்பிராயம் இருக்கும். இப்ப என்ன... ரெண்டு நாளோ, ஒரு வாரமோ– யோசிச்சுப் பதில் சொல்லட்டும். எதுக்கும் தாம்பூலத் தட்டை ஒரு மரியாதைக்காக வாங்கிக்கட்டும். பிடிச்சா, மேலே போகலாம். பிடிக்கும், பிடிக்காமப்போறதுக்கு என்ன இருக்கு?"

'சட்'டென அவள், வெற்றிலைப் பாக்கு, பழங்கள் நிறைந்தத் தட்டை எடுத்து, சொர்ணத்திடம் நீட்ட, அவள், ஏதோ சாவி கொடுத்த பொம்மை போல, அதை வாங்கி வைத்தாள்.

"அப்படியே உங்க தட்டையும் கொடுங்க. சர்க்கரைன்னு சொன்னா வாய் தித்திச்சிடுமா என்ன? பயப்படாமக் கொடுங்க. இதை வச்சு நாங்க பிரச்சினை பண்ணமாட்டோம்."

சவுந்தரம் கொஞ்சம் உரிமையுடன் சொல்ல, சட்டநாதன், மந்திரத்தில் கட்டுண்டவர் போல, தங்கள் பக்கத்துத் தட்டை எடுத்து வேதாசலத்தின் கையில் கொடுக்கிறார்.

அரசியும், செந்திலும் அதிர்ந்துபோய் நிற்க, பெருமாள்சாமி, காளி முகத்தில் திருப்தி கலந்த சிரிப்பு!

## 8

இத்தனைக்குப் பிறகுதான், சட்டநாதன், 'நான் ஏன் இப்படி செஞ்சேன்?' என்று கையைப் பிசைந்தார்.

சொர்ணம் பரம வெகுளியாய், 'இதுல என்ன தப்பு இருக்கு? அந்த அம்மா மனசுல ஒண்ணும் வச்சுக்காமத்தானே பேசினாங்க. அந்தப் பையனும் ரொம்பவும் மரியாதை தெரிஞ்சவனா இருந்தான். இதுமாதிரி ஒரு இடம் கிடைக்கா[illegible]ாம ஏங்கிட்டிருந்தோம்?' என்று சொல்ல–

சட்டநாதன், அதை மறுக்கும் விதத்தில் தலையை அசைத்தார்.



"இதோப்பாரு... நீ வேணுமானா, ஏங்கி இருக்கலாம். அதுல என்னையும் சேர்க்காதே. நான் எங்கேடி என் பொண்ணுக்கு சீக்கிரமே கல்யாணம் செஞ்சுப் பார்க்கணும், அதுவும் இதுமாதிரி பொண்ணுப் பார்க்க வந்தவங்களே பூ வச்சிட்டுப் போகணும்னு ஏங்கினேன்? என் மகளுக்கு இன்னும் விவரமே தெரியலே... சின்னக் குழந்தை அவ. மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வர்றாங்கன்னு சேலையைக் கட்டிக்கச் சொன்னா, 'எந்த நிறம் தனக்கு நல்லாயிருக்கும்?'னு நம்ம செந்திலைக் கேட்கிறாடி அவ. அந்தக் குழந்தை பொண்ணு தலையில குடும்ப பாரத்தைத் தூக்கி வைக்கிறியே... இதுல ஏங்கிட்டிருந்தோம்னு என்னையும் சேர்த்துக்கிறே!"

சொர்ணத்தின் கண்களில் கண்ணீர் தளும்பியது.

மகள், 'குழந்தை' என்று தந்தை சொல்கிறார். தந்தையே ஒன்றுமறியாதப் பச்சைக்குழந்தையாக இருப்பது அவளுக்குத் தானே தெரியும்.

இந்த நல்ல மனசு, மகளின் காதல் விவகாரத்தினால காயப்பட்டுவிடக்கூடாதே என்பதுதானே அவளது கவலை?

"ஆமா... அரசியை எங்கே? அவளோட சம்மதத்தைக் கேட்டியா?"

திடுக்கிட்டாள் சொர்ணம். அரசி, முதல்நாள் இரவு தன் அறைக்குள் போய் புகுந்தவள்தான். இன்னும் வெளியே முகத்தைக் காட்டவில்லை.

இதை வேறு சொன்னால், மனிதர் உருகிப்போய்விட மாட்டாரா?

ஆனாலும், சிறு நம்பிக்கை.

ஒருவேளை, 'அப்பா போய் பேசினால், மகள் மசிந்து வருவாளோ என்று. அதுதான், தினமும் அப்பாவும் பெண்ணும் கட்டிக்கொண்டு இழைகிறார்களே... திருமணம் பற்றிய முடிவையும் அப்பாவே, மகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளட்டுமே!

அதுசரி, இவள் 'பிடிக்கவில்லை' என்று ஒரு வார்த்தையில் தூக்கி எறிந்துவிட்டால், பெற்றவரும் 'ஆகா, சரிதான்' என்று கல்யாணப் பேச்சையே நிறுத்திவிடுவாரே.

மறுபடியும் மாப்பிள்ளை தேட, பெருமாள்சாமியிடம் எந்த முகத்தை வைத்துக்கொண்டு பேசுவது?

அவன் தவியாய் தவித்தான்.

அதேநேரம், செந்திலின் முகமோ அப்படியே வெயிலில் போட்ட பூ மாதிரி வாடிக் கிடந்தது.

மறுநாள் காலையில், சட்டநாதன் நிச்சயம் தன்னை அழைத்து, அரசி என்ன சொன்னாள் என்று விசாரிப்பார், மாப்பிள்ளை எப்படி என்று அபிப்பிராயம் கேட்பார்.

இவன் என்னவென்று சொல்லுவான்?

முதல்நாள், சவுந்தரம் பார்ட்டியை வழியனுப்ப அரசியின் அப்பாவும், அம்மாவும், இன்னும் வந்திருந்த பெரியவர்களும் வாசல் வரை போன நேரத்தில்...

செந்திலின் முதுக்குப் பின்னாலிருந்து, அவனது தோளில் முகம்பதித்தாள், அரசி.

அவன் திடுக்கிட்டு நகர்ந்தான்.

"ஏய்... ஏய்... யாராவது பார்த்தா என்ன ஆகிறது?"

"அப்ப, மாடிக்கு வாங்க. உங்ககூட நான் பேசணும்."

"வேண்டாம்மா. எதுவானாலும் இங்கேயே சொல்லு."

"இங்கேயாவா?"

"ஆமா. இங்கேதான். இனிமே நான் மாடிக்கு வர்றதோ, நீ என் வீட்டுக்கு வர்றதோ கூடாது. அது தப்பு."

"ஏன்?"

"ஏன்னா... அதான், அந்த அம்மா பூ வச்சிட்டுப் போயிட்டாங்க இல்லே. இனிமே அவங்க வீட்டுப் பொண்ணு, நீ. மனசை மாத்திக்க, அரசி."

"அவங்க பூ வச்சா... ஏன், உங்கம்மாகூடத்தான் எத்தனையோ தடவை, தோட்டத்துலப் பூத்த நித்தியமல்லியையும், இருவாட்சியையும் தொடுத்து என் தலையில வச்சிவிட்டிருக்காங்க. ஒரு பண்டிகை, நல்ல நாளுன்னா உங்க வீட்டுப் பலகாரத்தட்டு எங்க வீட்டுக்கும், எங்க வீட்டுல செஞ்சது உங்க வீட்டுக்கும் மாறியிருக்கு. அப்படின்னா நான் உங்க வீட்டு மருமகதானே?"

"........"

"எவளோ ஒருத்தி பெங்களூரிலே இருந்து வந்தாளாம். கூடவே, உளமைச்சாமி மாதிரி ஒரு பையன். அந்த ஆளுக்கு இப்பவே முன்நெத்தியில வழுக்கை. மூடி மூடி வச்சிருக்கான்.



கண்டிப்பா அவன், உங்களைவிடவும் வயசுலப் பெரியவனா இருப்பான். கூடவே, குள்ளநரி மாதிரி ஒரு சிநேகிதன். அவன் பார்வையைப் பார்த்திங்க இல்லே?"

"அரசி... நீ, மனசுல வெறுப்பை வச்சிட்டுப் பார்க்கிறே...

அதான் இப்படியெல்லாம் பேசுறே."

"நான், மனசுல உங்களை வச்சிட்டுப் பேசுறேன். புரியலை? இவனைத்தான் கட்டிக்கணும்னு அப்பா வற்புறுத்தினா, நான் தற்கொலை செஞ்சுக்கமாட்டேன். கட்டின சேலையோடு நேரே உங்க வீட்டுக்கு வந்து உட்கார்ந்துடுவேன். ஆமாம்... இப்பவே சொல்லிட்டேன்."

அவன் பேசவில்லை. இதற்குள் வாசலில் கார்கள் புறப்பட்டு விட்டன. எந்த நேரமும் சட்டநாதனோ, சொர்ணமோ திரும்புவார்கள். அரசியுடன் தான் இத்தனை நெருக்கமாக நிற்பதை அவர்கள் பார்த்தால் என்ன நினைப்பார்கள்?

அவன், பதற்றத்துடன் நகர, அவள் சற்றும் எதிர்பாராவித மாக, அவனது சட்டையின் மேல் பொத்தானை 'வெடுக்'கெனப் பிடுங்கி, கைக்குள் பொத்தி வைத்துக்கொண்டு சிரித்தாள்.

"பதறாதீங்க... உங்க மனசைப் பறிக்கலே. பொத்தானைத்தான் எடுத்து வச்சிருக்கேன். உங்ககிட்ட மனசுவிட்டுப் பேச முடியாததை எல்லாம் இந்தப் பொத்தான்கிட்டப் பேசுவேன். நம்ம ரெண்டு பேருக்கும்தான் கல்யாணம் நடக்கப்போகிறது. உங்க வீட்டுக்குள்ளே, உங்க பொண்டாட்டியா வந்ததும், நானே இந்தப் பொத்தானை, உங்க சட்டையில் வச்சுத் தச்சுத் தர்றேன். சரியா?"

அவன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே இரண்டு படிக்கு ஒரு ஒரு தாவலாய் மாடிக்குப் பறந்தாள், அவள்.

"தம்பி, நம்ம வீட்டுலேயே சாப்பிடலாமே?" –சட்டநாதன் குரல் கொடுக்க–

"நல்லா இருக்கு. அங்கே அவங்க அம்மா மகனுக்காகக் காத்திட்டிருக்கமாட்டாங்களா?" –இப்படி, சொர்ணம் தடுக்க–

மெதுவாக கழன்று வீட்டுக்கு வந்தவன், அப்படியே சோர்ந்து படுக்கையில் விழுந்தான்.

"இந்தாடா... இவனைப் பிடி. அப்பயிருந்து, அரசியைப் பார்க்கப் போவேன்னு ஒரே பிடிவாதம். அழுது அழுது

இப்பத்தான் ஓய்ஞ்சிருக்கான். அப்படியே மேலே போட்டுத் தூங்க வை."

அவன் தாய் மீனாட்சி, முகிலனைத் தூக்கி இவனது மார்பின் மீது போட...

மகனை அணைத்தபடி கிடந்தான், செந்தில். விளக்குகள் அணைந்தபின்பும், இமைகளுக்குள் வெளிச்சமாய் அரசி.

'யப்பா... அவளுக்குத்தான் என் மேல எத்தனை ஆவேசமானக் காதல். இப்படியொரு பொண்ணு, சட்டைப் பொத்தானைப் பிடுங்கி வச்சுக்குமோ?'

'சீச்சீ... குழந்தைடா அவ. என்னவோ உன் மேல இத்தனைப் பிரியத்தை வச்சிட்டா. நீயும் இருக்கியே... ஊமைக் கோட்டான் மாதிரி."

'நான் என்ன செய்ய முடியும்? உங்க பொண்ணை நானே கட்டிக்கிறேன்'னு பெரியவர்கிட்ட சொல்ல முடியுமா?'

'இந்த பிரச்சினையெல்லாம் தீரணும்னா, பேசாம நீ, அந்த கனகலட்சுமியைக் கல்யாணம் செஞ்சுக்கலாம்."

'டேய்... அப்படி ஏதாவது செஞ்சே... அரசி, இப்ப சட்டைப் பொத்தானைத்தான் பிய்ச்சா. அப்புறம் உன்னையே நார்நாராகப் பிய்ச்சுப் போட்டுடுவா."

அவன், அந்த காட்சியைக் கற்பனை செய்து பார்த்தான். அவனையும் மீறி சிரிப்பு வந்தது.

'எமகாதகி...'

தன்னையும் மீறி, தன் மனம் அவளிடம் செல்வதை அவனால் தடுத்து நிறுத்த முடியவில்லை!

மறுநாள், சட்டநாதனைச் சந்திக்கப் பயந்தே, சீக்கிரமாய் வங்கிக்குக் கிளம்பிவிட்டான், செந்தில்.

அன்றைக்கு சனிக்கிழமை. வங்கியில் அலுவல் நேரம் பகல் ஒரு மணி வரையில்தான். ஆனாலும், அங்கே மாலை வரை இருப்பதென்று தீர்மானித்தே புறப்பட்டான்.

வேலை மும்முரத்தில், தன்னை ஈடுபடுத்திக்கொள்ள அவன் படாதபாடுபட்டுக்கொண்டிருக்க...

அந்த நேரம் பார்த்துத்தானா கனகலட்சுமி வரவேண்டும்?

"வணக்கம் செந்தில்."

"வணக்கம்."

"என்ன... வரவர நல்லாவே 'டிரஸ்' பண்ணமாட்டேங்கிறீங்க? கொஞ்ச நாளா தாடி... இப்ப பொத்தான் பிய்ஞ்சுப்போன சட்டை... உங்களை யாரும் கண்டிச்சு சொல்லவோ, அட, அந்த சட்டைப் பொத்தானைத் தச்சுத் தரவோ யாருமே இல்லையா?" "ஓ... இதே சட்டையா... மறந்துபோயிட்டேன்..."

அவன் தடுமாற, அவள் சிரித்தாள்.

"ஆமா... கொளுத்திப் போட்ட பட்டாசு மாதிரி உங்க எதிர்வீட்டுல ஒரு பொண்ணு இருக்குமே... அவ பேரு என்ன... அரசியா?"

"........"

"அவகூட உங்களைப் பார்த்துச் சொல்லலையா? அப்பப்பா... உங்ககூட யார் பேசினாலும் தாங்காதே அவளுக்கு."

செந்தில் சங்கடத்துடன் நெளிந்தான். ஆனாலும், கனகலட்சுமி, அவனை விடுவதாக இல்லை. ஏதோ ஒரு வேலையை சாக்காக வைத்துக்கொண்டு, அவனையே சுற்றிச் சுற்றி வந்தாள்.

அப்பொழுதுதான் அரக்கபரக்க காளியும், பெருமாள்சாமியும் ஓடிவந்தார்கள்.

"பாங்கி நேரம் முடியலையே..."

"இன்னும் பத்து நிமிடம் இருக்கு."

கனகாதான் சொன்னாள். காளி, செந்திலைப் பார்த்ததும் கடுப்பாக முகத்தை வைத்துக்கொண்டு கணவனின் காதருகில் கிசுகிசுத்தாள்.

"இந்தா, அந்த ஆள் பார்த்துகிட்டே இருக்கான். வேற கவுண்ட்டருக்கு போ."

"இருக்கிறதே ரெண்டு 'கவுண்ட்டர்'தான். நீ சித்த சும்மா இருக்கியா?"

பெருமாள்சாமி, அவளை அதட்டிவிட்டு, கனகலட்சுமியிடம் ஒரு காசோலையை நீட்டினான். கூடவே, அந்தக் காசோலையை, காளியின் கணக்கில் 'டெபாசிட்' செய்வதற்கான சீட்டு.

"இது... இன்னிக்குக் கணக்குல போகாதா?"

கனகா, அந்தக் காசோலையை வாங்கிப் புரட்டிப் பார்த்தாள். அவளது புருவம் ஏறி இறங்கியது.

"இது பெங்களூர் 'செக்'. தாமதமா வேற கொண்டு

வந்திருக்கீங்க. திங்கட்கிழமைதான் உங்க கணக்கிலே வந்துசேரும். எப்படியும் ஒரு வாரம்."

பெருமாள்சாமியின் முகம் இருண்டது. காளியிடம் தன்னை மீறி உரத்த குரலில் சொன்னார்:

"உன் பணக்காரத் தங்கச்சி, அவ புத்தியைக் காட்டிட்டா. அப்பவே 'செக்' வேண்டாம்; பணமாகக் கொடுத்திடுங்கன்னு அடிச்சிகிட்டேனே... இதுக்குத்தான் பண்ணை வீட்டுப் பொண்ணு, கல்யாணத்துக்கு சம்மதிக்க ஒரு வாரம் அவகாசம் கொடுத்திருக்காப்பல, உன் தங்கையோடப் பணமும் ஒரு வாரம் கழிச்சுத்தான் நம்ம கணக்குக்கு வந்துசேரும்."

காளி, வாய்பிளந்தாள்.

"அப்படின்னா..."

"அப்படித்தான். இங்கே வாயைப் பிளந்துட்டு நின்னா எப்படி? நட, எல்லாம் வீட்டுக்குப் போய் பேசிக்கலாம்."

பெருமாள்சாமி, மனைவியை அழைத்துக்கொண்டு போவதையே பார்த்துக்கொண்டிருந்த கனகலட்சுமி, அவர் கொடுத்த காசோலையைக் கையில் எடுத்துக்கொண்டு, மீண்டும் செந்திலிடம் வந்தாள்.

"செந்தில்... பெங்களூர் சவுந்திரம்மாவுக்கும், வாத்தியார் பெருமாள்சாமியோடப் பெண்டாட்டி காளிக்கும் என்ன சம்பந்தம்?"

"ஏன் கேட்கிறீங்க?"

"இல்லே... அந்தம்மா, இந்தம்மாவுக்கு ஒரு லட்சம் 'செக்' கொடுத்திருக்காங்க. இந்த வாத்தியார் கல்யாணத் தரகர்னு தெரியும். நிலம், வீடு வாங்கி விற்கிற தொழில் செய்கிறாரோ?"

"யாருக்குத் தெரியும்?"

முதலில் அலட்சியமாகத்தான் சொன்னான், செந்தில். அடுத்த சில நிமிடங்களிலே முதல்நாள், அரசியைப் பெண் பார்க்க வந்த பெங்களூர் கும்பலோடு, பெருமாளும் காளியும் வந்திருந்ததும்... காளி, அவனிடம் கொஞ்சம் கடுமையாகப் பேசியதும் மூளையில் மின்னலடித்தது.

"என்ன தம்பி... பெங்களூர் என்ன பக்கத்துலேயா இருக்கு? ரெண்டு நாள் கழிச்சு, திரும்பி வந்து தட்டு மாத்த? எங்க செல்வத்தோட படிப்புக்கும், பதவிக்கும் எத்தனையோ பொண்ணுங்க வரிசையில் நிக்கிறாங்க...



ஒரு ஆம்பிளை, அவனே..."

தங்கையின் மகனுக்காக, அவள் பரிந்துபேசினாளே? இல்லை, பண்ணையார் வீட்டு ஒரே பெண்ணை அந்த பெங்களூர்க்காரி மகனுக்குக் கட்டிவைப்பதற்காக, பேரம் பேசினாளா?

இந்தப் பணம், அக்காவுக்கு பாசத்துடன் தங்கை கொடுத்தா இல்லை, தரகுக்காக கொடுத்ததா?

ஒரு லட்ச ரூபாயா தரகு?

அவன் மலைத்துப்போய் உட்கார்ந்திருந்தான்.

"உக்கும்..." —கனகலட்சுமிதான் செருமினாள்.

"என்ன பலமான யோசனை?"

"இல்லே கனகா... இவங்ககூட நேத்து, பெங்களூரிலே இருந்து மாப்பிள்ளை வீட்டுக்காரங்க, அரசியைப் பொண்ணு பார்க்க வந்திருந்தாங்க..."

"என்னது... அரசியையா? அப்ப, அவளை நீங்க கல்யாணம் செஞ்சிக்கப்போறதில்லையா? எப்படி உங்களைப் பிரிய சம்மதிச்சா? அதான் அய்யா, இத்தனை சோகமா வந்திருக்கீங்களா?"

செநதில் அவளை நிமிர்ந்து பார்த்துவிட்டுத் தலைகுனிந்தான்.

"ஆபீஸ் நேரத்துல வேண்டாம், கனகா. எல்லாம் அப்புறம் சொல்றேன்."

"வேலை நேரம் முடிஞ்சு, அவங்கவங்க வீட்டுக்குக் கிளம்புறாங்க, செந்தில். அநேகமா நீங்களும், நானும், வாட்ச்மேனும்தான் இருப்போம். இப்ப சொல்லுங்க. என்ன ஆச்சு?"

செந்தில் தயங்கித் தயங்கிச் சொன்னான்:

தன்னைப்பற்றி, அரசியின் கள்ளம் கபடமில்லாத அன்பு பற்றி; என்னதான் உதற முயன்றாலும் காலப்போக்கில் தானும் அவள் மீது வைத்துவிட்டப் பாசம் பற்றி; அரசியின் தாய் சொர்ணத்தின் கவலைப் பற்றி, சட்டநாதனுக்கு காதல் என்றாலே பிடிக்காததன் காரணம் பற்றி... கடைசி கடைசியாக நேற்று, வந்திருந்த மாப்பிள்ளை வீட்டார் பற்றி; அவர்கள் பிடிவாதமாய் பூ வைத்து, தட்டு மாற்றிபோனது பற்றி; அவர்களை அழைத்து வந்ததே இந்த பெருமாள்சாமியும், காளியும்தான் என்பது பற்றி, - அரசி, தன்னிடம் கூறிய வார்த்தைகளைக்கூட மறைக்கவில்லை அவன்.

சொல்வது என்று ஆனவுடன், எதற்காக ஒளிவு மறைவு?

கனகலட்சுமி, கண்கள் பனிக்க உட்கார்ந்துவிட்டாள்.

"சின்னப் பொண்ணா இருந்தாலும், அவ, தன் நிலையில் எவ்வளவு உறுதியா இருக்கா பாருங்க."

"கனகா..."

"ஆமா. நான் உங்களைக் கல்யாணம் செஞ்சிட்டா வாழ்க்கை நல்லா இருக்கும்னு நினைச்சேன். ஆனா, அவ தன்னோட வாழ்க்கையே உங்களைக் கட்டிக்கிறதுலதான் இருக்குன்னு உறுதியா நினைக்கிறா... செந்தில்... பெங்களூரிலே இருந்து வந்த சவுந்தரம்மாவோடப் பையன் பேரென்ன?"

"செல்வம்னு சொன்னாங்க. எதுக்கு கேட்கிறீங்க?"

"என்ன நீங்க... நான், இந்த கிளைக்கு மாற்றலாகி வர்றதுக்கு முந்தி, பெங்களூரிலேதான் வேலை பார்த்துட்டிருந்தேன். அங்கே என்கூட பிரேமான்னு ஒருத்தி வேலை பார்க்கிறா. கல்கத்தாக்காரி. அவளோடக் கணவன் பேரும் செல்வம்தான். இவளுக்கு அவன் மூணாவது புருசன். ஏற்கெனவே, ரெண்டுதரம் ஏமாந்துட்டதாலே, இவளை உடும்புப்பிடியாப் பிடிச்சு வச்சிருக்கா. பெரிய பணக்காரி.

புருசனும் பணக்காரன்தான். ஆனா, அவங்க வீட்டுல சொத்துக்காக இன்னொரு கல்யாணம் கட்டச்சொல்லி, அந்த ஆளை வற்புறுத்துறாங்களாம். தினமும், வேலை நேரத்துல இதைப்பற்றியேதான் பேசிட்டிருப்பா. ஒருவேளை அந்த செல்வமும், இவனும் ஒண்ணா இருந்தா?"

அவள் கேள்விக் கொக்கியைப் போட்டுவிட்டு, விரலைச் சொடுக்கினாள்.

"எதுக்கு சந்தேகம்? அவளோட போன் நம்பர் எனக்குத் தெரியும். பேசிப் பார்த்துட்டாப் போச்சு."

அடுத்த நிமிடமே, கனகா தன் சிநேகிதி பிரேமாவுக்கு போன் போட்டுப் பேச ஆரம்பித்துவிட்டாள்.

"என்ன பிரேமா... எப்படி இருக்கே? வீட்டுக்காரர் எப்படி இருக்கார்?"

"........."

"என்னது... அவங்க அம்மா, அவருக்கு ரெண்டாங் கல்யாணம் செஞ்சு வைக்கப்போறாங்களாமா? நீ என்னடி,



கேட்டுட்டு சும்மாவா உட்கார்ந்திருக்கே? போலீசிலே சொல்ல வேண்டியதுதானே? ஆங்... வெறும் கல்யாணம் மட்டும்தானா... மத்ததெல்லாம்? அட அழாதே... தாலி மட்டும்தான் கட்டுவாராமா? மத்தபடி தொடக்கூட மாட்டாராமா? ஏய், இதை நீ நம்புறியா? அப்படி ஒரு பொண்ணை ஏமாத்துறது பாவமில்லையா? என்ன செய்யுறதா முடிவு? படிச்ச பொண்ணு நீயே இப்படி செய்யலாமா?"

"என்னது... பொண்ணு பார்க்கப் போயிருக்காங்களா? எந்த ஊருன்னு கேட்டுக்கலையா? அசடே... அவங்க நான் இருக்கிற ஊருக்குத்தான் வந்திருக்காங்க. பொண்ணு 'தனதன'ன்னு தக்காளிப் பழமாட்டம் இருக்கும். சின்ன வயசு. பல கோடி பெறுமானமானச் சொத்து இருக்கு."

"........."

"ஏய்... ஏய்... அழாதே... அவசரப்படாதே. இன்னும் அந்தப் பொண்ணு ஏதும் ஒப்புதல் சொல்லலே. சொல்லாது. அதுக்கு ஒரு ஆள் மீது பிடித்தம். 'ஜம்'முனு இருப்பார். என்கூட வேலை பார்த்துட்டிருக்கார். நான்கூட அவர் கிடைப்பாரான்னு ஆசைப்பட்டேன். ஆனா, அந்தப் பொண்ணுக்கு அவர் மேல இருக்கிற அன்பு இருக்கே... அதுக்கு முன்னாடி நானெல்லாம் சும்மா..."

அவள் பேசிக்கொண்டே செந்திலைப் பார்த்துச் சிரித்தாள்.

அவன் அனுமதி இன்றியே தொலைபேசியில் இன்னொன்றையும் சொன்னாள்.

"நானும் மிஸ்டர் செந்திலும் அங்கே [illegible]றோம். அதுவரை செல்வத்துகிட்ட எதையும் கண்டுக்காதே!"

செ[illegible]ல், [illegible]ன் ஆண் என்பதையும் மறந்து அழுதான்.

## 9

வாயெல்லாம் பல்லாக நின்றான், சவுந்தரம்.

வேதாசலத்துக்கு தன் செவிகளையே நம்ப முடியவில்லை:

"நிசமாவா, சட்டநாதனும் அவர் சம்சாரமும் நிச்சயதார்த்தத்

துக்கு நாள் குறிச்சுட்டு, நம்மளை அழைக்க வர்றாங்களா? பொண்ணு சம்மதிச்சிடுச்சா? பின்னே என்ன; கசக்குதாமா? புரோக்கர் மாமா, உண்மையிலே நீங்க பெரிய ஆளுதான் ஒத்துக்கிறேன்."

"ஆமா... செக், காசாகிறதுக்கு ஒரு வாரமாகுமா? அடடே... என்ன நம்ம பாங்கி எல்லாம் இத்தனை மெத்தனமா இருக்கு? நீங்க கவலைபடாதீங்க. பண்ணையோடு நீங்களும், காளியும் வருவீங்க இல்லே? அப்ப ரொக்கமாகவே கையில் கொடுத்துடுறேன். 'செக்'கை என்ன செய்யுறதா? அதுபற்றி அப்புறம் பேசிக்கலாம். ஆமா, நீங்க ரெண்டு பேரும் உடனே வந்துசேருங்க."

பறந்தாள், சவுந்தரம். கூடவே, தன் மகனையும் அழைத்து, கட்டளை போட்டாள்.

"இதோ பாருடா... வந்ததும் வராததுமா அந்த மூதேவியைப் பார்க்க ஓட வேண்டாம். சட்டநாதனும், அவர் சம்சாரமும் வந்துட்டுப் போற வரை வீட்டைவிட்டு நகரக்கூடாது."

"நான் போகலைன்னா, அவ வந்திடுவாம்மா."

"வரட்டுமேடா... வரட்டும்! என்னை என்னன்னு நினைச்சிட்டிருக்கா? அவ மட்டும் வரட்டும்... போலீஸ் கமிஷனர்கிட்ட சொல்லி, அப்படியே உள்ளே தள்ளிடுவேன்."

சவுந்தரம், கொஞ்சம் நிலைகொள்ளாமல்தான் ஆடினாள். அப்படியே, டாக்டர் நாகநாதனை அழைத்து, மேல் மாடியில் இருப்பவளையும் கொஞ்சம் கவனிக்கச் சொல்லவும் மறக்கவில்லை.

"டாக்டர்... கல்யாணம் பேச வரப்போறது, மேல இருக்கிற கிறுக்குப்பிடிச்சவளோட கூடப்பொறந்த அண்ணன். இதுபாட்டுக்கு சினிமாவுல வர்ற மாதிரி பாடி, ஊரைக் கூட்டிடப்போகுது. எப்பவும் போடுற ஊசி மருந்தை, கொஞ்சம் அதிகமாகவே போட்டுடுங்க."

"இதுக்குமேலப் போட்டா, ஒரேயடியாப் போய் சேர்ந்திடுவா. இப்பவே அவ உடம்புல சக்தி இல்லே. செத்து கித்து தொலைச்சா, கொலைப் பழி என் தலையில விழும். அது தேவையா?"



வேதாசலம் குடும்பத்தின் நம்பிக்கைக்குரியவர்தான் டாக்டர். அவர் எகிறினார்.

உடனேயே சவுந்தரம், ஒரு பணப்பெட்டியைத் தூக்கி, அவர்புறம் வீசினாள்.

"அஞ்சு லட்சம் இருக்கு. என்னவோ, கொலையே செய்யாதவர் மாதிரி பேசுறீங்களே... எங்க மச்சினர் கல்யாணத்தின்போது, படுக்கையோடுக் கிடந்த எங்க மாமனாரை ஒரே ஊசியில வழியனுப்பி வைக்கலையா, நீங்க? அதுக்காக, கல்கத்தாவுல வீடு வாங்கித் தரலையா நாங்க? அப்புறம்தான் கல்குண்டு மாதிரி இருந்த எங்க மச்சினருக்கு கொஞ்ச கொஞ்சமா சாப்பாட்டுல மருந்து வச்சு சாய்க்கலையா? அதுக்காக உங்க சம்சாரத்துக்கு அம்பது பவுனும், காரும் தந்து, மாசம் தவறாம அஞ்சாயிரம் தரலையா நாங்க? அதேபோல, என் ஓரகத்தி வயித்துல மூணு மாசம், நாலு மாசம்னு உண்டானப்பவும் கருவறையைக் கழுவிட்டு, அவளை பித்துப்பிடிக்க வச்சு, எங்களுக்கு எத்தனையோ அனுகூலமாக இருந்தீங்க. நாங்களும் நன்றி விசுவாசமாகத்தானே நடந்துகிட்டோம்?"

நாகநாதன் இதைக்கேட்டு, தலைகுனிந்து நின்றார். சவுந்தரம், அவரைக் கிழித்துவிடுவது போலப் பார்த்தாள்.

"நீங்க ஒழுங்கா வைத்தியத் தொழிலைப் பார்த்திருந்தாக்கூட இத்தனை சம்பாதிச்சிருக்க முடியாது. ஏன்னா, நீங்கதான் டாக்டர் படிப்பையே முழுசா முடிக்கலையே... இதை வெளியில சொல்லாம போர்டு மாட்டியிருந்தா– இந்நேரம் கையில காப்பு மாட்டி உங்களை உள்ளே வச்சிருப்பாங்க."

நாகநாதன் தர்மசங்கடத்துடன் அவளைப் பார்த்தார்.

சவுந்தர ல்வது போல, வேதாசலம் குடும்பத்தின் மூலமாகவே அவர் லட்சக்கணக்கில் சம்பாதித்துவிட்டார்.

ஆனால், அந்தப் பணத்தால் தன் மனைவியின் இறப்பையோ, மகனின் குணத்தையோ மாற்ற முடியவில்லை.

நாய் விற்ற காசு குரைக்குமோ இல்லையோ... சவுந்தரத்தின் காசு, மேலும் மேலும் நாகநாதனுக்கு மன சஞ்சலத்தைத்தான் கொடுத்துக்கொண்டிருந்தது.

மகன் ஒரு குடிகாரன்; பெண் பித்தன்.

சவுந்தரம் குடும்பத்தாரிடம் கணவன் கைநீட்டிப் பிழைப்பதை காணச் சகியாமல், அவர் வைத்திருந்த மருந்தைத் தின்றே உயிர் விட்டுவிட்டாள், மனைவி.

இப்போது அவரது மகனை, சவுந்தரம் தனது மருமகளுக்கு விலை பேசப்போகிறாள்.

மகன் இதற்குத் தயார்தான். ஆனால், நாகநாதனுக்குத்தான் நெஞ்சில் எங்கோ வலித்தது.

இத்தனைக்கும் சவுந்தரம் இதற்காக கோடிக்கணக்கில் தருவதாக இருக்கிறாள். தருவாள். ஆனால், அதை வைத்துக் கொண்டு என்ன செய்வது?

சவுந்தரம், மருத்துவரைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

"நல்ல நேரத்துல நீங்க சண்டித்தனம் பண்ணாதீங்க. என் ஓரகத்தியை என்னிக்கோ சாவடிச்சிருக்கலாம். அந்த நேரம் பார்த்து உங்க பெண்டாட்டி செத்துத்தொலைச்சதாலே, உங்களுக்குள் குற்றவுணர்வு அதிகமாயிடுச்சு. விட்டுவச்சிட்டீங்க. அதோடப் பலனை அனுபவிச்சுத்தானே தீரணும். போங்க. போய், அவளுக்கு என்ன பண்ணணுமோ பண்ணுங்க... நான் போய் சமையல் வேலைகளைக் கவனிக்கச் சொல்றேன். அடேய்... யாருடா? மார்க்கெட்டுக்கு சிக்கிரம் வண்டியை எடுத்திட்டுப்போங்க."

சவுந்தரம் எப்பொழுதுமே அப்படித்தான்... இந்தப் பக்கம் 'ஆளை முடிச்சிடுங்க' என்று நாகநாதனிடம் உத்தரவு போட்டுவிட்டு, உட்பக்கம் பார்த்து, 'டேய், ரசத்துல இன்னும் கொஞ்சம் பெருங்காயத்தைக் கிள்ளிப் போடுடா' என்பாள்.

அவளைப் பொறுத்தவரையில் எல்லாம் ஒன்றுதான்.

சட்டநாதன், சொர்ணம் வருவ, முதல்நாளே, பெருமாள்சாமியும், காளியும் சவுந்தரத்தின் வீட்டில் ஆஜராகிவிட்டார்கள்.

"அட, என்ன நீங்க ரெண்டு பேரும் சம்பந்தியோடு வராம முந்தியே வந்துட்டீங்க."

பெருமாள்சாமி, காளியின் முகத்தைப் பார்த்தார். அவள் வெறுப்புடன்சொன்னாள்:



"பணக்காரங்க புத்தியைக் காட்டிட்டாங்க. எங்க ரெண்டு பேரையும் ரெயிலையோ, பஸ்ஸையோ பிடிச்சு முன்னாலே போகச் சொல்லிட்டாங்க. அவரும் இன்னும் ஏழெட்டு பேருமா, தனி வேனிலே வர்றாங்களாம்."

சவுந்தரம், காளியை மனசு வந்து சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

"அதனால என்ன... நீ உன் தங்கை வீட்டுக்குத்தானே வர்றே? வா... வா. எனக்கும் நீங்க ரெண்டு பேரும் வந்தது தெம்பா இருக்கு. அதுசரி, அந்தப் பொண்ணு எப்படி சம்மதிச்சது?"

"அதுதான் ஒரே மர்மமா இருக்கு. பெரிய எடத்துல எல்லாமே காதும் காதும் வச்சாப்பலத்தான். ஏதோ, என் வீட்டுக்காரரைக் கூப்பிட்டுச் சொன்னாங்களே... அதுவே பெரிசு."

இவர்கள் இங்கே பேசிக்கொண்டிருந்த அதேநேரத்தில் இரண்டு கார்கள், ஒரு வேனில் சட்டநாதனின் குடும்பமும், செந்திலும், கனகலட்சுமியும், அரசியும்...

மீனாட்சியும், முகிலனும்கூட...

சட்டநாதன், செந்திலின் தோளில் முகம்புதைத்து விம்மிக்கொண்டிருந்தார். சொர்ணம் தன் கணவரின் முகத்தையே கவலையுடன் பார்த்தாள்.

"தம்பி... இப்படி அழுவறாரே... உடம்புக்கு ஏதாவது ஆகிடப்போகுது..."

"ஒண்ணும் ஆகாது. அழுதாத்தான் அவர் மனப்பாரம் குறையும். அழட்டும்."

இன்னொரு காரில் கனகலட்சுமியின் கையைப் பிடித்தபடி, அரசி.

"அக்கா..."

"என்ன?"

"என்மேல கோபமில்லையே..."

"ச்சீ... என்ன கோபம்? காதலிக்கிறது அவங்கவங்களோட உரிமை. ஆனாலும், உன்னை மாதிரி என்னாலக் காதலிக்க முடியாதும்மா... ஆமா, அப்பாவுக்குத் தெரியுமா?"

"இன்னும் இல்லே. எப்படி சொல்றதுன்னும் தெரியலை. அவருக்குத்தான் காதலே பிடிக்காதே."

"கவலையை விடு. நான் இருக்கேனில்லே."

கனகலட்சுமி, அரசியின் கலைந்த கூந்தலை ஒதுக்கி, கன்னத்தைச் செல்லமாய் தட்டினாள்.

"ஆனாலும், உன் ஆளு பயங்கர புத்திசாலி. எப்படியோ உங்கப்பாகிட்ட பேசி, உன்னையும் கூட்டிட்டு வர ஏற்பாடு செஞ்சிட்டாரே..."

அரசி, பெருமையுடன் சிரித்தாள்.

செந்தில், தன் தந்தை- தாயுடன் பேசிக்கொண்டிருந்ததை அவளும்தானே கேட்டாள்.

"நீங்க... என்ன சொல்றீங்க, தம்பி?"

"அரசியைப் பொண்ணு பார்த்துட்டுப் போனவங்க, பக்கா ஏமாற்றுப் பேர்வழிகள். அந்தப் பையனுக்கு ஏற்கெனவே கல்யாணமாகி பிரேமான்னு பெண்டாட்டியும் இருக்கா."

"........."

"எனக்கே, இன்னிக்கு மத்தியானம்தான் சார் தெரியும். என்னோடு வேலை பார்க்கிற கனகலட்சுமிங்கிற பொண்ணு தான் சொன்னா. கனகா, இதுக்குமுன் பெங்களூரிலேதான் வேலை பார்த்தாப்பல. இந்த மாப்பிள்ளைப் பையன் செல்வத்தோடு மனைவியும் அங்கேதான் வேலை பார்க்கிறா..."

"அப்படியா? ஏய், மாதையா... அந்த வாத்தியாரையும், அவரோட சம்சாரத்தையும் இழுத்துட்டு வா."

சட்டநாதன் அதிர்ச்சியும், ஆத்திரமும் சேர, கழுத்து நரம்புபுடைக்கக் கத்தினார்.

"எல்லாம் இவளாலே வந்தது. என்னமோ பொண்ணு குதிராட்டம் வளர்ந்து கிடக்கிற மாதிரி, என்னை அரிச்சுப் பிடுங்கினா... அந்த வாத்தியார் மேல அப்படியொரு மரியாதை."

சொர்ணம், இந்த வார்த்தைகளைத் தாங்கமாட்டாமல் முகம் சிவக்க அழத் தொடங்கினாள்.



அப்படியும் அவளுள் சின்னதாய் சந்தேகம்.

'ஒருவேளை, அரசி தன்னைவிட்டுப் போய்விடப் போகிறாளே என்ற அச்சத்தில், செந்தில் வேண்டுமென்றே கல்யாணத்தை நிறுத்தப் பார்க்கிறானா?'

அவள், சட்டநாதனையும் மீறிக்கொண்டு, துக்கம் தொண்டையை அடைக்கச் சீறினாள்:

"ஆமா... வாத்தியாரைக் கூப்பிடுங்க. யார் சொல்றது உண்மைன்னு பார்த்துடலாம்."

தன் தாய், செந்திலைச் சந்தேகப்படுவது போலச் சொன்னது தாங்கவில்லை, அரசிக்கு. வரிந்துகட்டிக்கொண்டு சண்டைக்குத் தயாராகிவிட்டாள்.

"இப்ப என்னங்கிறே? இவரு பொய் சொல்றாருங்கிறியா?"

"அம்மா தாயே... உன்கிட்ட வாய் கொடுக்க நான் தயாரா இல்லே."

"அன்னிக்கு வந்த கும்பலைப் பார்த்தவுடனேயே எனக்கு சந்தேகம் தட்டிடுச்சு. அது எப்படி கொஞ்சம்கூட முன் அறிவிப்பு இல்லாம பூ வச்சாங்க? அந்தப் பூவை உன் காதுல வச்சிருக்கணும்."

இடையில் செந்தில்தான் புகுந்து அரசியை அடக்க வேண்டியதாயிற்று.

"அரசி... அம்மாவை அப்படியெல்லாம் பேசக்கூடாது. அவங்க கவலை அவங்களுக்கு. காலாகாலத்துல பொண்ணை ஒரு நல்ல இடத்துல கட்டிக்கொடுக்கணும்னு உங்கம்மா ஆசைப்பட்டதுல தப்பே இல்லே. என்ன... சரியா விசாரிக்காம, வாத்தியாரை முழுசா நம்பிட்டாங்க. அதுதான் தப்பு.

சொர்ணம், சேலைத் தலைப்பால் முகத்தை அழுந்தத் துடைத்தபடி கூறினாள்:

"எதுக்கு நமக்குள்ளே சண்டை? அந்த வாத்தியாரை அழைச்சு விசாரிப்போம்."

செந்தில், மிக நிதானமாய், பொறுமையுடன் எடுத்துச் சொன்னான்.

"அம்மா... முள்ளை முள்ளாலேதான் எடுக்கணும். தாம்பூலம்

மாத்திக்க, பத்திரிகை எழுத எல்லாம் நாள் குறிச்சிட்டோம். அதுக்கு, சம்பந்தி வீட்டுக்காரங் களை நேரிலே அழைக்கணும். அவங்ககிட்டச் சொல்லுங்கன்னு வாத்தியார்கிட்ட தகவல் சொல்லிடுங்க. நாம, பெங்களூருக்குப் போவோம்."

"எதுக்கு? 'வேண்டாம்'னு அந்த வாத்தியார்கிட்டயே சொல்லுறதை விட்டுட்டு, நாம எதுக்கு அந்தப் பொல்லாதவங்க வீட்டுப் படியேறணும்?" –மறுபடியும் அரசி.

"அதானே... என் பொண்ணு சொல்றதுதான் சரி. 'பிடிக்கலே'ன்னு ஒத்தை வார்த்தையிலே சொல்லிட்டு, அந்த வாத்தியாரையும், அவர் சம்சாரத்தையும் ஊரைவிட்டே துரத்துறதை விட்டுட்டு நாம எதுக்கு?"

சட்டநாதன், பெண்ணுக்கு மேல் எகிறினார்.

செந்திலின் முகத்தில் சிரிப்பு.

"அப்பாவும் பொண்ணும் நல்லாத்தான் குதிக்கிறீங்க. அரசி, அப்பாவை விடு. உனக்கு, உன்னோட வீனஸ் தேவதையை நேரில் பார்க்க வேண்டாமா?"

அரசி, துள்ளி நிமிர்ந்தாள். சட்டநாதனும், சொர்ணமும் அப்பாவிகளாய் விழித்தனர்.

"என்னது?"

"ஆமா. அந்தத் தேவதை, இந்த சவுந்தரம்மா வீட்டுலதான் சிறைபட்டிருக்கு. பைத்தியம்கிற பேருலே. ஆனா, பைத்தியமில்லே."

"அப்பா..."

அரசி, அப்பாவின் தோளைப் பிடித்து உலுக்கினாள்.

"அப்பா... அத்தை உசிரோடுதான் இருக்காங்களாம். செத்துப்போகலையாம். அய்யோ அப்பா.... வந்திருந்தவங்க, அத்தையோடப் புகுந்த வீட்டைச் சேர்ந்தவங்க."

சட்டநாதனுக்குப் பேச்சே எழவில்லை.

இப்பொழுதுதான்– பெங்களூருக்கு பெருமாள்சாமியுடன் போனபோது, அறிமுகப்படுத்தப்பட்ட மருத்துவரின் முகம் நினைவுக்கு வந்தது.

'அட... அந்த டாக்டரை கல்கத்தாவில வச்சு இல்லே பார்த்தேன். தங்கச்சியோட வைத்திய செலவுக்காக ஒரு லட்சம் 'செக்' கொடுத்திட்டு... அப்ப கூடவே ஒரு ஒட்டடைக்குச்சி நின்னுதே... நவநீதத்தோட மச்சினர்னு... அதான் இந்த வேதாசலமா?'

'நவநீதம் சாகவில்லையா? கடவுளே, என்ன கொடுமைடா இது?'

அவர் அப்படியே இடிந்துபோய் உட்கார்ந்துவிட்டார். சொர்ணமோ, செந்திலின் கரங்களைப் பிடித்துக்கொண்டு 'ஓ'வென அழத் தொடங்கினாள்.

"எங்க நவநீதம் உயிரோடு இருக்காளா? தம்பி, தெய்வம் மாதிரி சொல்றீங்களே... அவளை நாங்க பார்க்க முடியுமா?"

"அதுக்காகத்தான் சொல்றேம்மா. முதல்லே எதையும் வெளிக்காட்டிக்காம, கல்யாணம் பற்றி பேச வர்றோம்னு அந்த சவுந்தரத்தம்மாள்கிட்ட வாத்தியாரை சொல்லச் சொல்லுங்க. அவங்களை முன்னாடிப் போயிடச் சொல்லுங்க. நம்மகூட வரவேண்டாம். ஏன்னா, நம்மகூட, போலீஸ் படையே வரும். அப்புறம் அங்கே போய், பெங்களூர் போலீஸ்கிட்டயும் புகார் எழுதித் தரணும்."

இதைச் சொன்னவன், அரசியை ஒருமுறை குறும்பாகப் பார்த்துவிட்டுச் சொன்னான்:

"உங்க பொண்ணையும் கூட்டிக்குங்க."

"அவ எதுக்குப்பா?"

"வீட்டுல தனியா விடவேண்டாம். நாம இப்படி போலீசோடு வர்றோம் என்கிற தகவல் கசிஞ்சு, சவுந்தரம்மா ஆள் வச்சு, உங்கப் பொண்ணைக் கடத்திட்டு வரச்சொல்லிட்டா..."

"அய்யோ..."

"ஆனா, உங்க பொண்ணுகிட்ட அதெல்லாம் நடக்காதுன்னு வச்சுக்குங்க. அவ யாரையாவது கடத்தினாத்தான் உண்டு. கனகலட்சுமியும் நம்மகூட வர்றா. உங்க மகளை அவ பத்திரமாப் பார்த்துப்பா."



இதுதான் நடந்தது.

சவுந்தரம்கூட ஏதோ பத்து பேரைத்தான் எதிர்பார்த்திருந்தாள். 'தபதப'வென இருபது, முப்பது பேர்கள். அத்தனையும் போலீஸ். மாற்று உடையில். ஆனாலும், வேதாசலத்துக்குப் பொறிதட்டிவிட்டது. நாகநாதன் அப்படியே நழுவப் பார்த்தார்.

ஆனால், முதலில் பிடிபட்டவர் அவர்தான்.

"மாடியில் எங்கே அடைச்சு வச்சிருக்கே?"

"யாரை?"

'பளார்' என மருத்துவரை இன்ஸ்பெக்டர் அறைந்த அறையில் செல்வம் பயந்து, ஒடுங்கிப்போய்விட்டான்.

அதுவும், கூட்டத்தில் பிரேமா தலை தெரிந்தவுடன், போலீசிடம் வலியவந்து நடந்தவைகளைச் சொல்லிவிடுவதாக ஒப்புக்கொண்டான்.

"சார்... என்னை ஒன்னும் செஞ்சிடாதீங்க. எங்க அம்மாவும் அப்பாவும்தான் இதுக்கெல்லாம் மூலகாரணம். நான், என் மனைவி பிரேமாவை இன்னமும் 'லவ்' பண்ணுறேன் சார்."

கொஞ்ச நேரத்தில் அந்த வீடு அமளிதுமளிப்பட்டது. மாடியிலிருந்து, எலும்பும் தோலுமாய், படுத்த நிலையிலே தூக்கிவரப்பட்ட நவநீதத்தைக் கண்டு, அழுகையில் வெடித்துவிட்டார், சட்டநாதன்.

"இந்தப் பாவியை மன்னிச்சிடும்மா... நீ உயிரோடு இருக்கேங்கிற விவரமே தெரியாம... இவனுங்க சொன்னதை நம்பிட்டு..."

செந்தில்தான் அவரை இப்பொழுதும் ஆசுவாசப் படுத்தினான்.

"சார், உங்க தங்கச்சி நம்மகூடத்தான் வரப்போறாங்க. நீங்க ஆகவேண்டியதைப் பாருங்க. அந்த வாத்தியார், அவரு சம்சாரம் நழுவப் பார்க்கிறாங்க. பிடிச்சு வச்சிருக்கு. புகார் கொடுத்துட்டுக் கிளம்புங்க."

அன்று-

வீட்டில், தன் கையாலே நவநீதத்துக்கு சாத்துக்குடிகளைப் பிழிந்துகொண்டிருந்தார், சட்டநாதன்.

"சேச்சே... வெளியில எங்கே போனாலும் நம்ம வீட்டுக் கதையைத்தான் பேசிக்கிறாங்க, சொர்ணம். சும்மாக் கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தாப்பல. பாவம் அரசி. அவ மனசு என்ன பாடுபடும்?"

"அதெல்லாம் அவ ஒரு பாடும்படலே. கிடந்து உருக வேண்டாம். மாடியிலே முகிலனை வச்சிட்டுக் குதிச்சிட்டிருக்கா. நேத்து சாயந்திரம் அந்த கனகலட்சுமி வந்து ஒரு வார்த்தை சொன்னா."

சட்டநாதன், மனைவியை நிமிர்ந்து பார்த்தார்.

"உன்கிட்டயும் சொன்னாளா? என்கிட்டயும் சொன்னா."

"என்னன்னு?"

"அவளுக்கும் நம்ம செந்திலுக்கும் கல்யாணம் நிச்சயமாகி இருக்காமே... அப்படியா?"

சொர்ணம் முகம் மாறினாள்.

"அப்படியா சொன்னா... என்கிட்ட, 'ஏங்க செந்திலுக்கு என்ன குறைச்சல்? அரசியை ஏன் அவருக்குக் கட்டி வைக்கக்கூடாது'ன்னு கேட்டுட்டு... உங்ககிட்ட இப்படிச் சொல்லி இருக்காளா? என்னை வேவு பார்க்கிறாளா? இருக்கட்டும்."

சொர்ணம் படபடவெனப் பொரிய, சட்டநாதன் சத்தமாய் சிரித்தார்.

"அடி அசடே... உன்கிட்டச் சொன்னதைத்தான் என்கிட்டேயும் சொன்னா. நீ என்ன சொல்றேன்னு பார்க்கத்தான் இப்படி சொன்னேன். அவங்க ரெண்டு பேருக்கும் மனசு பொருந்திப்போச்சுன்னு அவ சொல்லித்தான் எனக்குத் தெரியும்."

நவநீதத்துக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் தெளிவடைய இன்னும் நாளாகும்.

ஆனாலும், அண்ணன் சிரிப்பதே அவளுள் ஆனந்தத்தை



உண்டுபண்ணியது.

அன்று மாலை– செந்திலின் தாயிடம், சட்டநாதன் பேச, செந்தில் முகம் சிவந்து உட்கார்ந்திருக்க, கனகலட்சுமி– செந்திலின் சகோதரி என்கிற உறவில், அரசிக்குப் பூ வைக்க அவளைத் தேடினாள்.

"அரசி... எங்கே இருக்கே?"

"இதோ... அத்தைகிட்ட."

கனகலட்சுமி, நவநீதத்தின் அறைக்குள் எட்டிப் பார்க்க, குழந்தை முகிலனை மடியில் போட்டுக்கொண்டு, செந்திலின் சட்டையில் பொத்தானை வைத்துத் தைத்துக்கொண்டே, அத்தையிடம் சொல்லிக்கொண்டிருந்தாள், அரசி.

"அப்புறம் என்ன ஆச்சு? இவரானா, உங்க அண்ணன்கிட்ட வாய் திறந்து சொல்லவேமாட்டேன்னுட்டாரு. அப்பத்தான் நான் அவர் சட்டைப் பொத்தானைப் பிடுங்கினேன். பாவம், அவருக்கு யாரு தச்சுத் தருவாங்க?"

நவநீதம், பல ஆண்டுக்குப் பின், இன்னொரு காதல் கதையை– ஒரு குழந்தையின் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருக்கிறாள்.

கனகலட்சுமி கண்கள் பனிக்க, மீனாட்சி தன் கையால் தொடுத்த மல்லிகையை அரசியின் தலையில் சூட்டி, அவளை சேர்த்தணைத்தாள்.

"உனக்காக செந்தில் அங்கே காத்துட்டிருக்காரு."

"இருக்கட்டுமே. மடியில குழந்தை. கையில அவரோடச் சட்டை. தச்சு எடுத்துட்டு வர்றேன்னு சொல்லுங்க, அக்கா."

அரசியின் முகத்தில் இப்போதே குடும்பப் பொறுப்பு.

இருக்காதா பின்னே?

**(முடிந்தது)**

VGS LENDING LIBRARY
AMBAT... CHENNAI-53
KINDLY RETU... DAYS

*ராணி லிமிடெட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: அ.மா. சாமி, 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007. அச்சிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.*